

கல்கி
KALKI
19.7.1970
40
காசு





மயக்கும் மோகனக் கண்கள்

காண்போரைக் கிறங்கவைக்கும்
கவர்ச்சிமிக்க கண்கள்!
அதை அவளும் அறிவாள்.
தன் அழகான கண்களை
மேலும் அழகாகவும் துடிப்பாகவும்
தோன்றச் செய்கிறது சிங்கார்
காஜல் கண்மை என்பது
அவளுக்குத் தெரியும். அவள்
அழகுமிகு அருமையான
உணர்வையும் பெறுகிறாள்!
சிங்கார் அவள் கண்களுக்கு அளிக்கும்
பிரமாதமான குளுமை கண்களின்
சோர்வையெல்லாம்போக்கிவிடுகிறது.




தூய பசு நெய்யிலிருந்து
செய்யப்பட்டது.

சிங்கார்

கண்மை

அழகான கண்களுக்கும்,
சிறந்த பார்வைக்கும்.

பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !



நவ-தால்

நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற்சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப்பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற்கேற்ற முறையில் செய்யப்பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்குகிறது. தயாரிப்பவர்கள் : கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடையவர்கள்.

4 அளவுகள் :
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)


Godrej கோத்ரெஜ் எப்போதும் நங்கூரம் மார்க் பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்

கல்கி பொருளடக்கம்

சாதாரண, ஆடி 3 — 1970, ஜூலை 19

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



வாழ்க பல்லாண்டு!

பாரத நாட்டைக் கம்யூனிஸத்திலிருந்து காப்பாற்ற அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்டு வரும் திரு காமராஜ் அவர்களின் 68வது பிறந்த நாளன்று அவரை வாழ்த்துகிறோம். அவரது அறுபதாம் பிறந்த தினத்தன்று, ''என்னைவிட அதிககாலம் நீங்கள் வாழ்ந்து நாட்டுக்குத் தொண்டு புரிந்து வர வேண்டும்'' என்று ராஜாஜி அவர்கள் ஆசி கூறினார்கள். அவரது ஆசி பலித்து திரு காமராஜ் இன்னும் பல்லாண்டு திடகாத்திரத்துடன் வாழ்ந்து நாட்டுக்குச் சேவை செய்து மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 29 □ இதழ் 51

முதல் விரோதி

ஸ்ரீமதி இந்திரா காந்தி தோற்றுவித்துள்ள பேராபத்திலின்றும் இந்தியாவைக் காப்பது எப்படி என்பதைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்க முடியாத நிலையில் இருந்து வருகிறேன். இந்தியாவைக் காக்க முன் வருமாறு ஸ்ரீ காமராஜ் விடுத்த அழைப்புக்கு என்ன பதில் கிடைத்துள்ளது என்பதே என் புத்தியில் கொழுந்து விட்டெரியும் கேள்வியாகும்.

நம் நாட்டு அரசியல் நிலவரத்தைப் பற்றி 'மைலிந்தியா' எழுதுவதாவது:

''இன்றைய நிலைமை படுமோசமானது. தீவிர கம்யூனிஸ்டுகளும், இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் குழி பறிக்கும் துரோகப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். இந்தியாவின் வெளிநாட்டு விவகாரங்களில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கு வளர்ந்து வருகிறது. இந்தத் தேசத்துக்குக் கதிமோட்சமே இல்லையோ என்று எல்லாச் சிந்தனையாளரும் ஆயாசப்படுகின்றனர். காங்கிரஸின் பழைய தலைவர்கள் தீர ஆலோசித்து, 'தேசிய ஜனநாயக அணியைத் தோற்றுவிக்க வேண்டும்' என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

''ஸ்ரீமதி இந்திராகாந்தியின் தலைமையில் நடைபெறும் மத்திய சர்க்காரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காவிடில் சுதந்திரம் பறி போய் விடுவது நிச்சயம். ஜனநாயகத்தையும் ஒழுங்கு முறையுடன் கூடிய சுதந்திரத்தையும் காப்பாற்றுவதற்குத் தம்மைப் பணித்துக் கொண்டுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர வேண்டும். ஸ்ரீமதி இந்திரா காந்தியின் சந்தர்ப்பவாதத்தின் காரணமாக நாளுக்கு நாள் பலாத்காரம், தேசத் துரோகம் ஆகியவற்றில் நம்பிக்கையுள்ள சர்வாதிகார சக்திகளின் வலிமை வளர்ந்து வருகிறது. மேலே குறிப்பிட்ட ஜனநாயக முன்னணியானது இந்தச் சக்திகளை எதிர்த்துப் போரிட வேண்டுமென்று பழைய காங்கிரஸ் உணர்ந்திருப்பது காரிருளில் ஓர் ஒளியாகும். சில்லறை வேற்றுமைகளைக் கைவிட்டு, கருத் தொற்றுமையுள்ள பிற கட்சிகளுடன் சேர்ந்து ஸ்ரீ காமராஜ் கோரியபடி ஜனநாயகத்தையும் இந்தியாவையும் காக்க எல்லாக் கட்சிகளும் முற்பட வேண்டும். ஸ்ரீ காமராஜும் அவரது பழைய காங்கிரஸ் சகாக்களும் இப்பணியை நடத்தி வைப்பார்களானால் இந்தியாவின் ரட்சகர்கள் என்ற வரலாற்றுப் புகழ் அவர்களுக்குக் கிடைக்கும்.''

ஸ்ரீ காமராஜ் வற்புறுத்தியதன்பேரில் பழைய பெரிய சென்னை ராஜதானியின் முதன் மந்திரிப் பொறுப்பை 1952ம் ஆண்டில் நான் ஏற்றுக் கொண்டேன். அப்போது திராவிடக் கழகத்தினர், தி. மு. க, ஆந்திர தீவிரவாதிகள், கம்யூனிஸ்டுகள் ஆகியோரின் எதிர்ப்பை நான் சமாளிக்க வேண்டியிருந்தது. வகுப்புவாதிகளின் எதிர்ப்பு பலமுள்ளதாகவே இருந்தது. எனினும் நிலைமையை உள்ளபடி மதிப்பிட்டு நூற்றுக்கு நூறு முழு உண்மையைச் சட்டசபையில் தெளிவாக எடுத்துச் சொன்னேன். ''வகுப்புவாதக் கட்சிகளின் எதிர்ப்பை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் கம்யூனிஸ்டுகள் என் முதல் விரோதி'' என்றேன். என் விரோதி என்றால் அரசாங்கத்தின் விரோதி என்று தான் பொருள். கம்யூனிஸ்டுகள் இன்னமும் இந்தியாவின் முதல் விரோதிகளாகத் தான் இருந்து வருகின்றனர். அவர்களது உதவியுடன் ஸ்ரீமதி இந்திரா காந்தி அதிகாரம் செலுத்துவது தேசத்துக்கு மிகப் பெரிய அபாயம். 1952ல் இருந்ததைவிட இப்பொழுது கம்யூனிஸ்ட் பேரபாயம் மிகப் பெரிதாக வளர்ந்து விட்டது. தெரிந்தும் தெரியாமலும் இந்தியாவில் ஜனநாயகத்துக்கு முடிவு கட்டி அந்நிய கம்யூனிஸ்ட் வல்லரசுகளிடம் நாட்டை ஒப்படைக்க அவர்கள் பாடுபட்டு வருகின்றனர். இந்தப் பயங்கர அபாயத்தைத் தடுத்து நிறுத்த எந்தத் தியாகமும் பெரிதாகாது.

(''ஸ்வராஜ்யா''வில் ராஜாஜி எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

யூனியன் மந்திரி சபையில் ஸ்ரீமதி இந்திரா காந்தி செய்துள்ள மாறுதல்கள் அவரது யதேச்சாதிகாரப் போக்கைக் காட்டுகின்றன என்று மதிப்புக்குரிய ஸ்ரீ கிருபளானி கூறியிருப்பது நியாயமே. எனினும் தேசத்தின் சட்ட—ஒழுங்கு நிலைமையை ஸ்ரீ சவான் நிர்வகித்த விதத்தைக் குறித்துப் பிரதமருக்கு அதிருப்தி ஏற்பட்டதில் யாரும் குறை சொல்ல முடியாது. ஆயினும் பிரதமரே இவ்விலாகாவில் நேர் பொறுப்பு எடுத்துக் கொண்டதால் நிலைமை திருந்தி விடுமா என்பது சந்தேகமே.

மந்திரிகளுக்கு இலாகாப் பொறுப்பை மாற்றுவதற்கும் அல்லது அவர்களை விலக்குவதற்கும் பிரதமர் அதிகாரம் பெற்றிருக்கிறார். இதை ஆட்சேபிப்பது, சம்பந்தப்பட்ட மந்திரிகளின் தன்மான உணர்ச்சியைப் பொறுத்தது. இவ்விஷயத்தில் பொது மக்களோ, அல்லது எதிர்க் கட்சித் தலைவர்களோ தங்களுக்கு உதவி புரிவார்கள் என மந்திரிகள் எதிர்பார்ப்பதற்கில்லை. ஏதோ ஒரு பதவி கொடுக்கப்பட்டது என்பதில் மகிழ்ச்சியுடையவர்களுக்கு வெளி மனிதர்கள் உதவி புரிவதற்கில்லை.

★

'ஹிம்மத்' பத்திரிகையில் ஸ்ரீமதி காந்தியைப் பற்றி மிக நெருக்கமான ஒருவர் ஒரு சொல்லோவியம் தீட்டியிருக்கிறார். ''தைரியந்தான் தேவை; மற்றவை எல்லாம் அதைப் பின் தொடரும்'' என்று ஜவாஹர்லால்ஜி ஸ்ரீமதி காந்தியிடம் சொன்னதாக அதில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தத் தகவல் உண்மைதானா, எந்தச் சூழ்நிலையில் இந்தப் புத்திமதி வழங்கப்பட்டது என்பதை நாம் அறியோம். தமது புதல்வி பிரதம மந்திரிப் பதவியைப் பெற வேண்டுமென்று நிச்சயமாக ஜவாஹர்லால்ஜி உத்தேசித்திருக்கமாட்டார். அது ஒருபுறமிருக்க, தைரியம் என்றால் என்ன பொருள்? நோக்கம் நிறைவேறுவதற்காக நீதி நெறிகளைக் கைவிடுவது தைரியமாகுமா? மிகச் சிறந்த வகையில் வெளிப்படுகின்ற அச்சமின்மைக்குத்தான் தைரியம் என்று பொருள்.

★

உணவையும் குடிநீரையும் போலத்தான் செல்வமும். பகுத்தறிவுடன் பயன்படுத்தினால் சம்பாதிப்போருக்குச் செல்வம் வாழ்வு அளிக்கும். உணவு, பானம் ஆகியவை போலவே செல்வ விஷயத்திலும் ஆசைக்கு இடம் கொடுத்து அத்துமீறக் கூடாது. மிதமிஞ்சிய ஆசைகளைத் திருப்தி செய்துகொள்வது காரணமாகத்தான் பொருளீட்டலுக்குக் கெட்டபெயர் ஏற்படுகிறது. தான் மேம்படுவதற்குப் பதிலாகத் தன்னைப் பெருமைப் படுத்திக் கொள்வதற்குச் செல்வத்தை உபயோகிப்பதுதான் அதிகமாக இருந்து வருகிறது. தவறான வழியில், படாடோபமாகச் செல்வத்தைப் பயன்படுத்துவது வீழ்ச்சியில்தான் கொண்டு போய் விடும். இதைத் தவிர்க்க வேண்டும். ஆனால் இதற்காகப் பொருளீட்டுவது என்பதையே மட்டந்தட்டக் கூடாது; அதற்குக் குந்தகம் விளைவிக்கவும் கூடாது.

இந்த உலகில் சாமர்த்தியம், யோக்கியதை, மனப்பாங்கு ஆகியவை மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன. எனவே தனி நபர் பொருளீட்டுவது நாகரிகத்தின் அம்சமாகி விட்டது. நல்ல உள்ளம் உள்ளவனிடம் செல்வம் சேர்ந்தால் சமுதாயம் அனைத்துமே மகிழ்ச்சி அடைகிறது. இது மழை பெய்து ஏரி நிறைகின்றபோதும், ஒரு கிராமத்தில் ஒரு மரம் பழுத்துக் குலுங்குகின்றபோதும் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் போன்றது என்பது குறள் வாக்கு.

ஊருணி நீர்நிறைந்தற்றே உலகு அவாம்
பேர் அறிவாளன் திரு

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் - செல்வம்
நயனுடையான் கண்படின்

வருந்துகிறோம்

கர்நாடக சங்கீதத்தின் லட்சண லட்சிய வித்வானாக அரை நூற்றாண்டுகளுக்கு மேல் இசைத் தொண்டு புரிந்து வந்த வயலின் விற்பன்னர் வரகூர் ஸ்ரீ முத்துஸ்வாமி அய்யர் அவர்களின் மறைவு குறித்து மிக வருந்துகிறோம். காரூர் சின்னஸ்வாமி அய்யரிடம் சிட்சை பெற்ற இவர் பிரபல வித்வான்கள் பலருக்குப் பக்கவாத்தியம் வாசித்திருக்கிறார். மியூசிக் அகாடெமி, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் இவற்றால் கௌரவிக்கப் பட்ட நிபுணர்.




ஸ்ரீ முத்துஸ்வாமி அய்யர்

இசையுலகுக்கு ஏற்பட்டுள்ள இன்னோர் இழப்பு ஸ்ரீ டி. வி. நமசிவாயம் அவர்களின் மறைவாகும். திருவையாறு ராஜா சங்கீதக் கல்லூரி முதல்வராக இருந்த அவர், புல்லாங்குழல் மகா வித்வான் ஸ்ரீ திருப்பாம்பரம் சுவாமிநாதப் பிள்ளையின் சீடர். இதமான சாரீரத்தில், பதமான பத்ததியில், நயமாகப்பாடி ரசிகர்களை மகிழ்வித்த இக்கலைஞர் இள வயதில் காலகதி அடைந்தது மிகவும் விசனத்துக்குரியது.



ஸ்ரீ டி. வி. நமசிவாயம்





ஆனைக்காவில் ஆனந்த விழா

அடியார்களை ஆனந்த முழுக்காட்டுபவனும் அனவரதமும் காவிரியில் முழுக்காடுபவனு மான, அகிலாண்டேசுவரி சமேத ஜம்புநாத சுவாமி இம்மாதம் 5ந் தேதி கோலாகலமாகக் குடமுழுக்குக் கொண்டனன். அறுபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு திருவானைக்கா ஆலயத் தில் நடைபெற்ற இந்த மகா கும்பாபிஷேக மகோத்சவம் லட்சோப லட்சம் மக்களைக் கவர்ந்திழுத்தது. ஏழாண்டுகளுக்கு முன்பு இத் திருப்பணியை ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காம கோடி ஆசாரியர்கள் தொடங்கி வைத்ததற் குப் பொருத்தமாகக் கும்பாபிஷேகப் பூர்த்தி விழாவில் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள். பதினைந்து லட்சம் ரூபாய் செலவில் சிறப்புற நிறைவேறிய இத் திருப்பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்த ஸ்ரீ டி. எம். நாராயணசுவாமி பிள்ளையவர் களும், மற்ற திருப்பணிக் குழுவினரும் மக் களின் ஒருமுகமான பாராட்டினைப் பெற்ற னர். கும்பாபிஷேகம் கொண்ட அகிலாண்ட நாயகி — அப்புலிங்கன் உலகெலாம் குளிர அருளுவராக! —படங்கள்: ஆர். பி. எஸ். மணி

முதலியாருக்குப் பாராட்டு



நமது மூதறிஞர் டாக்டர் ஏ. லட்சுமண சுவாமி முதலியார் அவர்களுக்கு ஸ்விட்ஸர் லாந்து நாட்டின் ''லியோ பர்னார்டு மெடல்'' வழங்கப்பட்டுள்ளது. உலகிலேயே, மருத்துவ நிபுணர்களிடை பெரிதாகப் போற்றப்படும் ஒரு சிறப்புப் பட்டம் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களுக்குக் கிடைத்ததில் நாம் ஒவ்வொருவரும் பெருமையடைகிறோம்.

திரு லட்சுமணசுவாமி முதலியார் பேறு கால மருத்துவத் துறையில் சிறப்பாக நடத்தியுள்ள ஆராய்ச்சிகளும் வெளியீடு களும் உலக வைத்தியர்கள் போற்றும் ஒன்று கும். அதோடு கல்வித் துறையிலும், நிர் வாகத் துறையிலும், ராஜதந்திரத் துறையி லும் அவர் செய்துள்ள சேவை மகத்தானது.

''லீக் ஆப் நேஷன்ஸ்'' என்ற உலக ஸ்தாபனத்தை நிறுவியவர்களில் ஒருவர் லியோ பர்னார்டு. அவர் உலக மக்களின் ஆரோக்கியத்துக்காகப் பெரிதும் உழைத் தார். அவரது ஞாபகார்த்தமாக நிறுவப் பட்டது இந்த லியோ பெர்னார்டு மெடல்.


இயற்கையான அழகுடன் திகழ
ஆஷா
அழகு சாதனங்கள்
Asha



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

ஒன்பதாம் அத்தியாயம்

நாய் குரைத்தது!

மணிமேகலை வந்தியத் தேவனுடைய] 'முகத்தைப் பார்த்த வண்ணம் நின்றாள்.

வந்தியத் தேவனும் புன்னகை புரிந்தவண்ணம் நின்றான். இந்தப் பெண்ணிடம் என்ன சொல்லி விட்டு, எப்படித் தப்பிச் செல்வது என்று அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

இச்சமயம் எங்கேயோ தூரத்திலிருந்து ஒரு குரல், "அம்மா! என்னை அழைத்தீர்களா?" என்று கேட்டது.

"இல்லையடி, உன் வேலையைப் பார்!" என்றாள் மணிமேகலை. உடனே அவளுடைய திகைப்பு நீங்கியது.

சற்று முன் வந்தியத் தேவன் புகுந்து வந்த துவாரத்தின் அருகில் சென்று உள்பக்கத்துத் தாழை இட்டாள். பின்னர் வந்தியத் தேவனுக்குச் சமிக்ஞை காட்டி அந்த அறையிலேயே சற்றுத் தூரமாக அழைத்துச் சென்றாள். சட்டென்று திரும்பி நின்று "ஐயா! உண்மையைச் சொல்லும்! சந்திரமதி உம்மை அழைத்ததாகக் கூறினீரே? அது நிஜமா?" என்று கேட்டாள்.

"ஆம், அம்மணி!"

"எப்போது, எங்கே பார்த்து உம்மை அழைத்தாள்?"

"சற்று முன்னால்தான்! அடுத்த அறையில் நான் குரங்கின் பின்னால் மறைந்து நின்றபோது நீங்கள் இருவரும் வந்து பார்த்து விட்டுத் திரும்பினீர்கள். நீங்கள் திரும்பிய பிறகு அவள் என்னைப் பார்த்து, 'குரங்கே! நீ என்னுடைய அறைக்கு வந்து இருக்கிறாயா? வேண்டாத சமயத்தில் வருகிறவர்களைப் பயமுறுத்தி அனுப்பச் சௌகரியமாக இருக்கும்!' என்றாள். அது தங்கள் காதில் விழவில்லை போலிருக்கிறது!"

மணிமேகலை இளநகை புரிந்தவண்ணமாக "காதில் விழுந்திருந்தால் அவளைச் சும்மா விட்டிருப்பேனா?" என்றாள்.

"இளவரசி! தங்கள் தோழி பேரில் கோபிப்பதில் பயன் என்ன? என் முகமும் வாலில்லாக் குரங்கின் முகமும் ஒன்றுபோலிருந்தால் அதற்குச் சந்திரமதி என்ன செய்வாள்?"

"உமது முகத்துக்கும் வாலில்லாக் குரங்கின் முகத்துக்கும் வெகு தூரம்!"

"குரங்கின் முகத்துக்கும் அதற்கு மேலே தொங்கிய ஆந்தையின்

முகத்துக்கும் உள்ள தூரம் போலிருக்கிறது.''

''உமது முகம் குரங்கின் முகமும் அல்ல; ஆந்தையின் முகமும் அல்ல. ஆனால் குரங்கின் சேஷ்டை யெல்லாம் உம்மிடம் இருக்கிறது. சில சமயம் ஆந்தையைப் போலவும் விழிக்கிறீர். சற்று முன்னால் இதோ இந்தக் கண்ணாடியில் எட்டிப்பார்த்து விழித்தது நீர்தானே?''

''ஆம், இளவரசி. நான்தான்!''

''எதற்காக உடனே பின்வாங்கிக் கதவைச் சாத்திக் கொண்டீர்?''

''இந்தக் கண்ணாடியில் என் முகத்துக்கு அருகில் ஒரு தேவகன்னிகையின் முகம்போலத் தெரிந்தது. அந்தத்தேவ கன்னிகை என் முகத்தைப் பார்த்துப் பயந்து கொள்ளப் போகிறாளே என்று நான் பிடித்திருந்த யானைத் தந்தத்திலிருந்து கையை எடுத்தேன். கதவு தானாகவே சாத்திக் கொண்டது.''

''அந்தத் தேவகன்னிகை யார் என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''அந்த க்ஷணம் எனக்குத் தெரியவில்லை. பிறகு நினைத்துப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்.''

''என்ன தெரிந்து கொண்டீர்?''

''நான் பார்த்தது தேவ கன்னிகை அல்ல; தேவ கன்னிகைகள் ஓடி வந்து அடி பணிவதற்குரிய மணிமேகலாதேவி; கடம்பூர் சம்புவரையரின் செல்வக் குமாரி என்று தெரிந்து கொண்டேன். என்னுடைய ஆருயிர் நண்பன் கந்தமாறனுடைய அருமைத் தங்கை என்பதும் நினைவுக்கு வந்தது.''


மணிமேகலையின் புருவங்கள் நெறிந்தன. ஏளனமும் கோபமும் கலந்த புன்சிரிப்புடன், ''அப்படியா? என் அருமைத் தமையன் கந்தமாறன் தங்களுடைய ஆருயிர் நண்பனா?'' என்றாள்.

''அதில் என்ன சந்தேகம், இளவரசி! நாலு மாதங்களுக்கு முன்னால் நான் இங்கு ஒரு நாள் வந்திருந்தது நினைவில்லையா? அந்தப்புரத்துக்குக்கூட வந்து தாய்மார்களுக்கு வணக்கம் செலுத்தினேனே? அது ஞாபகம் இல்லையா?''

''நன்றாய் ஞாபகம் இருக்கிறது. அதற்குள் மறந்து விடுமா? அந்த வல்லவரையர் வந்தியத்தேவர் என்னும் வாணர் குலத்து இளவரசர் தாங்கள் தானா?''

''ஆம், இளவரசி! தங்குவதற்கு அரண்மனையும், ஆளுவதற்கு இராஜ்யமும் இல்லாமல், 'அரையன்' என்ற குலப் பெயரை மட்டும் தாங்கிக்கொண்டிருக்கும் அந்த ஏழை நான்தான்! ஒரு காலத்தில் தங்கள் தமையன் என்னிடம் தங்களைப் பற்றி எவ்வளவோ சொல்லியதுண்டு. ஒரு காலத்தில் நானும் கந்தமாறனும் வடபெண்ணை நதிக் கரையில் காவல் செய்து கொண்டிருந்தபோது தங்களைப்பற்றி அடிக்கடி சொல்லுவான். நானும் ஏதேதோ கனவு கண்டு கொண்டிருந்தேன். பிறகு அந்த எண்ணத்தை மறந்து விட்டேன்.''

மணிமேகலையின் உள்ளத்தில் ஓர் அதிசயமான எண்ணம் ஒன்று தோன்றியது. இவன் தன்னைக் குத்திக் கொல்ல முயன்றதாகக் கந்தமாறன் கூறினான்.



அது எதற்காக இருக்கும்? ஒருவேளை தன்னைப்பற்றியதாகவே இருக்குமோ? தன்னை இவனுக்கு மணம் செய்து கொடுக்கப் போவதில்லை என்று சொன்னதற்காகக் கந்தமாறனுடன் சண்டையிட்டிருப்பானோ? — இந்த எண்ணம் அவள் உள்ளத்தில் இன்பப் புயலை உண்டாக்கியது.

அதை அவள் கோபப் புயலாக மாற்றிக் கொண்டாள்.

''ஐயா! அந்தப் பழைய கதையெல்லாம் இப்போது வேண்டாம். இந்த அரண்மனையில் நீர் கள்ளத்தனமாகப் புகுந்ததின் காரணத்தைச் சொல்லும். இல்லாவிடில் உடனே என் தோழியை அழைத்து என் தந்தைக்குச் சொல்லி அனுப்ப வேண்டும்'' என்றாள்.

''இளவரசி! நான் இங்கு வந்த காரணத்தை முன்னமே சொன்னேனே? சில கொலைகாரர்கள் என்னைக் கொல்லுவதற்காகத் துரத்திக் கொண்டு வந்தார்கள். அவர்களிடமிருந்து தப்பி ஓடிவந்தபோது பூமியில் ஒரு துவாரம் தெரிந்தது. அது ஏதோ இரகசியப் பாதை என்று அறிந்து கொண்டேன். அதன் வழியாக ஓடித் தப்பிக்கலாம் என்று வந்தபோது அவ்வழி இங்கே கொண்டு வந்து சேர்த்தது.''

''ஐயா! சுத்த வீரர் என்றால் உமக்கே தகும். நானும் எத்தனையோ அசகாய சூரர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் உம்மைப்போல் ஓட்டத்தில் சூரனைப் பற்றிக் கேட்டதில்லை. உத்தர குமாரன் உம்மிடம் பிச்சை வாங்க வேண்டியதுதான்!''



வந்தியத்தேவன் மனத்தில் சுரீர் என்றது. தான் அசட்டுப் பெண் என்று நினைத்த மணிமேகலை இப்படித் தன்னைக் குத்திக் காட்டும்படி ஆகி விட்டதல்லவா?

''தேவி! அவர்கள் ஏழெட்டுப் பேர். நான் ஒருவன். அவர்கள் ஆயுத பாணிகள். என்னிடம் ஆயுதமே இல்லை. என்னுடைய அருமை வேல் கொள்ளிடத்து வெள்ளத்தில் போய்விட்டது.''

''ரொம்ப நல்லது. அந்தப் படுபாதக வேல், சிநேகிதனைப் பின்னாலிருந்து குத்திக் கொல்லும் வேல், ஆற்றோடு போனதே நல்லது!''

வந்தியத் தேவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் பதில் சொல்ல வாயெடுப்பதற்குள் மணிமேகலை ''உண்மையைக் கூறிவிடும். கொலைகாரர்களிடமிருந்து தப்புவதற்காக ஓடி வந்தீரா? கொலை செய்வதற்காக இங்கு வந்தீரா?'' என்று கேட்டாள்.

வந்தியத்தேவன் தீயில் காலை வைத்தவனைப் போல் துடித்து, ''சிவ சிவா! நாராயணா! நான் யாரைக் கொலை செய்வதற்காக இங்கே வரவேணும்? என் ஆருயிர் சிநேகிதரின் அருமைத் தங்கையையா? எதற்காக?'' என்றான்.

''நான் என்ன கண்டேன்? 'அருமைச் சிநேகிதன்' என்று வாய் கூசாமல் பொய் சொல்லுகிறீரே? அப்பேர்ப்பட்ட அருமைச் சிநேகிதனின் பின்னாலிருந்து முதுகிலே குத்திக் கொல்லுவதற்கு நீர் முயலவில்லையா? அது எதற்காகவோ, அதே காரணத்துக்காக இங்கே யாரையேனும் கொலை செய்வதற்கு நீர் வந்திருக்கலாம்.''

''கடவுளே! இது என்ன வீண் பழி? நானா கந்தமாறனின் முதுகில் குத்தினேன்? அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வதற்கு முன்னால் என் கையை வெட்டிக் கொண்டிருப்பேனே? இளவரசி! இத்தகைய படுபாதகமான பொய்யைத் தங்களிடம் யார் கூறினார்கள்?''

''என் அண்ணனே கூறினான். வேறு யாராவது கூறியிருந்தால் நான் நம்பியிருக்க மாட்டேன்.''

''கந்தமாறனா இப்படிக் கூறினான்? அப்படியானால் நான் உண்மையில் துர்ப்பாக்கியசாலிதான்! யாரோ அவனை முதுகிலே குத்தித் தஞ்சாவூர் மதில் சுவருக்கு அருகில் போட்டிருந்தார்கள். மூர்ச்சையாகிக் கிடந்த அவனை நான் தூக்கிக் கொண்டு போய்ச் சேந்தன் அமுதன் குடிசையில் சேர்த்துக் காப்பாற்றினேன். அதற்கு எனக்குக் கிடைத்த வெகுமதியா இது? இளவரசி! எதற்காக அவனை நான் கொல்ல முயன்றேனாம்? ஏதாவது காரணம் சொன்னானா?''

''சொன்னான், சொன்னான்! நீர் என் அழகைப் பழித்து அவலட்சணம் பிடித்தவள் என்று இகழ்ந்தீராம். தஞ்சாவூர்ப் பெண்கள் என்னைவிட அழகிகள் என்று சொன்னீராம். அதனால் கந்தமாறன் கோபம் கொண்டு உம்மை நன்றாய்ப் புடைத்தானாம். நேருக்கு நேர் சண்டையிடக் கையினாலாகாமல் பின்னாலிருந்து அவனைக் குத்தி விட்டீராம்! இதெல்லாம் உண்மையா, இல்லையா?''

''பொய்! பொய்! பயங்கரமான பொய். தங்களை அவலட்சணம் என்று சொல்வதற்கு முன்னால் என் நாக்கையே துண்டித்துக் கொண்டிருப்பேனே? கந்தமாறன் அல்லவா அவனுடைய சகோதரியை நான் மறந்துவிடவேண்டும் என்று வற்புறுத்தினான்.''

''எதற்காக?''

''இராஜ்யம் ஆளும் பேரரசர்கள் தங்களை மணந்துகொள்ளக் காத்திருப்பதால் தங்களை நான் மறந்துவிடவேண்டுமென்று வற்புறுத்தினான்.''

''நீரும் என்னை அடியோடு மறந்து விட்டீராக்கும்?''

''என்னால் அடியோடு மறக்க முடியவில்லை. ஆனால் அதுமுதல் தங்களை என் அருமைச் சகோதரியாகக் கருதத் தொடங்கினேன். இளவரசி! உடனே கந்தமாறனிடம் என்னை அழைத்துப் போங்கள்! அல்லது அவனை இங்கே அழையுங்கள். ஏன் இத்தகைய பெரும் பொய்யை அவன் சொன்னான் என்றாவது தெரிந்து கொள்கிறேன். அல்லது உண்மையிலேயே அவன் அப்படி எண்ணிக் கொண்டிருந்தால், அந்தத் தப்பெண்ணத்தைப் போக்குகிறேன்...''

''தஞ்சாவூரில் ஆரம்பித்த காரியத்தை இங்கே பூர்த்தி செய்துவிடலாம் என்று வந்தீராக்கும்...''

''அப்படி என்றால்...''

''அங்கே அவனைக் கொல்ல முயன்றீர்; அந்த முயற்சி பலிக்கவில்லை...''

''கடவுளே! கந்தமாறனைக் கொல்லுவதற்கு அவனுடைய அரண்மனையைத் தேடியா வருவேன்?''


''இரகசிய வழியாக வந்தது வேறு எதற்காக?''

''அதோ, உற்றுக் கேளுங்கள்! என்னைக் கொல்ல வந்தவர்கள் அடுத்த அறையில் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் நடமாடும் சத்தமும் பேசும் குரல்களும் கேட்கவில்லையா?''

''அவர்கள் எதற்காக உம்மைக் கொல்ல வரவேணும்?''

''அவர்களைப் பார்த்தால் மந்திரவாதிகள் போலிருக்கிறது. ஒருவேளை





படத்தில் இடதுபுறம் ஒரு ஜாடியும் வலதுபுறம் ஒரு ஜாடியும் பார்க்கிறீர்கள். இவற்றில் அதிக மதிப்பு வாய்ந்தது எது? யோசித்துவிட்டு 16ம் பக்கம் பார்க்கவும்.

நரபலி கொடுக்கும் கூட்டமாக இருக்கலாம்...''

''சகல இலட்சணங்களும் பொருந்திய இராஜகுமாரனுகிய உம்மை அதற்காகப் 'பிடித்தார்கள் போலிருக்கிறது'' என்று கூறி மணிமேகலை சிரித்தாள்.

''அதுதான் எனக்கும் அதிசயமாக இருக்கிறது. இந்த ஆந்தை விழி விழிக்கும் குரங்கு மூஞ்சிக்காரனை அவர்கள் எதற்காகப் பிடிக்க வந்தார்கள் என்று தெரியவில்லை. உங்கள் பேச்சைக் கேட்ட பிறகு ஒரு சந்தேகம் உதிக்கிறது. ஒரு வேளை என் நண்பன் கந்தமாறனே இப்படிப்பட்ட ஏற்பாடு செய்திருப்பானே என்று. அவனிடம் என்னை உடனே அழைத்துச் செல்லுங்கள்! ஒன்று, அவனுடைய தப்பபிப்பிராயத்தைப் போக்கிக்கொள்ளட்டும்; இல்லாவிட்டால், என்னை அவன் கையினாலேயே கொன்று விடட்டும். கொலைகாரர்களை எதற்காக ஏவவேண்டும்? அம்மணி! உடனே கந்தமாறனை அழைத்து விடுங்கள்!''

''ஐயா! அவ்வளவு அவசரப்படவேண்டாம். கந்தமாறன் ஊரில் இல்லை.''

''எங்கே போயிருக்கிறான்?''

''காஞ்சிக்குக் கரிகாலரை அழைத்து வரப் போயிருக்கிறான். நாளை இரவு எல்லாரும் இங்கு வந்து விடுவார்கள். அதுவரையில் நீர்...''

''அதுவரையில் என்னை இங்கேயே இருக்கச் சொல்கிறீர்களா? அது நியாயமல்ல!''

''இங்கே இருக்கச் சொல்லவில்லை. இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் இங்கே பழுவூர் இளைய ராணி வந்து விடுவாள். பிறகு ஈ காக்காய் இங்கே வரமுடியாது. பழுவேட்டரையர் எப்படிப்பட்டவர் என்பது உமக்குத் தெரிந்திருக்கும். அவர் உம்மை இங்கே கண்டால் உடனே கண்ட துண்டமாக வெட்டிப் போட்டுவிடச் செய்வார். ஆ! அந்தக் கிழவருக்குத்தான் பெண்டாட்டியின்பேரில் எவ்வளவு ஆசை!'' என்று சொல்லி மணிமேகலை சிரித்தாள்.

வந்தியத் தேவன் முன் தடவை பழுவேட்டரையர் வந்தபோது நடந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டான்.

''அப்படியா? பழுவேட்டரையருக்குப் பழுவூர் ராணி பேரில் ரொம்ப ரொம்ப ஆசையா?'' என்று கேட்டான்.

''அது நாடு நகரம் எல்லாம் தெரிந்த விஷயம் ஆயிற்றே! போன தடவை, எட்டு மாதங்களுக்கு முன்னால் இங்கே ஒருதடவை அவர்கள் வந்திருந்தார்கள். பழுவூர் ராணி அந்தப்புரத்துக்கு வரக் கூடக் கிழவர் விடவில்லை! அப்படிக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்கிறார். இந்தத் தடவை சில நாள் இங்கே இருக்கப் போகிறார்களாம். பழுவூர் ராணிக்குத் தனி அந்தப்புரம் வேண்டுமென்று ஒரே தடபுடல். இந்தத் தடவையாவது எங்களை யெல்லாம் பார்க்கப்போகிறாளோ, பார்ப்பதற்குக் கிழவர் விடப்போகிறாரோ, தெரியவில்லை.''

''அப்படியானால் நான் இப்பொழுது என்ன செய்யட்டும்?''

''அதுதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஆ! ஒரு யோசனை

தோன்றுகிறது. என் தமையன் கந்தமாறனுடைய தனி ஆயுத அறை ஒன்று இந்த மாளிகையில் இருக்கிறது. அதில் உம்மைக் கொண்டு விடுகிறேன். நாளை சாயங்காலம் கந்தமாறன் வந்து விடுவான். அதுவரையில் அங்கேயே இரும். நீர் சொல்வதன் உண்மை, பொய்யைக் கந்தமாறனிடம் நேரில் நிரூபித்து விடலாம்...''

''இளவரசி! அது முறையன்று! மிகவும் ஆபத்தான காரியம்!''

''என்ன ஆபத்து?''

''அங்கே நான் எப்படி வந்து சேர்ந்தேன் என்று கந்தமாறன் கேட்டால் என்ன பதில் சொல்வது?''

''உள்ளது உள்ளபடி சொல்கிறது.''

''உள்ளது உள்ளபடி நான் இப்போது சொன்னதை நீங்களே நம்பவில்லையே? அடுத்த அறையில் என்னைத் தேடி வந்த ஆட்கள் இருக்கும்போதே?''

''ஐயா! அதை இப்போதே சோதித்து விடுகிறேன்.''

''என்ன சோதிக்கப் போகிறீர்கள்?''

''அடுத்த அறைக்குள் சென்று அந்த மனிதர்களைப் பார்த்து விசாரிக்கப் போகிறேன். அவர்கள் உம்மைக் கொல்ல வந்தவர்களா? அல்லது நீர் அழைத்து வந்தவர்களா என்று தெரிந்து கொண்டு வருகிறேன்.''

''ஐயோ! அவர்கள் பொல்லாத துஷ்டர்கள். தாங்கள் அவர்களிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டால்...''

''என் அரண்மனையில் யார் என்னை என்ன செய்ய முடியும்? இதோ பாருங்கள்!'' என்று கூறி மணிமேகலை யாருக்கும் தெரியாமல் தன் இடுப்பில் செருகியிருந்த சிறிய மடக்குக் கத்தியை எடுத்துக் காட்டினாள்.

''யாரும் என்கிட்ட வர முடியாது! அப்படி ஏதாவது ஆபத்து வருவதாயிருந்தால் நீர்தான் சூராதி சூரர் இங்கே இருக்கிறீரே!''

''அம்மணி! என்னிடம் தற்சமயம் ஆயுதம் ஒன்றுமில்லை.''

''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்று நீர் கேட்டதில்லையா? உமது பெயரே வல்லவரையர் ஆயிற்றே? ஆயுதம் கையில் இருந்தால் பெண் பிள்ளைகள் கூடச் சண்டை போடுவார்கள். ஆண் பிள்ளைகள் எதற்கு?... உமக்கு வீண் கவலை வேண்டாம். அங்கே அந்த அறையில் தூசு தட்டிக் கொண்டிருந்தவன் எங்கள் அரண்மனை வேலைக்காரன்தான். மற்றவர்களை அவன்தான் இட்டு வந்திருக்க வேண்டும். அவர்களும் எனக்குத் தெரிந்தவர்கள் என்றே தோன்றுகிறது. அவர்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டு வருகிறேன். கதவுக்கு அருகில் நிற்கவேண்டாம். அதோ அந்த மரக் களஞ்சியத்துக்குப் பக்கத்தில் போய்ச் சிறிது மறைந்து நில்லுங்கள்!''

இவ்விதம் சொல்லிக் கொண்டே மணிமேகலை வேட்டை அறைக்குப் போகும் இரகசிய வாயிற் பக்கம் சென்று அதன் கதவைத் திறக்க முயன்றாள்.

வந்தியத்தேவன் அவசரமாக நடந்து மரக் களஞ்சியத்தின் அருகில் சென்று சற்று மறைந்து நின்றான்.

மரக் களஞ்சியத்தின் கதவுகள் திறந்திருந்தன. அதற்குள்ளே தற்செயலாகப் பார்த்தான். அது தானியம் கொட்டும் களஞ்சியம் அல்லவென்று தெரிந்தது. அதற்குள்ளே படிப்படியாக அமைந்திருந்தது. ஒவ்வொரு படியிலும் யாழ், வீணை, மத்தளம், தாளம் முதலிய இசைக் கருவிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேலே சிறிது அண்ணாந்து பார்த்தான். படிகள் மேற் கூரை வரையில் போவதாகத் தெரிந்தது.

இதற்குள் மணிமேகலை வேட்டை மண்டபத்தின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்தாள்.

அவளுடைய தைரியத்தை வந்தியத்தேவன் வியந்தான். அதே சமயத்தில் மணிமேகலைக்கு ஆபத்து ஒன்றும் நேருவதற்கில்லை என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான்.

இதற்குள் அந்த அறையின் இன்னொரு பக்கத்திலிருந்து ஒரு கதவு திறந்தது. ''அம்மா! அம்மா!'' என்று கூவிக் கொண்டே சந்திரமதி உள்ளே வந்தாள்.

வந்தியத்தேவன் திடுக்கிட்டான். அவள் தன்னைப் பார்த்து விடாமலிருப்பதற்காக இசைக் கருவிக் களஞ்சியத்துக்குள் நுழைந்தான்.

''அம்மா! அம்மா! தஞ்சாவூர்க்காரர்கள் கோட்டை வாசலில் வந்து விட்டார்களாம். மகாராணி உடனே தங்களை அழைத்து வரச் சொன்னார்கள்!'' என்று கத்திக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தாள். அவள் எதிரில் திறந்திருந்த வேட்டை மண்டபக் கதவை நோக்கிப் போனாள்.

கதவின் அருகில் நின்று பார்த்தால் வந்தியத்தேவன் களஞ்சியத்துக்குள் இருப்பது தெரிந்து போய்விடும். ஆகையால் அவன் விரைவாகச் சில படிகள் மேலே ஏறினான்.

ஒரு வீணையின் மீது அவன் முழங்கால் இடித்து அது சப்தித்தது.

வந்தியத்தேவன் பீதி அடைந்து மேலும் சில படிகள் ஏறினான். அவன்

தலை களஞ்சியத்தின் மேல் பலகையில் முட்டியது. என்ன விந்தை! அந்த மேற் பலகை வந்தியத் தேவனுடைய மண்டை முட்டியபோது சிறிது மேலே சென்றது.

ஏதோ சந்தேகம் தோன்றி வந்தியத் தேவன் அப்பலகையைக் கையினால் நெம்பித் தூக்கினான். அது நன்றாய் மேலே போனதுடன், திறந்த இடத்தின் மூலமாக வெளிச்சம் வந்தது. தூரத்தில் சலசலவென்று சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் வானத்தில் மின்னும் நட்சத்திரங்களும் தெரிந்தன. வந்தியத் தேவனுடைய உள்ளம் உற்சாகத்தினால் துள்ளியது.

பலகையை நன்றாக நகர்த்திவிட்டு மேலே ஏறினான். மாளிகையின் மேல் மச்சில் ஒரு பகுதிக்குத் தான் வந்திருப்பதைக் கண்டான். அதிலும் அந்தப் பகுதி முன்னொரு நாள் அவன் சுகமாகக் காற்று வாங்கிக் கொண்டு படுத்திருந்த பகுதிதான். பெரிய தூண்களின் மறைவில் நின்று சிற்றரசர்களின் கொடிய சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்ட அதே இடந்தான்.

பலகையைத் தள்ளி முன்போல் மூடினான். மூடிய பிறகு, கூரையிலிருந்து அப்படி ஒரு வழி இருக்கிறதென்று கண்டுபிடிப்பது சுலபமல்லவென்பதை உணர்ந்தான். அதைப் பற்றி இப்போது யோசிக்கவும் அதிசயப்படவும் அவகாசம் இல்லை. அங்கிருந்து தப்பிச் செல்லும் வழியைப் பார்க்க வேணும்.

இத்தனை நேரமும் தனக்கு உதவி செய்த அதிர்ஷ்ட தேவதை இனியும் உதவி செய்யாமலா இருக்கப் போகிறது?

வந்தியத் தேவன் நாலாபுறமும் சுற்றிப் பார்த்தான். எங்கு நோக்கினாலும் கொடிகளும் தோரணங்களும் பறந்து அந்த அரண்மனைப் பிரதேசம் முழுவதும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அடாடா! இராஜோபசாரம் என்பது இதுதான் போலும்!

வந்தியத் தேவன் அடிமேல் அடி வைத்து மெள்ள மெள்ள நடந்தான். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு நடந்தான். மேல் மச்சில் எங்கும் மனித சஞ்சாரமே இல்லை. அந்த வரையில் நம் அதிர்ஷ்டந்தான். பிறகு கொஞ்சம் விரைவாகவே நடந்தான்.

முன்னொரு தடவை அவன் படுத்திருந்த நிலா மாடத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்து பார்த்தபோது அரண்மனையின் வெளிமதிலும், மதிலுக்கும் மாளிகைக்கும் நடுவிலிருந்த முற்றமும், குரவைக்கூத்து நடந்த இடமும், சதியாலோசனை நடந்த இடமும் காணப்பட்டன. ஆனால் அந்த இடங்களிலும் மனிதர்கள் யாரும் காணப்படவில்லை. அதற்குக் காரணம் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமான காரியமாயில்லை. அரண்மனையின் முன் வாசலில் ஒரே அல்லோல கல்லோலமாயிருந்தது. நூற்றுக்கணக்கான தீவர்த்திகள் வெளிச்சம் தந்தன. மேள தாளங்கள் பேரிகை முழக்கங்களுடன் மனிதர்களின் வாழ்த்தொலிகளும் கலந்து பேரொலியாகக் கிளம்பியது. பழுவேட்டரையரின் பரிவாரங்கள் அரண்மனை வாசலை நெருங்கி வந்துவிட்டபடியால், அவர்களை வரவேற்பதற்காக எல்லாரும் அங்கே போயிருக்கிறார்கள். அதனாலேதான் இங்கேயெல்லாம் ஜனசஞ்சாரம் இல்லை. ஆகா! உண்மையில் அதிர்ஷ்ட தேவதை வந்தியத்தேவன் பக்கத்தில் இருந்தாள் என்பதில் சந்தேகமில்லை. தப்பிச் செல்வதற்கு எவ்வளவு அருமையான சந்தர்ப்பம்? அரை நாழிகைக்கு முன்னாலும் இத்தகைய சமயம் கிடைத்திராது! அரை நாழிகை பின்னால் வந்தாலும் இம்மாதிரி வசதி கிட்டியிராது.

சதியாலோசனை நடந்த இடத்துக்குச் சமீபமாக வந்து, வந்தியத்தேவன் இன்னொரு தடவை சுற்றுமுற்றும் பார்த்தான்; ஒருவருமில்லை. கீழே குனிந்து பார்த்தான்; அங்கேயும் யாரும் இல்லை. எதிரில் மதில்சுவரைப் பார்த்தான். அங்கேயும் யாரும்... ஆ! இது என்ன? மதில் மேல், கிளைகளுக்கு நடுவில் ஒரு முகம்! ஆழ்வார்க்கடியானுடைய முகம் போல் தெரிகிறதே!... சீச்சீ! வீண் பிரமை! முன்னொரு தடவை ஆழ்வார்க்கடியானுடைய முகம் போல் தெரிந்த இடம் அது! ஆகையால் அவன் மனம் அவனை அப்படி ஏமாற்றிவிட்டது! அதுவும் ஒரு நல்லதுக்குத்தான். மதில் மேல் ஏறிக் குதித்துத் தாண்டுவதற்கு அதுதான் சரியான இடம். அதை அவனுடைய உள் மனம் சுட்டிக்காட்டி ஞாபகப்படுத்தியிருக்கிறது. வரவேற்பு முடிந்து வாசலில் நிற்கும் கூட்டம் உள்ளே வருவதற்குள் அவன் தப்பித்துச் செல்ல வேண்டும். முற்றத்தில் எப்படி இறங்குவது?... ஆ! இதோ ஒரு வழி! இங்கே முற்றத்தில் ஒரு கொட்டகை போட்டிருக்கிறது. குரவைக் கூத்துக்காகப் போட்டிருக்கும் கொட்டகை போலும். கொட்டகைக்காகப் புதைத்திருந்த மூங்கில் மரம் ஒன்று நெடிதுயர்ந்து மேல் மச்சு வரையில் வந்திருந்தது. வந்தியத்தேவன் அதைத் தாவிப் பிடித்துக் கொண்டு சரசரவென்று கீழே இறங்கினான். மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவரும் இல்லை.

மச்சின் மேலே, தான் சற்றுமுன் நின்ற இடத்தில் கிண்கிணிச் சத்தம் கேட்டது. ஆகா! மணிமேகலை தன்னைத் தேடி வந்தாள் போலும்! பொல்லாத பெண்! இச்சமயம் அவளிடம் அகப்பட்டுக் கொண்டால் நம் பாடு தீர்ந்தது.

முற்றத்தில் திறந்த வெளியை ஒரே ஓட்டமாக ஓடி வந்தியத்தேவன் கடந்தான். மதிள்சுவர் ஓரமாக நின்று திரும்பிப் பார்த்தான். மச்சின்மீது ஒரு பெண் உருவம் தெரிந்தது. மணிமேகலையோ, சந்திரமதியோ தெரியவில்லை. யாராயிருந்தாலும் தான் முற்றத்தை ஓடிக் கடந்ததைப் பார்த்திருக்க வேண்டும். நல்ல வேளையாகக் கூச்சல் போடவில்லை. அவள் யாராயிருந்தாலும் நன்றாயிருக்கட்டும்! மகராஜியா யிருக்கட்டும்!

இவ்விதம் மனத்துக்குள் வாழ்த்திக் கொண்டே மதிள் சுவர் ஓரமாக வந்தியத்தேவன் விரைந்து நடந்தான். மதிள் மேல் ஆழ்வார்க்கடியானுடைய முகம் தெரிந்த இடம் வந்து விட்டது. அங்கே சுவரில் ஏறுவது எப்படி? இவ்வளவு உயரமாயிருக்கிறதே! சுவரில் பிடித்துக் கொள்வதற்கு மேடு பள்ளம் ஒன்றுமே யில்லையே? கடவுளே!.... இதோ ஓர் உபாயம்! குரவைக் கூத்துக் கொட்டகைக்காகக் கொணர்ந்த மூங்கிற் கழிகள் சில சற்றுத் தூரத்தில் கிடந்தன. அவை மிஞ்சிப் போனவை போலும்! ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தக் கழிகளில் ஒன்றை எடுத்து வந்தான். மதிளின் மேல் சாய்த்து வைத்தான். கழியின் உயரத்துக்கும் மதிளின் உயரத்துக்கும் சரியாக இருந்தது. ஆனால் கழி சுவரில் நிலைத்து நிற்க வேண்டுமே? ஏறும் போது நழுவி விட்டால்? — நழுவிவிட்டால் கீழே விழ வேண்டியதுதான்! அதற்காகக் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருந்து என்ன பயன்?

கழியை இரண்டொரு தடவை அமுக்கிப் பார்த்துவிட்டு, அதன் வழியாக ஏறத் தொடங்கினான். பாதிச் சுவர் ஏறியபோது கழி நழுவத் தொடங்கியது. 'தொலைந்தோம்! கீழே விழுந்தால் எலும்பு நொறுங்கிவிடும்!' என்று எண்ணுவதற்குள், மறுபடியும் கழி உறுதியாக நின்றது. மேலேயிருந்து ஒரு கரம் அதைப் பிடித்துக் கொண்டது போல் தோன்றியது! 'நமக்குப் பைத்தியம் பிடிப்பதுதான் பாக்கி!' என்று எண்ணிக் கொண்டு வந்தியத்தேவன் மேலே ஏறினான். மதிள் சுவரின் மேல் முனையை அவன் பிடித்துக் கொண்டதும் கழி நழுவிக் கீழே விழுந்தது! அது விழுந்த சத்தம் இடி முழக்கம் போல் அவன் காதில் விழுந்தது. நல்ல வேளை! கோட்டை வாசலில் ஆரவாரம் இப்போது இன்னும் அதிகமாயிருக்கிறது. ஆகையால் யார் காதிலும் விழுந்திராது! ஆனால், எதிரே அந்தப்புர மேல் மாடத்தில் நின்ற பெண்! அவள் காதில் விழுந்திருக்கும்!

மதிள் மேல் தாவி ஏறி நின்றபடி மறுபடியும் ஒருதடவை வந்தியத் தேவன் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். இன்னமும் அப்பெண் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்!

வந்தியத் தேவனுடைய கிறுக்குக் குணம் அவனை விட்டுப் போகவில்லை! 'போய் வருகிறேன்!' என்று சொல்கிற பாவனையாகக் கையை ஆட்டிவிட்டு, மதிளின் அப்புறத்தில் இறங்கத் தொடங்கினான். இறங்குவதில் அவ்வளவு கஷ்டம் இல்லை. ஏனெனில், மதிள் சுவரின் வெளிப்புறம் உட்புறத்தைப் போல் மட்டமாக இல்லை; சில மேடு பள்ளங்கள் இருந்தன. பக்கத்திலிருந்த மரங்களின் கிளைகள் சில சுவரின் மீது மோதி உராய்ந்துகொண்டிருந்தன. அவற்றின் உதவி கொண்டு சரசரவெனக் கீழே இறங்கினான். மணிமேகலையைத் தான் ஏமாற்றிவிட்டு வந்தது பற்றி நினைத்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பின் எதிரொலியைப் போல் இன்னொரு சிரிப்பு எங்கிருந்தோ வந்தது. வந்தியத்தேவனுடைய இரத்தம் அவனுடைய உடம்பில் உறைந்து போயிற்று. கைகள் நடுங்கின. கீழே குதிப்பதற்காகப் பார்த்தான். நாய் ஒன்று அங்கே அவன் மீது பாயக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். மேலே ஏறுவதைப் பற்றி இனி யோசிப்பதற்கே இல்லை! கீழே குதித்துத் தான் ஆகவேண்டும். குதித்தால் இந்த நாயின் வாயில் ஒரு பிடி சதையையாவது கொடுத்துத் தீரவேண்டும்! சற்று முன் கேட்டது சிரிப்புச் சத்தமா? அல்லது நாய் குரைத்த சத்தமா? பக்கத்தில் யாராவது மறைந்து நின்று நாயை ஏவி விட்டிருக்கிறார்களா? மேலே ஏறுவதில் அபாயம் அதிகமா? கீழே குதிப்பதில் அபாயம் அதிகமா? வந்தியத்தேவனுடைய உள்ளம் ஊசலாடியது! அவனுடைய கால்களும், எழும்பி எழும்பிக் குதித்த நாயின் வாயில் அகப்படாமல் இருப்பதற்காக ஊசலாடின! **(தொடரும்)**

வலது புறம் உள்ள ஜாடியே விலைமதிப்பு மிக்கது. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங்காலத்திய செம்பு ஜாடியை 1966ல் துருக்கியிலிருந்து வந்த தூதுகோஷ்டியினர் அன்றைய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்குப் பரிசளித்தனர்.

அவளோ 5' 5"×2×2
CCM-ன் மிர்ராபோ
2×2 ∴ புல் வாயில்களில், புடவைகளில்

மிர்ராபோ 2 x 2 ∴புல்வாயில் புடவைகளில்
அவள் என்றும் வனப்புடன் காணப்படுகிறாள்.

ஏனெனில் புதியமிர்ராபோ புடவைகள்
கசங்காதவை. அணிவதற்கு ஏற்றவை.
தனித்தன்மை வாய்ந்தவை. 'ஆண்டிகிரிஸ்'
செய்யப்பட்டவை. உயர்தர எகிப்திய
பருத்தியால் தயாரிக்கப்பட்டவை.
மற்றும் மிருதுவான
கோட்டா புடவைகள்
கண்கவர் வண்ணங்களிலும்
பிரிண்டுகளிலும் உள்ளன.

தி கோயம்பத்தூர்
காட்டன் மில்ஸ்
லிமிடெட்
கோயம்பத்தூர்-15

CCM ரீடெய்ல் ஷோரூம்கள்:
17/93, ஒப்பணக்காரத் தெரு,
கோயம்பத்தூர்-1
387, மெயின் ரோடு,
கோவில்பட்டி

விநியோகிப்பவர்கள்:
வெங்கடேஷ்
வஸ்திராலயா
கோயம்பத்தூர்-2 &
சென்னை-1



CCM-ன் மிர்ராபோ
2×2 ∴ புல் வாயில்கள், புடவைகள்

FDSCCM1415TMA



ராமாயணம்

ராஜாஜி

58. வாலி வதம்

மாலை நெருங்கி வந்த வேளை. மறுபடியும் சுக்ரீவன் பெருங் கர்ஜனை செய்து வாலியை யுத்தத்துக்கு அறைகூவி அழைத்தான்.

சந்தோஷமாகப் படுத்திருந்த வாலி திடுக்கிட்டான். இதென்னவென்று அவனுக்கு விளங்கவில்லை. பயம் என்று சொல்லுவதற்கில்லை. ஆயினும் கொஞ்சம் நிறம் மாறினான். பிறகு ரோஷம் கொண்டான்.

தோல்வியடைந்து அடிபட்டுப் பயந்தோடின தம்பி மறுபடியும் இம்மாதிரி வந்து கர்ஜிக்கிறானே என்று பொறுக்க முடியாத கோபத்தோடு எழுந்து உடனே அவனை ஹதம் செய்துவிடத் தீர்மானித்துப் புறப்பட்டான். தரையை அவன் காலால் மிதித்தது பூமியைப் பிளப்பது போலிருந்தது.

''வேண்டாம்! இன்று வேண்டாம்! நாளை பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள் தாரை, அவனைப் பிரியமாகத் தடுத்து.

வாலியின் பட்டமகிஷி புத்திசாலியான தாரை புருஷனை ஆலிங்கனம் செய்து கொண்டு, ''வேண்டாம், யுத்தத்துக்கு அவசரமில்லை. நாளைக் காலையில் சென்று சத்துருவை அழித்துவிடலாம். நன்றாக யோசிக்காமல் இப்போது வெளியேறித் தம்பியுடன் யுத்தம் செய்வது சரியென்று எனக்குத் தோன்றவில்லை. ஏதோ எனக்குப் பயமாக இருக்கிறது. அடிபட்டு, அவமானப்பட்டு, உயிர் தப்பினால் போதும் என்று ஓடி ஒளிந்து கொண்ட தம்பி என்ன தைரியம் கொண்டு இன்றே மறுபடியும் வந்து இவ்வளவு அட்டகாசம் செய்கிறான்? இதைப் பற்றித் தீர ஆலோசிக்க வேண்டும். பிரியநாதா ! இப்போது போக வேண்டாம். ஏதோ மோசமும் அபாயமும் நான் இதில் காண்கிறேன். என் பேச்சைப் புறக்கணிக்க வேண்டாம். அவனுடைய பேச்சையும் கர்ஜனையையும் கவனித்தால் ஏதோ பெரும் சகாயம் சேர்த்துக் கொண்டு நிற்கிறான் என்பது நிச்சயமாகிறது. இல்லாவிடில் இவ்வளவு கர்வம், பிடிவாதம் ஏன்? பலமான சகாயத்தைச் சம்பாதித்திருக்கிறான் என்பது உறுதி. அந்தச் சகாயத்தின் பலத்தை நன்றாகப் பரீட்சை செய்து தைரியமடைந்தே வந்திருக்கிறான், உங்கள் தம்பி. இதில் சந்தேகமில்லை. நம்முடைய பிரிய குமாரன் அங்கதனுடைய நலனைக் கருதுவீர்களாக. நான் சொல்லும் பேச்சைத் தட்டாதீர்கள். ஏதோ பிதற்றுகிறேன் என்று எண்ண வேண்டாம். சாரர்களால் அங்கதன் அறிந்து என்னிடம் சொன்னதைச் சொல்லுகிறேன். அயோத்தியிலிருந்து மகா வீரனான ஒரு ராஜகுமாரன் நம் பிரதேசத்துக்கு வந்திருக்கிறானாம். அவனை எல்லாரும் உத்தம தர்மவானாகவும் வீரனாகவும் மதிக்கிறார்களாம். அவனுடைய சிநேகத்தை உங்கள் தம்பி அடைந்து விட்டானாம். இதனால் அவனுடைய பலமும் தைரியமும் வளர்ந்து போயின. உங்கள் தம்பியும் நல்லவன், வீரன். அவனை ஏன் விரோதிக்க வேண்டும்? அவனைவிட நமக்கு யார் நெருங்கிய பந்து? அவன் உங்களுக்குப் பக்தியோடு பணி செய்து பராக்கிரமமான துணையாவான். சுக்ரீவனை நாம் மறுபடியும் அழைத்து விரோதத்தை மறந்துவிட்டு ஒன்றாகப் போவதே நலம். அருமை நாதனே, என் பேச்சைப் புறக்கணிக்க வேண்டாம்'' என்றாள்.

வாலிக்கு இந்தப் பேச்சுப் பிடிக்கவேயில்லை. கடல் பொங்குவது போல் எழுந்த கோபத்தில் அவன் தன் மனைவியின் பேச்சில் நியாயம் காணவில்லை. காலபாசத்தால் இழுக்கப்பட்டுச் செல்பவன் எப்படிக் காண்பான்? தாரை என்கிற பெயருக்குத் தகுந்த முக லக்ஷணம் கொண்ட மனைவி சொன்ன புத்திமதி வாலிக்குச் சம்மதப்படவில்லை.

''என்ன சொல்லுகிறாய்! சத்துருவான தம்பி செய்யும் கர்ஜனையை நான் எப்படிப் பொறுப்பேன்? ஏன் பொறுப்பேன்? அழகியே! எதிரி யுத்தத்துக்கு அழைக்கும்போது வீரன் போகாமலிருக்க முடியுமா? அதை விட உயிரை விடுவதே மேலாகும். இந்த அற்பன் போடும் கர்ஜனையைக் காதில் கேட்டுக் கொண்டு சும்மா இருக்க என்னால் சாத்தியமில்லை. நீ ராமனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவன் தர்மத்தை அறிந்தவன்; பாபத்துக்குப் பயந்தவன். அவன் அநியாய காரியத்தில் இறங்க மாட்



டான். நீ என்னைத் தடுக்காதே, திரும்பிப் போ! சுக்ரீவனை நான் கொல்ல மாட்டேன். அவன் கர்வத்தை அடக்கி விடுவேன். அவ்வளவே. அந்தத் துராத்மாவின் அட்டகாசத்தைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை. உனக்கு என்மேலிருக்கும் பிரியத்தால் சொல்ல வேண்டியதைச் சொன்னாய். தம்பியின் கொழுப்பை அடக்கி ஓட்டிவிட்டு வெற்றியுடன் திரும்பி வருவேன். பயப்பட வேண்டாம். மங்கள மொழி சொல்லி என்னை அனுப்பு. தடுக்க வேண்டாம்'' என்றான்.

கவி வால்மீகி வாலியை எவ்வளவு உயர்த்தி வைத்துச் சித்திரித்திருக்கிறார்!

தாரையும் கண்களில் நீர் ததும்பிய வண்ணம் வாலியை வலம் செய்து மங்களம் சொல்லிவிட்டு, நல்லதாக முடிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, கவலையுடன் அந்தப்புரம் திரும்பிப் போனாள். தாரையையும் அவளுடைய தோழிகளையும் அனுப்பி விட்டு வாலி புற்றிலிருந்த பாம்பு சீறிக் கொண்டு வெளிவருவது போல் சுக்ரீவனைத் தேடிச் சென்றான்.

மகா ரோஷத்துடன் போன வாலி, தம்பி தைரியமாக தேஜஸ் வீசிக் கொண்டு நிற்பதைப் பார்த்தான். பார்த்ததும் கச்சையை இறுக்கிக் கட்டிப் பாய்ந்தான். சுக்ரீவனும் வாலியை நோக்கி வேகமாக வந்தான்.

''உயிரில் ஆசை வைத்திருப்பாயாயின் ஓடிப் போ. இந்த முஷ்டிக்கு உன் உயிரைத் தத்தம் செய்யாதே'' என்று கர்ஜித்தான் வாலி.

சுக்ரீவனும் கோபமாக மறுமொழி சொன்னான். பிறகு யுத்தம் முற்றிற்று. இருவரும் அடி மேல் அடி அடித்து, ரத்தப் பிரவாகம் ஓடிற்று. மிகவும் அடிபட்ட சுக்ரீவன் ஓர் ஆச்சா மரத்தைப் பிடுங்கி அதனால் வாலியைப் பலமாக அடித்தான். வாலி அந்த அடியின் வேகத்தால் கொஞ்சம் அசைந்து கோபம் கொண்டு தானும் மரங்களை வேரோடு பிடுங்கிச் சுக்ரீவனை அடித்தான். இருவரும் சம வீரர்கள்; வெகு நேரம் கோரமான யுத்தம் நடந்தது. வர வர வாலியின் பலம் அதிகரித்தது. சுக்ரீவனுடைய பலம் குறைய ஆரம்பித்தது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ராமன், இனி சுக்ரீவன் தாங்கமாட்டான், உயிர் நீப்பான் என்று கண்டு, வில்லை வளைத்துக் கொல்லும் பாணத்தை விட்டான். அது நேராகச் சென்று வாலியின் வைரமான மார்பை ஆச்சா மரத்தைத் துளைத்தபடியே துளைத்து விட்டது. வாலியின் வாழ்க்கை முடிந்தது. விழா முடிந்ததும் அதற்காக அலங்கரிக்கப்பட்ட துவஜஸ்தம்பம் தரையில் கிடப்பதுபோல் ரத்தம் பெருகக் கீழே வாலியின் உடல் கிடந்தது.

இப்படி ராமனுடைய பாணத்தால் மரண காயமடைந்த மகாசூரனை வாலி கோடாரியால் வெட்டி வீழ்த்தப் பட்ட பெரிய காட்டு விருக்ஷத்தைப் போல் கையும் காலும் விரித்துக் கீழே கிடந்தான்.

கீழே கிடந்தாலும் வாலியின் அழகும் காந்தியும் குறையவில்லை. ஆபரணங்கள் பூண்டிருந்த அவன் தேகம் சூரியன் அஸ்தமிக்கும் போது சிவந்து பிரகாசிக்கும் மேகக் கூட்டத்தைப் போல் பிரகாசித்தது. இந்திரனால் கொடுக்கப் பட்ட தெய்விக மாலை அவன் மார்பில் பிரகாசித்துக் கொண்டு அவன் உயிரையும் அவன் திருவையும் தாங்கி மிகப் பொலியச் செய்தது. அந்த மாலையின் ஜோதியும், வீரனுடைய மார்பில் குத்தி நின்ற கொல்லும் பாணமும் ரத்தம் பெருகும் காயமும் எல்லாம் சேர்ந்து அந்த மகாவீரனுடைய தேகத்தை மும்மடங்கு பொலிவுடன் விளங்கச் செய்தன. வீழ்ந்து கிடந்த அந்த மகாவீரனுடைய கம்பீரத் தோற்றத்தை வால்மீகி மிக அழகாக வர்ணிக்கிறார். உயிர் நீங்குவதற்குமுன் இறக்கும் தறுவாயில் சூரர்களுடைய காந்தி மிகப் பொங்கி வளர்ந்து எப்போதும் விட அதிகமாக ஜொலிப்பது இயற்கை. எதிர்பாராத வகையில் வீழ்த்தப்பட்ட வாலி, நான்கு பக்கமும் தன் பார்வையைச் செலுத்திப் பார்த்தான். எங்கிருந்து தன் உயிரைக் கொண்டேக இந்தப் பாணம் வந்தது என்று சுற்றிலும் பார்த்தான். அச்சமயம் ராம லக்ஷ்மணர்கள் அவன் பக்கத்தில் வந்தார்கள். வில்லேந்தி வந்த அவர்களைப் பார்த்ததும் வாலியின் கண்களில், சூரர்கள் கண்களில் வடியும் கண்ணீர் வடிந்தது. மெதுவான குரலில் தருமத்துக்கு இசைந்ததும் மேம்பட்ட பண்பாடு நிறைந்ததுமான தரும மொழிகளைச் சொல்லி ராமனுடைய குற்றத்தை எடுத்துக் காட்டிக் கண்டித்துப் பேசினான்.

உயிர் தேகத்தை விட்டுப் போகும் தறுவாயானபடியால் பேச்சு தடைப்பட்டது. ஆயினும் தாழ்ந்த சுரத்தில் கஷ்டப்பட்டுப் பேசினான். (தொடரும்)

வாலியும் சுக்ரீவனும் புரியும் கோரமான யுத்தக் காட்சியை இவ்விதம் மேலட்டையில் வண்ண ஓவியமாகத் தந்திருக்கிறார் சித்திரக் கலைஞர் வினு.

சூரபதுமன்

நாடகக் காவலர் மனோகர் நடிக்கும் நாடகம் என்றால் நிச்சயமாக அதில் புதுமையை எதிர்பார்க்கலாம். பிரம்மாண்டமான கோட்டை கொத்தளங்களையும் மாட மாளிகை, கூட கோபுரங்களையும் கஜுந்தகாரமான வஜுந்தரங்களையும், இரகசியக் குகைகளையும் தத்ரூபமாக மேடையில் காட்டி ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தி வருபவர் மனோகர். அத்துடன் பழைய கதைகளிலும் புதிய உத்திகளைக் கையாண்டு புது மெருகோடு தமக்கென ஒரு தனி வழி அமைத்துக் கொண்டு அரங்கேற்றிப் புகழ் பெற்றவர்.

இலங்கேசுவரனை ராவணனை முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் சித்திரித்தது போலவே சூரபத்மனையும் நல்லவனாகக் காட்டியிருக்கிறார்கள். தாயாதிகளான தேவர்களுடன் சூரபத்மன் நண்பனாகவே வாழ விரும்புகிறான். அசுர குருவான சுக்ராச்சாரியாருக்கும், தேவகுரு பிருகஸ்பதிக்கும் தங்களுக்குள் யார் உயர்ந்தவர் என்ற போட்டி ஏற்படவே, குரோதம் காரணமாகச் சுக்ராச்சாரியார் சூரபத்மனைத் தேவர்கள் மீது போர் தொடுக்கும்படி தூண்டுகிறார். அவன் மறுக்கவே அவர் கோபம் அதிகமாகிறது: வீர மாமகம் என்னும் வீர வேள்வியை இயற்றிச் சர்வ வல்லமைகளையும் பெற முற்பட்ட சூரபத்மன் அவ்வேள்விக்கான மந்திரோபதேசத்தைப் பெற்றுக் கொள்ளச் சுக்கிராச்சாரியாரிடம் வருகிறான். அதற்கு, குரு தட்சிணையாகத் தம் லட்சியம் ஒன்றை நிறைவேற்றித் தர வேண்டும் என்று அவர் தந்திரமாக அவனிடம் வாக்குறுதி பெற்று விடுகிறார். அதன் விளைவுதான் சூரபத்மனுக்கும் தேவர்களுக்கும் ஏற்பட்ட யுத்தம். இதுதான் நாடகக் கதை.

சூரபத்மனை உயர்த்திக் காட்டுவதற்காகச் சுக்கிராச்சாரியாரை வில்லனாகக் காட்டியிருப்பதை ஏற்றுக் கொள்வது சற்றுச் சங்கடமாகத்தான் இருக்கிறது. பலர் மறுக்கவும் கூடும்.

சூரபத்மனாக வரும் மனோகரின் நடிப்பு மிகவும் உயர்ந்து நிற்கிறது. அவன் சிவ பக்தன்; அறநெறிகளை ஆய்ந்தறிந்த ஞானி; மகா வீரன்; விதி வழி செல்லும் மதியின் போக்கை உய்த்து உணரும் நுட்பம் அறிவு பெற்றவன்; இவ்வளவையும் அவர் மேடையில் வெளிப்படுத்துவது மகத்தான சாதனைதான். அருமை மகன் பானுகோபன் இறந்ததும் சூரபத்மனின் சோகத்தை ஒரு கண நேரத்தில் அனைவரும் அனுபவிக்க முடிந்ததே! நாவலந் தீவுக்கு மாறு வேடத்தில் தமிழ்ப் புலவராகச் செல்லும் சூரபத்மனின் தோற்றம், பணிவான பேச்சு, ஆனந்த பரவசம் யாவுமே 'சபாஷ்' போட வைக்கின்றன.





சுக்கிராச்சாரியார் பாத்திரம் இந் நாடகத்தின் உயிர் நாடி. தெறரான் ராமசாமி என்பவர் அந்தப் பாத்திரத்தை ஏற்று மேடைக்கு உயிரும் உணர்ச்சியும் கொடுத்துத் தம் நடிப்புத் திறமையை நன்கு வெளிப்படுத்தினார். அடேயப்பா! அவர் பேச்சிலும், சிரிப்பிலும்தான் எத்தனை விராவேசம்!

இரண்டு நிமிஷங்களுக்கு ஒரு காட்சியாக விறுவிறுப்புடன் செல்லும் நாடகத்தின் சுவையை ஹாஸ்யப் பகுதி கெடுக்கிறது.

முருகனாக வரும் சித்தனின் வேஷப் பொருத்தமும் நடிப்புத் திறமையும் அவர் பாத்திரத்தைச் சோபிக்கச் செய்து விட்டன.


சூரபத்மனின் தாய் மாயையாக வந்த லதாவின் நடிப்பு உருக்கமாயிருந்தது. சோபனா, சூரபத்மனின் மனைவி பதுமகோமளையாக வந்து நன்றாய் நடித்தார். வீரபாகுவாக நடித்த கமலநாதனின் நடிப்பு சற்று மிகை. தங்கராக நாரதராக வருவதற்கு எல்லாவிதத்திலும் ஏற்றவர்.

கதை, வசனம், பாடல் எழுதியிருப்பவர் கவிஞர் இரா. பழனிசாமி. அவர் தம் பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். இந் நாடகம் தமிழன்பர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். சூரபத்மன், சிவபெருமானுடனும், முருகனுடனும் தமிழ்ப் புலவராக உரையாடித் தமிழ் மொழிக்கு ஏற்றம் அளிப்பதை அவர்கள் வரவேற்பார்கள்.

நேஷனல் தியேட்டர்ஸாரின் இந்நாடகம் வியப்பூட்டும் காட்சி ஜோடனைகளின் 'டெம்போ'வினால் ஒரு வண்ணப் படம் பார்ப்பதை விடச் சுவாரசியமாயிருக்கிறது.

— **கார்த்தன்**

ஓஸாகாவில் உலகத் திருவிழா



■ ஜப்பான் எக்ஸ்போ 70ல் இத்தாலிய அரங்கு.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

டெலிவிஷனே எட்டிப் பாராத சென்னை போன்ற இடங்களில் வசிக்கும் நமக்கு, 'எலக்ட்ரானிக்ஸ்' துறையில் ஜப்பானியரின் சாதனை பெருவியப்பாக உள்ளது. சுமார் 650 கிராம் எடையுள்ள, கோட்டுப் பைக்குள் வைத்துக் கொள்ளக்கூடிய கம்பியின்றி இயங்கும் தொலைபேசி; ஒரு பித்தானை அழுத்தினால் ஒரு மணி நேரத்துக்கு முன்பு வரை நிகழ்ந்த செய்திகளை அச்சடித்துத் தரும் இயந்திரம், கூட்டத்தில் காணாமற்போன குழந்தையைக் கண்ணிமைக்கும் நேரத்தில் தேடித்தரும் எலக்ட்ரானிக் கம்ப்யூடர், குழந்தையின் உருவத்தைப்பார்த்த வண்ணம் அதனுடன் பேசும் வசதியுள்ள தொலைபேசி; தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகள் ஓடிய பின்னரும் ஒரு விநாடிக்கு மேல் அதிகமாகவோ குறைவாகவோ இல்லாமல் சரியான நேரம் காட்டும் அற்புத கடிகாரம்; செக்கில் நீங்கள் கையெழுத்துக் கூடப் போடாமல் ஒரு கம்ப்யூடரின் உதவியால் உங்கள் குரலைச் செவி மடுத்து அடையாளம் கண்டு பணம் கொடுக்கும் பாங்கு, 60 கார்களை உருவாக்கத் தேவையான உறுப்புக்களைக் கொண்டு உருவாக்கப் பெற்றுள்ள 12 மீட்டர் உயரமுள்ள இயந்திரச் சிற்பம் எழுப்பும் விநோத 'இசை' — இவ்வாறு நம்மை வியப்பிலாழ்த்தும் ஆயிரமாயிரம் கருவிகள்!

ஃபூஜி பான் ரோபாட் பெவிலியனுக்குள் அடியெடுத்து வைத்ததும் நடமாடும், பேசும், நாட்டியமாடும் நாற்பது ரோபாட் மனித உருவங்கள் பார்வையாளர்களைக் கை குலுக்கி வரவேற்றுப் புகைப்படமும் எடுத்து. 15 விநாடிகளில் போட்டோ காப்பியையும் தருகின்றன! இவற்றுள் ஒரு ரோபாட் 70 அடி உயரமுள்ளது!

இரவில் ஸ்விட்ஸர்லாந்து பெவிலியனைப் பார்த்தால் தேவலோகம் போலக் காட்சி அளிக்கிறது. முப்பத்து இரண்டாயிரம் மின் விளக்குகள் ஒளி வீசுகின்றன!

இந்திய அரங்கு எப்படி? என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. பாரதத்தின் 5000 ஆண்டு வரலாற்றினைச் சித்திரிக்கிறது இந்த பெவிலியன். புராதன சிற்பங்கள், தாஜ்மகலின் வடிவம் ஆகிய பல்வேறு காட்சிப் பொருள்கள் பாரத அரங்கில் உள்ளன. சதங்கையும் ஒலிக்கின்றது - பரதக் கலையின் மேன்மையைப் பிறர் கண்டு களிக்க 15 முதல் 30 நிமிடங்கள் வரை நீடிக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. இங்குள்ள உணவு விடுதிகளிலிருந்து இந்தியத் தேநீர், இந்திய காப்பியின் மணம் 'கம்'மென்று வீசுகிறது. வெண்ணைப்புலி அடைந்துள்ள பிரசித்தி பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.


அமெரிக்காவிலுள்ள டிஸ்னிலாண்ட் மாதிரி இங்கு ஓர் 'எக்ஸ்போலாண்ட்' மிகச் சிறந்த முறையில் உருவாக்கப் பெற்றுள்ளது. இதைப் பார்த்தால் குழந்தைகளுக்கெல்லாம் ஒரே கும்மாளந்தான். '90 வயது வரையிலான எல்லாக் குழந்தைகளும் அனுபவித்து மகிழலாம் — உள்ளம் மட்டும் இளமையோடிருந்தால்!' எனக் குறிப்பிடுகிறது ஒரு ஜப்பானிய நாளிதழ்.


ஆறு மாத காலம் நடைபெறும் இந்த உலகப் பெரு விழாவுக்கு வரும் லட்சோப

லட்சம் மக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் யோசித்துத் திட்டமிட்டுச் செய்து வைத்துள்ள ஜப்பானியரின் திறமையே திறமை! எக்ஸ்போ அரங்குக்கு வெளியே 21,500 கார்கள் நிறுத்தி வைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. மேலை நாட்டு முறையில் அமைந்த பல்வேறு விடுதிகளில் 18,000 பேர் தங்குவதற்கான படுக்கை வசதிகள் உள்ளன. ஜப்பானிய மக்களின் இல்லங்களில் தங்கி அவர்களது வாழ்க்கை முறையை அறிந்து கொள்ள விரும்பும் அயல் நாட்டவர்கள் எக்ஸ்போ சங்கத்துக்கு எழுதினால் எக்ஸ்போ அரங்குக்கு அருகிலேயே வசிப்போரின் இல்லங்களில் இதற்கான வசதிகள் செய்து தரப்படுகிறதாம். உணவைப் பற்றிக் கவலையே இல்லை. எந்த நாட்டு உணவு வகை வேண்டுமாயினும் குறைவின்றிக் கிடைக்கும்.

■ ரஷ்ய நாட்டினர் எக்ஸ்போ 70ல் நிர்மாணித்துள்ள அரங்கம்.

■ விளக்குகளின் பிரகாசமும் பொங்கு புனல்களின் குளுமையும் - ஜப்பானிய சர்க்கார் பெவிலியன்.





'கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து அமைத்த நிர்வாகிகள், சாப்பாட்டு ராமன்களின் நாவுக்கு ஏற்ற பல்சுவை விருந்துக்கும் ஏற்பாடு செய்துள்ளனர்' என்கிறார், காப்பி வாரிய இயக்குனர் பாலு.

'மட்ஸுஷிடா எலெக்ட்ரிக்', 'மைநிச்சி நியூஸ் பேப்பர்ஸ்' ஆகிய இரு ஜப்பானிய நிறுவனங்களும், கி. பி. 6969ம் ஆண்டளவில் வாழப்போகும் மக்களுக்காக ஒரு நல்ல காரியம் செய்யத் திட்டமிட்டுள்ளன. இன்றைய நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் 2000க்கு மேற்பட்ட பொருட்களை (லிப்ஸ்டிக்கிலிருந்து விண்வெளிப் பயண சாதனம் வரையில்) ஒரு பெரும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பேழையில் வைத்து, எக்ஸ்போ காட்சி முடிவடைந்தவுடன் பூமியில் புதைத்து விடுவார்கள். ஐயாயிரம் ஆண்டுகள் பூமியில் புதையுண்டிருக்கும் அப்பேழை 70ம் நூற்றாண்டு மக்களுக்கு நமது நாகரிகத்தை உணர்த்த உதவும்.

"டோக்கியோவின் 11 மிலியன் (ஒரு கோடியே பத்து லட்சம்) ஜனத்தொகை ஆண்டுக்கு ஒரு லட்சம் வீதம் பெருகி வருகிறது. ஜப்பானின் தலைநகரில் நெரிசல் மிக அதிகமாய்த்தான் உள்ளது. எனினும் இந்த மாபெரும் மக்கள் கூட்டந்தான் ஜப்பானின் வியத்தகு வளர்ச்சிக்குத் தேவையான சக்தியை அளித்தது. அதன் முதுகெலும்பாக இருந்து வருகிறது" எனக் கூறுகிறது 'ஜப்பான் டைம்ஸ்' (21-3-70). மக்களின் உழைப்புச் சக்தியை நாட்டின் வளர்ச்சிக்கு நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டால் வளமை கொழிக்கத் தடையேது? ஜனத்தொகைப் பெருக்கம் பற்றிக் கவலை, ஏது? - பாணன்

- அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
- வரிக்குமேல் வரி விதித்தால் வணிகரும் எழுவர்

வர்த்தகப் பெருமக்களின் அர்த்தமிக்க மகாநாடு

திருச்சி மெயின் கார்டு கேட்...

கடந்த ஜூன் மாதம் 28ந் தேதி காலை நேரம்.

ஞாயிற்றுக் கிழமையானாலும் நல்ல கலகலப்பு. நகரின் பல பகுதிகளுக்கும் போக உதவும் பேருந்துகள் வந்து போன வண்ணம் இருந்தன. போக வேண்டிய இடத்துக்கு எந்த பஸ்ஸில் போவது என்று தெரியாமல் அருகில் நின்றிருந்த ஒருவரிடம் மெள்ள, ''சார்! இந்த வாசவி...'' என்று ஆரம்பித்த உடனேயே அவர்....

''வாசவி மகாலுக்குத்தானே? திருச்சி மாவட்ட வியாபாரிகள் மகாநாட்டுக்குப் போகத்தானே? எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்? என்னுடன் வாருங்கள். நானும் அங்கேதான் போகிறேன்'' என்றார். அத்தனை கச்சிதமாக நான் போகவேண்டிய இடத்தையும் நிகழ்ச்சியையும் அவர் சொன்னது எனக்கு முதலில் வியப்பாக இருந்தாலும் போகப்போக, 'எல்லாச் சாலைகளும் ரோமாபுரியை நோக்கித்தான்' என்ற பிரபல பழமொழியைப் போல் அத்தனை கூட்டமும் திருச்சி மாவட்ட வியாபாரிகள் மகாநாடு நடக்கும் வாசவி மகாலை நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டேன்.

காலையில் திருச்சி டவுன் ஸ்டேஷனில் நெரிந்த கூட்டமும், கீழப்பொலிவார்டு ரோடு, மேலப் பொலிவார்டு ரோடுகளில் சாரியாகப் போய்க் கொண்டிருந்த கூட்டமும் திருச்சி ஜங்ஷனுக்கு வந்து நிற்கும் வண்டிகளிலிருந்தெல்லாம் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு மலர்ந்த முகத்துடன் வந்திறங்கிய பெருங் கூட்டத்தினர் அத்தனைபேரும் வியாபாரிகள்; எல்லாரும் வாசவி மகாலை முற்றுகை இடவே வந்து கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதை மகாநாட்டுப் பந்தலின் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்த கொஞ்ச நேரத்திலேயே புரிந்து கொண்டேன்.

வணிகப் பெருமக்களின் அந்த ஒற்றுமையும் ஒரே நோக்கமும் பாராட்டுக்கு உரியனவாக இருந்தன. 'எங்கள் குறைகளை — பிரச்னைகளைத் தீர்க்க எங்களால் ஊர்வலம் போக முடியாது. அரசை விரட்டி மிரட்டி அறிக்கைகள் விட முடியாது. பெரும் கிளர்ச்சி நடத்தி உயிர்ப்பலி கொடுக்கவும் மாட்டோம். ஆனாலும் எங்களை அசட்டை செய்துவிட முடியாது' என்று அரசுக்கு அறிவிப்பதே











- மகாநாட்டுத் தொடக்க உரை நிகழ்த்துகிறார் சித்ரா நாராயணசாமி அவர்கள்.
- தலைவர் திரு பி. ஆர். சீதாராம அய்யர் தலைமையுரை நிகழ்த்துகிறார்.
- சிறப்புரை நிகழ்த்திய திரு ஏ. ஆர். தாமோதரன் எம். எல். ஸி.
- செயலாளர் மாயாண்டி வரவேற்புரை ஆற்றினார்.
- மகாநாட்டுக்கு வந்திருந்த மாபெரும் பிரதிநிதிகள் கூட்டத்தில் ஒரு பகுதி.

போல இருந்தது அத்தனை வியாபாரிகளும் ஒன்றுபட்டு வந்திருந்த அந்தக் காட்சி. வணிகர்களின் சக்தி ஒருமுகமாகி விட்டது என்பதைத் திருச்சி மாவட்ட வியாபாரக் கழக மகாநாட்டின் மகத்தான கூட்டம் தெள்ளத் தெளிவாக்கிக் கொண்டிருந்தது.

வியாபாரி என்பவன் யார்? அவன் வேலை என்ன? இப்படி ஒரு வினாவை எழுப்பி அதற்கு விடையும் கூறினார் திருச்சி மாவட்ட வியாபாரக் கழக மகாநாட்டின் வரவேற்புரையிலே அதன் செயலாளரான திரு மாயாண்டி அவர்கள்.

'இருக்குமிடத்தில் வாங்கி இல்லாத இடத்தில் விற்பது. கிடைக்கும் காலத்தில் வாங்கி வைத்திருந்து கிடைக்காத காலத்தில் கொடுப்பது. விளையும் ஊரில் வாங்கி விளையாத ஊரில் வழங்குவது. வெளி நாட்டுப் பொருள்களைக் கொணர்ந்து உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வது. உள்நாட்டு உற்பத்தியை அயல் நாடுகளுக்கு அனுப்பி ஏற்றுமதியைப் பெருக்குவது. மக்கள் நலனை மனத்தில் கொண்டு உழைப்பிற்கேற்ற ஊதியத்தை லாபமாகப் பெற்றுத் தொண்டாற்றுவது. இவனே வியாபாரி. இதுவே அவன் வேலை. இப்படிப் பண்டை இலக்கியங்களில் வியாபாரிகளுக்காகக் கூறப்பட்டுள்ள இந்த இலக்கணப்படி இன்றைய வியாபாரிகள் இருக்கிறார்களா?

இருக்கலாம். இருக்க முடியும். ஆனால் அரசு, அவர்களை இப்படி இருக்க விடுவதில்லையே! அவனுக்குச் சம்பந்தமில்லாத வரி வசூலிக்கும் வேலையைக் கொடுத்தார்கள். அரசுக்காகக் கூலியை எதிர்பார்க்காமல் கௌரவ உத்தியோகம் பார்க்கும் வணிகனுக்கோ பொதுமக்களிடையே வீண் அவப்பெயர். கருப்பு மார்க்கெட்காரன், கொள்ளை லாபம் அடிப்பவன் என்று பொதுமக்கள் மனத்திலே கெட்ட எண்ணத்தை உண்டாக்கும்படியான சூழ்நிலையை அரசு ஏற்படுத்தி விடுகிறது.

வணிகன் வரி கொடுக்கத் தயங்கவில்லை;
தன்னைப் பலி கொடுக்கவும் தயாரில்லை.


அதே சமயத்தில் வணிகரை அரசும் கௌரவமாக நடத்துவதில்லை. வரியை ஏய்ப்பவன் என்ற அவச் சொல் அவனுக்கு. பொது மக்களிடமிருந்து கோடி கோடியாக வரி வசூலித்துக் கொடுக்கும் வணிக இனத்துக்கு உரிய கௌரவத்தை அரசு தருவதில்லையே என்ற ஏக்கமும் அதனால் ஏற்பட்டுள்ள உள்ளக் குமுறலும் வியாபாரிகளிடையே இன்று பெருமளவில் தலைதூக்கி நிற்பது மகாநாட்டிலே பேசியவர்களின் சிம்மக் குரலிலே தெரிந்தது.

கடந்த ஆண்டு ஒரு வியாபாரி ஒரு லட்ச ரூபாய்க்கு வியாபாரம் செய்ததாகக் கணக்குக் காட்டினால் அடுத்த ஆண்டும் அதே அளவுக்கோ அல்லது அதிகமாகவோ அவன் வியாபாரம் செய்திருக்க வேண்டும். குறைந்தால் உடனே அந்த வியாபாரி வரி ஏய்ப்புச் செய்து விட்டான் என்று அரசு அதிகாரிகள் குற்றஞ் சாட்டிக் கொடுமைப் படுத்துகிறார்களாம். இது எவ்வகையில் நியாயமாகும்? ''வியாபாரிகளாகிய எங்களிடம் நம்பிக்கை இல்லையானால் அரசே மக்களிடம் நேரிடையாக வரி வசூல் செய்து கொள்ளட்டுமே. கடைக்கு ஓர் அரசு அதிகாரி வந்து உட்கார்ந்து பில் போடும்போது தங்களுக்கு உரிய வரியை வாங்கிக் கொள்ளட்டும். அந்த நிலை ஏற்படுமாயின் மக்களுக்கும் அரசாங்கம் எப்படியெல்லாம் எவ்வளவுக்கு வரி போடுகிறது என்னும் உண்மை புரியும். வியாபாரிகள் பழியையும் பளுவையும் தங்கள்மீது சுமத்திக் கொண்டு எப்படி அரசைப் பாதுகாத்து வருகிறார்கள் என்பதை ஆளுனர் புரிந்துகொண்டு வியாபாரிகளை நண்பர்களாக நடத்த வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

வரி உயர விலை உயரும்
விலை உயர மக்கள் நிலை குலையும்
மக்கள் நிலை குலைய ஆட்சிநிலை என்னாகும்?

'பில் வேண்டாம் சார், வரி போடாதீர்கள்!' என்று பொதுமக்கள் வியாபாரிகளிடம் சொல்வது சகஜம். பில் போடு நான் வரி கொடுக்கிறேன் என்று எவரும் சொல்ல மாட்டார்கள். ஏன், அரசாங்க அதிகாரிகளே கூடத் தங்கள் வீடுகளுக்குப் பணம் கொடுத்துப் பொருள் வாங்குகிற நிலை வரும்போது 'பில் வேண்டாம்; வரி போட வேண்டாம்' என்று தானே கூறுகிறார்கள்? எனவே இந்த வரி மறைப்புக்கு வியாபாரிகள் மட்டும் பொறுப்





ரிக்ஷா வாகனம் முதன் முதலில் உபயோகத்துக்கு வந்தது ஜப்பான் நாட்டில்தான். அவர்கள் இதனை 'மனித சக்தியால் இயங்கும் வண்டி' என்று அழைத்தனர். ஜப்பானிய மொழியில் இதற்கான சொல் ஜின்-ரிகி-ஷா என்பதாகும். இதுவே சுருக்கமாக ஆங்கிலத்தில் 'ரிக்ஷா' என்று உருப்பெற்றது.

- "கோவை அரசு"

பல்ல' என்ற வணிகர்களின் வாதத்திலேயும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

மிக மிகக் குறைந்த விகிதத்தில் (ரூபாய்க்கு ஒரு தம்பிடி) குடி ஒழிப்பினால் ஏற்படும் நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த விற்பனை வரிச் சட்டம் இன்று அரசுக்கு அட்சய பாத்திரமாக விளங்கி வருகிறது. 'விற்பனை வரியின் விகிதம் உயர உயர வரி மறைப்பும் அதிகமாகத்தான் ஆகும்' என்கிறார்கள் வியாபாரிகள்.

சம்பளத்துடன் அரசு பணி புரியும் ஊழியர்களுக்குச் சலுகைகள் — இது சரி

சம்பளமின்றி வரி வசூல் செய்யும் வணிகர்களுக்குச் சங்கடங்கள் — இது சரியா?

'லாட்டரிச் சீட்டு' என்னும் சூதாட்டத்துக்கு உடந்தையாக அதை விற்றுத் தரும் ஏஜண்டுகளிடம் அரசு காட்டும் நம்பிக்கையையும் மரியாதையும்கூடவா கோடி கோடியாக வரி வசூலித்துக் கொடுக்கும் வியாபாரிகளிடம் காட்டக் கூடாது?' என்று ஒரு வியாபாரி அன்பர் மனம் புழுங்கிக் கூறியபோது வேதனையாகத்தான் இருந்தது.

வியாபாரிகள் என்றால் குற்றம் இழைக்கும் இனத்தவர் என்ற கண்ணோட்டத்துடன் செயல்படுகிறார்கள் அதிகாரிகள். அந்த நிலை மாற வேண்டும். வரி வசூல் அதிகாரிகள் திடீரென்று கடைகளில் கூட்டமாகப் புகுந்து சோதனை என்ற பெயரில் அநாகரிகமாக நடந்து கொள்ளும் அநீதியை நிறுத்த வேண்டும். 'ஒழுங்கான கணக்குகள் ஒத்துக்கொள்ளப்படுகின்றன' என்கிற நம்பிக்கையை வியாபாரிகளிடத்தில் அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டும்.

மார்க்கெட்டிங் கமிட்டிச் சட்டம் என்று ஒன்று. இதனால் வணிகர்களுக்கு என்ன நன்மை என்பது அதை அமல்படுத்தும் அதிகாரிகளுக்கே கூடத் தெரியாது. ஆண்டு தோறும் லைசென்ஸ் கட்டணம் வாங்குகிறார்கள். அதையும் வருஷா வருஷம் அவர்கள் தங்கள் இஷ்டப்படி நிர்ணயிக்கிறார்கள். பெறும் கட்டணத்துக்குப் பதிலாக வியாபாரிகளுக்கு அவர்கள் செய்யும் நன்மை என்ன என்றே புரியவில்லை. 'இப்படி ஒரு சட்டம் தேவைதானா?' என்று கேட்டார்கள் இம்மகாநாட்டில் வணிகப் பெருமக்கள்.

ஊதியம் பெறாத ஊழியராக வரி வசூலித்துக் கொடுக்கும் வணிகர்களுக்கு அரசு அன்பளிப்பாக அளித்திருக்கும் 'சர்சார்ஜ்' பற்றியும் காரசாரமாகப் பேசினார்கள். இந்த 'சர்சார்ஜ்', தாங்கள் வியாபாரத்தில் போட்டுள்ள முதலை 'முதலையைப் போல் விழுங்கி விடும்' என்று வியாபாரிகள் வர்ணித்தார்கள். இதை ஒழித்துக் கட்டுவதில் எல்லாரும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

வரப்போகும் ஆபத்து ஒன்றையும் இம்மகாநாட்டில் வியாபாரிகள் பொதுமக்கள் நலன் கருதி வெளியிட்டார்கள். மத்திய அரசின் எக்ஸைஸ் வரி மட்டும் விதிக்கப்பட்டு விற்பனை வரி விதிக்கப்படாமல் இருக்கும் ஜவுளி, சர்க்கரை, புகையிலை இவற்றுக்கு விற்பனை வரியும் விதிக்கலாமா என்று அரசு ஆலோசித்து வருகிறதே அந்த ஆபத்தைத்தான். 'இப்படி வரிக்கு மேல் வரி விதித்துக் கொண்டே போவது உங்களுக்குச் சரியா?' என்று கேட்டது வணிகர் மகாநாடு.

தங்கள் குறைகளை எடுத்துக் கூறிப் பரிகாரம் காணும் வாய்ப்புப் பெற சட்ட மன்ற மேல் சபையில் வணிகர்கள் தொகுதி ஒன்றை ஒதுக்கும்படியும் மகாநாடு வற்புறுத்தியது.

விற்பனை வரி வசூலிக்கும் வணிகர்களின் வாக்காளர் பட்டியல் தயாரித்து மாவட்டத்துக்கு ஒரு தொகுதி வீதம் ஒதுக்க வேண்டும் என்று அரசுக்குச் சிபாரிசு செய்தது மகாநாடு.

மகாநாட்டில் தொடக்க உரை நிகழ்த்தச் சென்னையிலிருந்து தென்னிந்திய வர்த்தக சபைத் துணைத் தலைவர் திரு சித்ரா எஸ். நாராயணசாமி எம். எல். சி. அவர்கள் வந்திருந்தார். இன்றைய அரசியல் நிலை பற்றியும் அதில் வணிகர் படும் அல்லல் பற்றியும் அழகான சொற்பொழிவை ஆங்கிலத்தில் நிகழ்த்த அதைப் பேராசிரியர் சி. எஸ். கமலபதி அவர்கள் அழகு தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார்.

தலைமையுரை நிகழ்த்திய திருச்சி மாவட்ட வியாபாரக் கழகத் தலைவர் திரு பி. ஆர். சீதாராம அய்யர் மாவட்டத்தின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள வியாபாரிகளைத் தாம் நேரில் கண்டு அரசு அதிகாரிகளால் அவர்கள் படும் இன்னல்களைக் கேட்டுத் துடித்துப்போன நிலையை விளக்கி, "என்ன கஷ்டம் நேரிடினும் வணிகர்களாகிய நாம் நேர்மை வழியில் நடப்பதினின்று வழுவவே கூடாது" என்று வற்புறுத்திக் கருத்து மிக்கதோர் உரை நிகழ்த்தினார்.

செயலாளர் திரு மாயாண்டி அவர்களின் வரவேற்புரை வணிகரின் உண்மை நிலையை, நொந்த உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் உணர்ச்சி மிக்கதொரு சொற்பெருக்கு.

சிறப்புச் சொற்பொழிவாற்றியவர்களும், வணிகர் படும் துயரத்தை உணர்ச்சிவசப்பட எடுத்துரைத்த காட்சி மறக்க முடியாததாக இருந்தது.

தீர்மானங்கள் பலவற்றை நிறைவேற்று முன் மகாநாட்டுக்கு வந்திருந்த **2300**க்கும் அதிகமான வர்த்தகப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் எழுந்து நின்று 'இனி வியாபாரிகளாகிய எங்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று முடிவு கட்டி 'எங்கள் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கக் கடவுளே அரசுக்கு நல்ல புத்தி கொடு' என்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்ட காட்சி நெஞ்சை நெகிழ்த்துவதாக இருந்தது.

— **கௌசிகன்**



ர.சு.நல்லபெருமாள்
எழுதும்
புதிய தொடர் கதை
போராட்டங்கள்
கல்கி
ஆகஸ்ட் 2உ இதழில்
ஆரம்பம்

காலத்தை இணைக்க பலமானதொரு

பாலம்



மர்மலாங் பாலம், சைதாப்பேட்டை, மதராஸ்

இது ஒரு சாதாரண பாலமல்ல. வளம்மிகு வருங்காலத்திற்குச் செல்லும் பாலம். வருங்காலத்தை வளமாக்கிடும் பாலம். இன்றும், நாளையும், என்றென்றும் நீடித்து நல்வாழ்வை அளிக்கும் பாலம்... ராம்கோ சிமெண்டால் உறுதியாக்கப்பட்ட பாலம்.

MADRAS CEMENTS LIMITED
RAMCO BRAND PORTLAND CEMENT

உறுதிக்கும் உழைப்பிற்கும் ஓர் எடுத்துக்காட்டு "ராம்கோ"

உற்பத்தியாளர்: மதராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட்
தொழிற்சாலை: ராமசாமிராஜா நகர், துலுக்கப்பட்டி, ராமநாதபுரம் ஜில்லா, ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 'ராமமந்திரம்', ராஜபாளையம்
ராஜபாளையம் "ராம்கோ" குழுவைச்சார்ந்த ஸ்தாபனம்

ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கி விட்டன



இந்திரா பார்த்தசாரதி

3



பானுவின் தாயார் நடிக்கக் கூடியவள் என்பதைத் தெரிந்து கொண்டும், தன்னிடம் அதைச் சொல்லாததைக் கண்டு திலகம் தன் கணவன் அமிர்தத்தைச் சாடினாள்.

''நான் கேள்விப்படற விஷயங்களையெல்லாம் உன்கிட்டே சொல்லிக்கிட்டு இருக்கமுடியுமா?'' அமிர்தம் கேட்டான்.

திலகம் தன்னைக் கடுமையாகப் பார்க்கிறாள் என்பதை உணர்ந்தான் அமிர்தம். ஆனால் அவன் அவள் பக்கம் திரும்பவே யில்லை.

ஸஃப்தர்ஜங் விமான நிலையத்தைத் தாண்டி, லட்சுமிபாய்நகர் தொடங்கும் 'டிராஃபிக் ஜங்ஷனில்' சிவப்பு சிக்னல் கண்டு காரை நிறுத்தினான் அமிர்தம்.

'' லட்சுமிபாய் நகர்னா, இங்கே தானே இறங்கணும்?'' என்றாள் திலகம். அமிர்தம் அவளை வீட்டருகே கொண்டு விடுவதை அவள் விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

''சரி.... நான் இறங்கிக்கிறேன்.... பக்கந்தான், நடந்து போயிடறேன் '' என்றாள் பானு.

'' வேண்டாம்... எந்த 'பிளாக்' சொல்லு, அங்கேயே போய் இறக்கிவிடறேன்....'' என்றான் அமிர்தம்.

''நோ... ப்ளீஸ்... என்னாலே உங்களுக்குச் சிரமம் எதுக்கு? கித்வாய் நகருக்கு நீங்க இப்படியே நேரே போயிடலாம், இல்லையா?....''

''வீண் வாக்குவாதங்கள் வேண்டாம்! எந்த பிளாக், சீக்கிரம் சொல்லு.

'கிரீன் ஸிக்னல்' வந்திடுச்சு....எங்க ஸிரமத்தைப் பத்தி நீ அலட்டிக்கிட்டு இருக்காதே.....''

பானு கொஞ்சம் தயங்கினாள். திலகமும் அதைச் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தாளோ என்னவோ?

திலகம் வாயைத் திறக்கவில்லை.

அமிர்தத்துக்குக் கொஞ்சம் எரிச்சலாக வந்தது. ''சொல்லும்மா சீக்கிரம், காரை இப்படியே நிறுத்திக்கிட்டு இருக்க முடியுமா ?''

'' இடது பக்கம் திரும்பி நேரே போங்க.... 'ஸி' பிளாக். 645ம் நம்பர் வீடு......''

காரை வேகமாக இடது பக்கம் திருப்பினான் அமிர்தம். ஒரு டி.டி.யு. பஸ் மோத வந்தது. மயிரிழையில் தப்பினான்.

'' உற்சாகத்தில் என்ன செய்யறோம்னு உங்களுக்குப் புரியலியா?'' என்றாள் திலகம்.

''டோன்ட் பி ஸில்லி...'' அமிர்தத்தின் கைகள் 'ஸ்டியரிங்'கில் இறுகின.

''இங்கேயே நிறுத்துங்க....'' என்றாள் பானு.

காரிலிருந்து இறங்கிய பானு திலகத்திடம் புன்னகையுடன் விடை பெற்றுக் கொண்டாள்.

''மாமி! ரொம்ப தாங்க்ஸ்... ரொம்ப நேரமாயிடுத்து. இல்லாட்டா உங்களை வீட்டுக்கு அழைச்சிண்டு போயிருப்பேன்....''

''பரவாயில்.லே'' என்றாள் திலகம்.

''வரேன், மாமா....''

அமிர்தத்துக்கு அவள் தன்னை 'மாமா' என்று சொன்னது என்னவோபோல் இருந்தது. அவன் ஒன்றும் பேசாமல் காரைத் திருப்பினான்.

திலகம் சிரித்தாள். அவள் கோபமாக இருக்கிறாள் என்று நினைத்த அமிர்தத்துக்கு அவள் சிரிப்பது வியப்பைத் தந்தது. அவள் பக்கம் அவன் திரும்பிப் பார்த்தான். '' அவ 'மாமா'ன்னு சொன்னது 'கரெக்ட்', நாற்பது வயசாயிடுச்சி இல்லே....?''

''நீ 'மாமி'யாயிருக்கிறப்போ, நான் 'மாமா'வா இருக்கிறதுதானே, 'லாஜிகல்' ? இதுக்கு என்ன சிரிப்பு வேண்டியிருக்குது ?....''

''கோபப்படாதீங்க.... நாம விரும்பினாலும் விரும்பா விட்டாலும் வயசு ஆவத்தான் ஆவும்....''



ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கி விட்டன



இந்திரா பார்த்தசாரதி

3

பானுவின் தாயார் நடிக்கக் கூடியவள் என்பதைத் தெரிந்து கொண்டும், தன்னிடம் அதைச் சொல்லாததைக் கண்டு திலகம் தன் கணவன் அமிர்தத்தைச் சாடினாள்.

''நான் கேள்விப்படற விஷயங்களையெல்லாம் உன்கிட்டே சொல்லிக்கிட்டு இருக்கமுடியுமா?'' அமிர்தம் கேட்டான்.

திலகம் தன்னைக் கடுமையாகப் பார்க்கிறாள் என்பதை உணர்ந்தான் அமிர்தம். ஆனால் அவன் அவள் பக்கம் திரும்பவேயில்லை.

ஸஃப்தர்ஜங் விமான நிலையத்தைத் தாண்டி, லட்சுமிபாய்நகர் தொடங்கும் 'டிராஃபிக் ஜங்ஷனில்' சிவப்பு சிக்னல் கண்டு காரை நிறுத்தினான் அமிர்தம்.

'' லட்சுமிபாய் நகர்னா, இங்கே தானே இறங்கணும்?'' என்றாள் திலகம். அமிர்தம் அவனை வீட்டருகே கொண்டு விடுவதை அவள் விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.



''சரி.... நான் இறங்கிக்கிறேன்.... பக்கந்தான், நடந்து போயிடறேன் '' என்றாள் பானு.

'' வேண்டாம்... எந்த 'ப்ளாக்' சொல்லு, அங்கேயே போய் இறக்கிவிடறேன்....'' என்றான் அமிர்தம்.

''நோ... ப்ளீஸ்... என்னாலே உங்களுக்குச் சிரமம் எதுக்கு? கித்வாய் நகருக்கு நீங்க இப்படியே நேரே போயிடலாம், இல்லையா?....''

''வீண் வாக்குவாதங்கள் வேண்டாம்! எந்த ப்ளாக், சீக்கிரம் சொல்லு.

'கிரீன் ஸிக்னல்' வந்திடுச்சு....எங்க கிரமத்தைப் பத்தி நீ அலட்டிக்கிட்டு இருக்காதே.....''

பானு கொஞ்சம் தயங்கினுள். திலகமும் அதைச் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தாளோ என்னவோ?

திலகம் வாயைத் திறக்கவில்லே.

அமிர்தத்துக்குக் கொஞ்சம் எரிச்ச லாக வந்தது. ''சொல்லும்மா சிக்கிரம், காரை இப்படியே நிறுத்திக்கிட்டு இருக்க முடியுமா ?''

'' இடது பக்கம் திரும்பி நேரே போங்க.... 'ஸி' பிளாக். 645ம் நம்பர் வீடு......''

காரை வேகமாக இடது பக்கம் திருப்பினுன் அமிர்தம். ஒரு டி.டி.யு. பஸ் மோத வந்தது. மயிரிழையில் தப்பினுன்.

'' உற்சாகத்தில் என்ன செய்ய றேம்னு உங்களுக்குப் புரியலியா?'' என்றுள் திலகம்.

''டோன்ட் பி ஸில்லி...'' அமிர் தத்தின் கைகள் 'ஸ்டியரிங்'இல் இறுகின.

''இங்கேயே நிறுத்துங்க....'' என்றுள் பானு.

காரிலிருந்து இறங்கிய பானு திலகத்திடம் புன்னகையுடன் விடை பெற்றுக் கொண்டாள்.

''மாமி! ரொம்ப தாங்க்ஸ்... ரொம்ப நேரமாயிடுத்து. இல் லாட்டா உங்களே வீட்டுக்கு அழைச் சிண்டு போயிருப்பேன்....''

''பரவாயில்.லே'' என்றுள் திலகம்.

''வரேன், மாமா....''

அமிர்தத்துக்கு அவள் தன்னே 'மாமா' என்று சொன்னது என்னவோபோல

போல் இருந்தது. அவன் ஒன்றும் பேசா மல் காரைத் திருப்பினுன்.

திலகம் சிரித்தாள். அவள் கோப மாக இருக்கிறுள் என்று நினைத்த அமிர் தத்துக்கு அவள் சிரிப்பது வியப்பைத் தந்தது. அவள் பக்கம் அவன் திரும்பிப் பார்த்தான். '' அவ 'மாமா'ன்னு சொன்னது 'கரெக்ட்', நாற்பது வய சாயிடுச்சி இல்லே....?''

''நீ 'மாமி'யாயிருக்கிறப்போ, நான் 'மாமா'வா இருக்கிறதுதானே, 'லாஜி கல்' ? இதுக்கு என்ன சிரிப்பு வேண்டி யிருக்குது ?....''

''கோபப்படாதீங்க.... நாம விரும் பினுலும் விரும்பா விட்டாலும் வயசு ஆவத்தான் ஆவும்....''



''அந்த ஃபானைக் கொஞ்சம் வேகமா கப் போடுங்க...புழுக்கமாக இருக்குது.''

அக்டோபர் மாத இறுதியில் அவளுக்குப் புழுக்கமாக இருக்கிறதென்றால், அது உடலைப் பற்றிய புழுக்கமாக இருக்க முடியாது.

அமிர்தம் ஃபானை வேகமாகச் சுழல விட்டான். ''விளக்கு வேணுமா?''

அவள் வேண்டாமென்று தலையை அசைத்தாள். அமிர்தம் மேஜையிலிருந்த கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். ரேடியம் ஒளியில் மூன்று என்று தெரிந்தது.

''உங்களைப் பத்தி நான் பெருமைப் பட்டுக்கிட்டிருக்கிறது - ஒரே ஒரு விஷயந்தான். அதுவும் இல்லேன்னு ஆயிடிச்சி....''

''என்ன விஷயம்?''

''இன்னொரு பொம்பளே உங்களுக்கு இருந்திருப்பான்னு நான் நினைக்கலே.''

''நீ அப்படி நினைச்சுக்கிட்டிருந்ததுக்கு என்னை நீ பொறுப்பாளியா ஆக்க முடியாது....''

''நீங்க ஏன் முதலிலேயே இதைச் சொல்லலே....?''

'' 'மு த லி லே யே'ன்னு என்ன அர்த்தம்?''

''கல்யாணம் ஆனவுடனே....''

'' சொல்லி யிருந்தால் என்ன செய்திருப்பே ?''

''உங்களைப் பத்தி இத்தனை நாளும் ஒரு தப்பான அபிப்பிராயம் வைச்சிக்கிட்டிருந்து, திடீர்னு ஏமாந்து போறது எப்பேர்ப்பட்ட அவஸ்தைன்னு உங்களுக்குச் சொன்னா புரியுமா ?''

திலகம் இப்படிப் பேசுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அவள் அழுது ஆரவாரம் செய்வாள் என்றுதான் அவன் நினைத்தான். அவளால் இப்படித் தன் மன உணர்வை ஆராய்ந்து விளக்கமாகச் சொல்ல முடியும் என்பது அவனுக்குப் புது அநுபவம். அவளை அவன் கூர்ந்து நோக்கினான்.

''யார் அவள்?'' என்றாள் திலகம். குரலில் கண்ட நிதானம் அவனைக் கொஞ்சம் பயப்படச் செய்தது.

''அவள் இங்கேயில்லே...அமெரிக்காவிலே இருக்கா. கல்யாணத்துக்கு அப்புறம் அவளை நான் பார்க்கவே இல்லே.''


''யார் கல்யாணத்துக்குஅப்புறம்...''

''நம்ம கல்யாணத்துக்கப்புறம்? அது கிடக்கட்டும், வக்கீலா நீ, இப்படிக் குறுக்கு விசாரணை செய்ய....?''

திலகம் கட்டிலை விட்டு இறங்கினாள். வராந்தா கதவுப் பக்கமாகப் போய் நின்றாள்.

''அதான், இத்தனை நாளா நீங்க என்கிட்ட மனசைவிட்டுப் பழகலியா?''

கையில்லாதவர் கார் ஓட்ட முடியுமா ?



முடியும் என்கிறார் இந்த இளைஞர் !

காரைச் செலுத்தும் கைச்சக்கரம் (ஸ்டீயரிங் வீல்) இல்லாத மோட்டார் காரை ஒரு விபத்தில் இரு கைகளையும் இழந்த எபராட் (வயது 29) என்ற இளைஞர் உருவாக்கியுள்ளார். தமது இரு கால்களைக் கொண்டே காரை இயக்கி ஓட்டுகிறார். - (யூ. பி. எல்.)

''அதுக்கும் இதுக்கும் சம்பந்தமே கிடையாது. கல்யாணத்துக்கு அப்புறம் பார்க்கலேன்னு சொல்றேன், என்னென்னமோவெல்லாம் சொல்லிக்கிட்டிருக்கியே....!''

''பார்க்கலேன்னா என்ன? நினைச்சுக்கிட்டிருந்தீங்க. இது பெரிய துரோகம்.''

அமிர்தம் கட்டிலில் படுத்துக் கொண்டான்.... ''சரி, சரி... படுத்துக்க.... ராத்திரியிலே சண்டை வேண்டாம்.''

''இன்னிக்கு அவள் ஞாபகம் ஏன் வந்தது?''

அமிர்தம் பதில் சொல்லவில்லை.

''நான் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள் திலகம்.

''என்ன சொல்லட்டுமா?'' கட்டிலில் அவன் அவள் பக்கம் திரும்பினான்.

'' சாயந்திரம் வீடு மட்டும் கொண்டு போய் விட்டீங்களே, அந்தப் பொண்ணு, பானுவோ, கூனுவோ, அவளோட அம்மாதான் உங்களுடைய மாஜி காதலி. அதான், அவ அம்மா நடிப்பான்னு யார் சொன்னான்னு நான்

கேட்டதுக்கு அப்படி எரிஞ்சு விழுந்திங்க: இப்பொத்தான் எல்லாம் புரியறது.''

''இப்பொ நிறுத்தப் போறியா இல்லியா, உன் மடத்தனமான பேச்சை. டாக்கிங் அப்லெல்யூட் ராட்...''

''ஏன் இவ்வளவு கோபம் வரது? நான் சொல்றது உண்மைங்கிறது உங்க மனசாட்சிக்குத் தெரியும். அவ அமெரிக்காவிலே இருக்கா, ஆஸ்திரேலியாவிலே இருக்காங்கிறதெல்லாம் கதை.''

அமிர்தத்துக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவள் பேசப் பேசக் கோபத்தில் அவன் உடம்பு இலேசாக ஆடியது.

வராந்தா கதவைத் திறந்துகொண்டு வெளியே போய் நின்றான்.

அவன் இதுவரையில் இந்த அளவுக்கு ஆத்திரம் அடைந்ததே யில்லை.

தனக்கு ஏன் இவ்வளவு கோபம்? இல்லாதது ஒன்றைத் திலகம் கற்பித்துச் சொன்னதினலா?... அல்லது, பானுவுக்கு இருபது இருபத்திரண்டு வயது இருக்கலாம், அப்படியானால் அவள் தாயாருக்கு நாற்பது வயதுக்குக் குறையாது. அவளுடன் தன்னைச் சம்பந்தப்படுத்தித் திலகம் கூறியதினால், தன் வயதின் மீது தனக்கு ஏற்பட்ட கோபத்தினலா?... அந்தப் பெண் தன்னை 'மாமா', என்று சொன்னதில் என்ன தவறு? — புருவுக்குக் கொடுத்தது போல் இளமையைத் தரத் தனக்கு ஒரு யயாதியும் தோன்றவில்லை........

.... இளமை என்பது எவ்வளவு இனிமையான பருவம்! அப்பொழுது அவனுக்கு நித்யாவை முதன் முதலாகச் சந்தித்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. 'ரீகல்' தியேட்டர். 'த்ரீ காய்ன்ஸ் இன் ஏ பவுன்டன்' என்ற திரைப்படத்தைப் பார்த்து விட்டுத் திரும்பி வரும்போது பஸ் ஸ்டாப்பில் அவள் நின்று கொண்டிருப்பதை அவன் பார்த்தான். கரோல்பாக்கில் அவன் வசித்து வந்த வீட்டின் முதல் மாடியில் அவள் அம்மாவுடன் இருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரிந்த விஷயம். அடிக்கடி பார்த்திருக்கிறானே தவிர பேசியதில்லை.

அப்பொழுது அவனிடம் 'ஸ்கூட்டர்' இருந்தது. அவளை ஸ்கூட்டரில் அழைத்துச்சென்றால் என்ன என்று அவனுக்குத் தோன்றியது. அவளை அணுகிக் கேட்டான். அவள் முதலில் தயங்கினாள். பிறகு ஒப்புக் கொண்டாள்.

அப்பொழுது அவன் இளைஞன். அதுவே நித்யாவின் தயக்கத்துக்குக் காரணம்.

ஆனால் இன்று பானு உடனே தன்னுடன் காரில் வரச் சம்மதித்துவிட்டாள். இது அவன் வயதின் மீது அவள் வைத்த நம்பிக்கை.... அவள் ஓரளவு தன் தயக்கத்தைக் காட்டியிருக்கக் கூடாது? — சே!... என்ன முட்டாள் தனமான நினைவு!... திலகம் அருகில் இருந்த போது அவள் ஏன் தயங்க வேண்டும்?

நித்யாவை அன்று அவன் கொண்டு போய் விட்டதும், அவள் அவனை மாடிக்கு அழைத்தாள். அவன் மறுக்கவில்லை. ஆனால் அவள் தாயார் என்ன சொல்வாளோ என்ற பயம் அவனுக்கு இருந்தது. ஆனால் நித்யா அவனை அறிமுகப்படுத்தியவுடன் அவள் அம்மா அவனைச் சந்தோஷத்துடன்வரவேற்றாள்.

''பஸ் வரத்துக்காகக் காத்திருந்தாள்னா ராத்திரி பத்து மணிக்குத்தான் இவ வந்திருப்பா....''

முற்போக்கான குடும்பம் என்று அவனுக்குப்பட்டது. நித்யாவின் அப்பா போன பிறகு அவர்களைக் காப்பாற்றி வந்தவர் நித்யாவின் மாமா. ஏற்கனவே 'இண்டர்மீடியட்' வரையில் படித்திருந்த அவள் அம்மா எம்.ஏ. ஹோம் சையன்ஸ் பாஸ் செய்து விட்டு, தில்லிக் கல்லூரி ஒன்றில் வேலையாக இருந்தாள்.

''சாப்பிட்டுப் போகலாமே, மெஸ் சாப்பாடுதானே?'' என்றாள் அவள்.

''பரவாயில்லே, உங்களுக்குச் சிரமம்...?'' என்று திரும்பிப் போக முற்பட்டான் அமிர்தம்.

''நோ... நோ... நீங்க நித்யாவோட பேசிண்டிருங்கோ, ஒரு நிமிஷத்திலே எல்லாம் ஆயிடும்....''

''ஒரு நிமிஷம்'' அரை மணியாயிற்று. நித்யா அவனுடன் பேசிக் கொண்டிருந்ததால், அந்த அரைமணி அவனுக்கு ஒரு நிமிஷம் போலத்தான் இருந்தது. நித்யா ஏதோ கம்பெனியில் வேலையாக இருந்தாள். ரிஸப்ஷனிஸ்ட். அவனை அடிக்கடி பார்த்திருப்பதாகவும் பல சமயங்களில் பேச நினைத்ததாகவும் சொன்னாள். அவனும் தன்னைப் பற்றிக் கூறினான். சென்ட்ரல் சர்வீஸ் பரீட்சையில் தேறிய, 'அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் ஓர் ஆணி!' இவ்வாறு அவன் சொன்னதற்காக அவள் சிரித்தாள்.... அது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவள் பொழுதுபோக்கு, புகைப்படம் பிடித்தல்... தான் எடுத்த பல படங்களை அவள் காண்பித்தாள். ''எனக்குக் குறிப்பிட்ட பொழுது போக்குன்னு ஒண்ணும் கிடையாது. அழகான பொருள்களையோ, விஷயங்களையோ, ரஸிப்பதைத் தவிர'' என்றான் அவன். அவள் முகம் சிவந்தது.....

அன்றிரவு சாப்பிட்டுவிட்டுத் திரும்பும் போது, மணி பதினொன்று. (தொடரும்)

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

37 (ii)

உலகத்தில் ஏன் வெவ்வேறு மதங்களும் ஆசாரங்களும் இருக்க வேண்டும் என்று கேட்கலாம். ஆன்மா ஒரு பான்மையதாயினும் சரீரங்கள் பல வேறு வடிவங்கள் கொண்டிருக்கின்றன. சரீரங்கள் பலவாயினும் ஆன்மா ஒன்றே. ஒரு மரத்தில் பல கிளைகள் இருப்பது போல் தர்மம் என்பது ஒரே மரம். சமயங்கள் கிளைகளையும் இலைகளையும் போல, வேறுபட்டிருந்தாலும் மரம் ஒன்றே. எல்லா மதங்களுமே கடவுளின் பிரசாதம். மக்களுடைய குற்றங் குறைகள் கலந்தபின் அவை பல வடிவங்கள் அடைகின்றன. ஆண்டவனுடைய வரப்பிரசாதமானது சொல்லுக்கு அடங்காது. சொற்களில் அமைக்கப் பார்க்கிறோம். அவரவர்களுக்கு எட்டும் அளவில் சொற்களைத் தேடி அமைக்கிறார்கள். அதில் குற்றம் குறை இருப்பதில் வியப்பில்லை. முனிவர்களுடைய மொழிகளையும் பலவிதமாக வியாக்கியானம் செய்கிறோம். இந்த வியாக்கியானமே சரி, அந்த வியாக்கியானமே சரி என்று பிடிவாதம் செய்வது மூர்க்கமாகும். அவனவனுடைய அறிவின்படி அவனவன் காண்பது சரியேயாகும். ஆனபடியால் பொறுமை வேண்டும். பிறர் மதங்களையும் கௌரவிக்க வேண்டும். அப்படிப் பொறுக்கவும் மதிக்கவும் பழக்கப்படுவதினால் தன்னுடைய சொந்த சமயத்தில் பக்தியோ அக்கறையோ குறைய வேண்டியதில்லை. தத்தம் சமயங்களில் அதிக சிரத்தையே உண்டாகும். பிற மதங்களை மதிப்பதனால் நம்முடைய ஞானம் பெருகும்; குறையாது. ஞானம் என்பது பிடிவாத மூர்க்கத்தனமல்ல. அதற்கு நேர் விரோதம். நல்ல ஞானம் அடைந்தோமானால் சமய பேதங்கள் கரைந்து போகும். சகிப்புத் தன்மை தானாகவே உண்டாகும். நம்முடைய மதத்தை நாம் சரியாக உணர வேண்டுமானால் பிற மதங்களைப் பொறுத்துக் கொள்ளும் வழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் இதுவரையில் சொன்னதிலிருந்து ஒரு தவறான எண்ணம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. நீதி அநீதி, தர்மம் அதர்மம், நன்மை தீமை இவற்றுக்கு இடையிலுள்ள வித்தியாசத்தை மறந்துவிடும்படி நான் சொல்லவில்லை. மறந்து விடலாகாது. உலகத்தில் மக்கள் கொண்டிருக்கும் முக்கியமான சமயங்கள் எல்லாம் நன்மைக்கும் தீமைக்கும் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை ஒரேவிதமாக ஒப்புக் கொண்டிருக்கின்றன. அதைப் பற்றி அபிப்பிராய பேதம் கிடையாது. எல்லாச் சமயங்களிலுமே பக்தர்கள் அதர்மத்தை வெறுத்துத் தர்மத்தைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். நன்மைக்கும் தீமைக்கும் உள்ள பேதத்தை நன்றாகக் கண்டு அடிப்படைக் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கும் சமயங்களைப் பற்றித்தான் நான் இதுவரையில் சொன்னது.

தீமையை வெறுக்க வேண்டும், குற்றத்தையும் பாபத்தையும் வெறுத்தாலும் குற்றம் செய்து விட்டவனை அன்போடு நடத்தப் பயில வேண்டும். பாபிகளிடம் அன்பு செலுத்துவதினால் பாபத்தின் பேரில் நமக்குள்ள வெறுப்புக் குறையக்கூடாது.

(யங் இந்தியா 2-10-30)

மெய்ப்பொருளை நாம் பூரணமாகக் காண முடியாது. ஒவ்வொரு முனையிலிருந்து ஒவ்வொரு பாகம்தான் காண முடியும். மக்கள் அனைவரும் ஒரேவிதமாகச் சிந்தனையைச் செலுத்த முடியாது. ஆனபடியால் சமய விஷயங்களில் பரஸ்பரம் நாம் பொறுமையோடு நடந்து கொள்ள வேண்டும். சகிப்புத் தன்மையே தர்ம மார்க்கமாகும். அவனவனுக்குத் தன்னுடைய மனச்சாட்சியே சட்டம். ஆனால் தன்னுடைய மனச்சாட்சியைப் பிறர் பேரில் புகுத்துவது அநீதியான அட்டகாசமாகும். மற்றவர்களுக்கு அவரவர்களுடைய மனச்சாட்சி உண்டு என்பதை உணர்ந்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(யங் இந்தியா 23-9-26)



Sunsilk cares–
with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair... revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.




Sunsilk - more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140

காணக் கிடைக்காத தங்கம்



ஜகசிற்பியன்

அத்தியாயம் பதினைந்து

"ஆயா! கம் ஆன் ஆயா! என் சைக்கிளைப் பின்னாலே இழுத்து விடு! ஓடியா!'' என்று மழலை மொழியில் கூவினான் குழந்தைப் பையன்.

இவ்வளவு நேரம் அந்தப் பெண்மணியை இந்தப் பிள்ளைகளின் தாயார் என்று நினைத்துக் கொண்டிருந்த அருணகிரிக்கு அவள் 'ஆயா' என்பது இப்போதுதான் புரிந்தது.

அவனை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே ஒய்யார நடை போட்டுத் 'தள்ளு வண்டி'யைத் தள்ளிக்கொண்டு வந்த அவள், ''ஏன்டா, மக்குப் பிளாஸ்திரி! சைக்கிளை இப்படியா கண்மண் தெரியாம ஓட்டறது? யூ... ஸ்டுப்பிட்! நான்சென்ஸ்!'' என்று செல்லக் கோபத்துடன் சிடுசிடுத்தாள். பிறகு சைக்கிளைப் பின்னால் பிடித்து வெடுக்கென்று இழுத்து வேறு பக்கம் திருப்பி விட்டாள்.

''தாங்க் யூ, ஆயா!'' என்று சொன்ன குழந்தைப் பையன் சிரித்துக் கொண்டே உற்சாகத்துடன் புல் தரையில் சைக்கிளை ஓட்ட ஆரம்பித்தான்.

''இந்தப் பிள்ளை எப்பவுமே இப்படித்தாங்க தம்பி! வேணுமின்னே சைக்கிளை எது மேலேயாச்சும் இடிச்சுட்டு உசிரு போறாப்பலே கத்துவான்; இது அவனுக்கு ஒரு விளையாட்டு!'' என்று அருணகிரியைப் பார்த்து நாணப் புன்னகையுடன் சொன்னாள் அந்த ஆயாக்காரி.

முன்பின் அறிமுகமில்லாத அவள் தன்னிடம் இத்தனை சகஜமாகப் பேசியதைக் கேட்டு உள்ளூற வியப்படைந்து போனான் அருணகிரி. அசட்டுச் சிரிப்புடன், ''ஆமாம்மா! சின்னப் பிள்ளைங்கன்னா அப்படித்தான் விஷமம் பண்ணும்; நாமதான் கொஞ்சம் உஷாரா யிருந்து கவனிச்சுக்கணும்!'' என்று தயங்கிய குரலில் கூறிக் கொண்டே அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினான்.

அவளும் அவனைப் பார்த்தாள். மறுகணம், ஏதோ காணாத அதிசயத்தைக் கண்டு விட்டதுபோன்ற ஒரு விதப் பிரமிப்புடன் கூடிய பரபரப்போடு அவனை விழியசைக்காமல் பார்த்தாள். அவளது வியப்புக்கும் பிரமிப்புக்கும் காரணம் என்ன? சந்தேகமில்லை; அருணகிரியின் கவிதையெழில் வாய்ந்த கவர்ச்சிமிக்க கண்களே அவளை அப்படி ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்க வேண்டும்!

தன்னை அவள் குறி வைத்துச் சுடுவதுபோல் பார்ப்பதைக் கண்டு கூச்சம் அடைந்து போன அருணகிரி, அந்தக் குழந்தைப்

பையன் சைக்கிள் விடுவதை வேடிக்கை பார்ப்பவன் போன்று மெல்லத் திரும்பி நின்று கொண்டான்.

''உஷாரா கவனிக்கிறதாவது !.... கொஞ்சம் அசந்து மசந்தா அவனோட அப்பாரையே கவனிச்சுப்பிடுவான் தம்பி! அவ்வளவு துடுக்கு! குறும்புன்னு குறும்பு, சகிக்க முடியாது ! பாருங்களேன், இந்தமாதிரி சைக்கிள் இது வரையில் மூணு வாங்கியாச்சு. ஒரு மாசத்துக்காவது ஒண்ணை உருப்படியா வைச்சிருக்க மாட்டான். அச்சு வேறு, ஆணி வேறு உடைச்சுப் போட்டுப்பிடுவான். ஒரு சைக்கிள் விலை என்ன தெரியுமா ? நாற்பத்தைஞ்சு ரூபா!'' என்று தன் வயசுக்கு மீறிய அலுக்கல் குலுக்கல் அபிநயப் பாங்குடன் கூறிச் சிரித்தாள் அந்த ஆயாக்காரி. ''அவன் பயப்படறதே என் ஒருத்திக்குத்தான்! வேறே யாருக்கும் எதுக்கும் அஞ்சறதில்லே!'' என்றாள் பெருமை வழியும் குரலில்.

'' செல்லமா வளர்கிற பிள்ளையாயிருக்கும்!'' என்று ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காகச் சொல்லிச் சிரித்தான் அருணகிரி.

''அப்படி ஒண்ணும் இல்லே, தம்பி! செல்லம் கொடுக்கிறதுக்கு அம்மாக்காரி கூட இல்லே. இந்தப் பெண் குழந்தையைப் பெத்த நாலாவது மாசம் அந்த மகராசி செத்துப் போயிட்டாள். பாட்டிகிட்டத்தான் வளருதுகள். அப்பாரு பெரிய பணக்காரர். ரெண்டு நர்ஸரித் தோட்டங்களுக்குச் சொந்தக்காரர்.''

தான் கேட்காத — தனக்குத் தேவை இல்லாத — விவரங்களை யெல்லாம் அவள் வலிய வந்து விஸ்தாரமாகச் சொல்வது அருணகிரிக்கு என்னவோ போல் இருந்தது. ஆனாலும் புன்முறுவலுடன் தலையாட்டிக் கேட்டுக் கொண்டே அந்தக் குழந்தைப் பையன் சைக்கிள் விடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உண்மையில் அக்காட்சி அவனுக்கு மிகவும் உற்சாகத்தை அளிப்பதாக இருந்தது. சிறுவன் தன் வயசுக்கு மீறிய முரட்டுத்தனத்துடன் வேகமாய்ச் சைக்கிளை மிதித்து ஓட்டுவதும், வட்டம் அடிப்பதும், நேரே போய்ச் சடாரெனத் திரும்பும் போது கீழே சாய்ந்து விடாமல் சமாளிப்பதும், செடிகளையும் மரங்களையும் சுற்றிச் சுற்றி வருவதும், ஒரு கையால் சைக்கிளைப் பிடித்து விரைவாக ஓட்டிக் கொண்டே குறிப்பிட்ட செடி ஒன்றின் பூவை, அல்லது இலையை இன்னொரு கையால் வெடுக்கென்று பறித்து வந்து தன் தங்கைப் பாப்பாவின் மேல் வீசியெறிந்து விட்டுப் போவதும் — பார்க்க வெகு சுவாரசியமாக இருந்தன.

இவற்றை யெல்லாம்விடக் குழந்தைப் பையனின் அந்த மூன்று சக்கர சைக்கிள் வண்டியே அருணகிரியின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. அவ்வண்டியின் அமைப்பையும், அது இயங்கும் விதத்தையும் 'தொழில் நுணுக்கக் கண்ணோட்டத்துடன்' பார்த்தவாறு சிமெண்ட் பெஞ்சில் மறுபடியும் உட்கார்ந்து கொண்டான்.

அந்த ஆயாக்காரி தள்ளு வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்து அருணகிரிக்குப் பின்னால் நிறுத்திவிட்டு அதன் கைப் பிடிமீது முழங் கையை ஊன்றி மோவாயைத் தாங்கியவாறு நின்று அவனையே குறுகுறுவெனப் பார்த்தாள். வண்டியில் உட்கார்ந்திருந்த குழந்தை சிணுங்க ஆரம்பித்தது.

அருணகிரி மெல்லத் திரும்பிப் பார்த்து இளநகை பூத்துவிட்டு மீண்டும் அந்த மூன்று சக்கரச் சைக்கிளில் கவனத்தைச் செலுத்தினான்.

பொழுது சாய்ந்து பார்க் விளக்குகளெல்லாம் எரியத் தொடங்கி விட்டன. இளஞ் ஜோடிகளும், வயசான கிழங்கட்டைகளும் தவிர, குடும்ப சகிதமாய் வந்திருந்தவர்களெல்லாம் எழுந்து செல்ல ஆரம்பித்தனர். வசந்த மண்டபத்தில் இசை விருந்து அளித்துக் கொண்டிருந்த வாத்தியக் கோஷ்டியினரும் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு புறப்பட ஆயத்தமாயினர். பனிப் படலம் இலேசாக விரிந்து காற்றைச் சிலுசிலுப்பாக்கியது.

''அழாதே, பேபி! வீட்டுக்குப் போகலாம், அழாதே!'' என்று கொஞ்சலாகக் கூறிய ஆயாக்காரி குனிந்து குழந்தைக்குக் கம்பளிக் குல்லாய் போட்டுக் கட்டிவிட்டு நிமிர்ந்து, ''ஏ, சஞ்சீவ்!'' என்று குரல் கொடுத்தாள்.

தொலைவில் சைக்கிள் விட்டுக் கொண்டிருந்த குழந்தைப் பையன் வேகமாய்த் திரும்பி வந்தான்.

''வீட்டுக்குப் போகலாமா?''


''ஊகூம். நான் இன்னும் கொஞ்ச நேரம் விளையாடப் போறேன்.''

''அடிதான் கிடைக்கும்! நேரமாச்சு; டாடி திட்டுவாரு! வா, போகலாம்.''

பையன் சைக்கிளுடன் தப்பிச் செல்ல முயன்றான். ஆயாக்காரி சைக்கிளைத் தாவிப் பிடித்து இழுத்து நிறுத்தினாள். ''இப்படி அடம் பண்ணினே, நாளைக்கு நிச்சயம் இங்கே அழைச்சுக்கிட்டு வர மாட்டேன்.''

''யூ ஆர் ஏ வெரி பேட் ஆயா!'' என்று கோபமாகப் பல்லைக் கடித்துக்





மக்களின் தேர்வு

லிப்டன்



ஹிமாலயன் கோல்டன் டஸ்ட்

லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் சாதாரண டீ அல்ல!

எல்லோருக்கும் உகந்த எல்லாச் சிறப்புகளும் இணைந்தது. இயற்கையிலேயே எல்லோரும் விரும்பி ஏற்பது இது!

கெட்டியான பானம்; நிறைந்த செறிவு; சிறந்த மணம். இவை மட்டுமல்ல—ஒவ்வொரு பாக்கெட்டிலும் அதிக அளவு கோப்பைகள் கிடைக்கின்றன. பருகுவதில் ஓர் இன்பம்; பிறருக்குத் தருவதிலும் ஓர் இன்பம்!

மக்களின் தேர்வு—அதுவே லிப்டன் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் டீ.

லிப்டன் என்றாலே நல்ல டீ

LHGC.9 TAM

கூறிக்கொண்டே தன் சைக்கிள் பெடல் மீது ஓர் உதைவிட்டான் சிறுவன். பிறகு அரை மனத்தோடு குழந்தைப் பையன் சைக்கிளை மெல்ல ஓட்டினுன்.

"சஞ்சீவ்! இந்த மாமாவுக்கு டாட்டா சொல்லலே? சொல்லுடா!" என்ருள் ஆயாக்காரி ஒரு குலுக்குச் சிரிப்புடன்.

பையன் சைக்கிளை ஓட்டிக்கொண்டே பின்னுல் திரும்பி அருணகிரியைப் பார்த்து இடது கையை உயர்த்தி, "டாட்டா!" என்ருன்.

இதைக் கண்டு திருதிருவென விழித்த அருணகிரி, சட்டென்று கையை ஆட்டி அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

ஆயாக்காரிக்குச் சிரிப்புப் பொங்கியது. பேபி வண்டியைத் தள்ளிக்கொண்டே தலை குனிந்து சிரித்தாள் அவள்.

அருணகிரிக்கு வெட்கமாகி விட்டது. தலையைத் தொங்கப் போட்டபடி சிமெண்ட் பெஞ்சின்மீது நகத்தால் கிறலானுன். சற்றைக்குப்பின் அவன் மெல்லத் தலை நிமிர்ந்த போது அவள் வெகு தூரம் போய் விட்டிருந்தாள்.

"நல்ல வேடிக்கை! நல்ல பொழுது போக்கு!" என்று புன்னகையுடன் தனக்குள் முனகியபடி பெஞ்சில் நெடுக உடலைக் கிடத்திப் படுத்தான் அருணகிரி. மனத்தில் பழைய சிந்தனைகள், கவலைகள், பயங்கள் எல்லாம் மீண்டும் தலைதூக்கின.

'சே!' என்று தன்னையே வெறுத்து முனகியவாறு திடுமென்று எழுந்து தன் வீட்டை நோக்கி நடக்கலானுன்.

அவன் வீடு வந்து சேர்ந்தபோது இரவு மணி எட்டுக்கு மேல் ஆகிவிட்டது. வீட்டில் பிள்ளைகள் கலகலப்பாகப் பேசிச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தனர். முத்தம்மா சமையல் வேலையில் வெகு மும்முரமாய் ஈடுபட்டிருந்தாள். நேற்றிருந்த நிலை இன்று அடியோடு மாறிக் காணப்பட்டது. ரத்தினவேலு சுய நிதானத்துடன் வீட்டுக்கு வந்திருப்பதே இதற்கெல்லாம் காரணம் என்பதைப் புரிந்து கொண்ட அவன் உள்ளூறச் சிரித்துக் கொண்டான். நேற்று அவர் வராமல் போனது பற்றி முத்தம்மா ஏற்கனவே அவரிடம் யுத்தம் நடத்தி முடித்துச் சமாதான உடன்படிக்கைக்கும் வந்து விட்டாள் போலும்!

சாப்பிட்டானதும் அருணகிரி படுக்கையுடன் வராந்தாவுக்கு வந்தான். பரீட்சைக்கான பாடங்களைப் படிக்க வேண்டும் என்று அவன் மனம் துடித்தது. ஆனுல் விளக்கைப் போட்டுக் கொண்டு படிக்கப் பயம். எல்லோரும் தூங்கியபின் நேற்று போல் இன்றும் இவ்வீட்டு எஜமானியின் மகள் நிர்மலா அந்தக் காதல் கடிதம் சம்பந்தமாகத் தன்னிடம் மறுபடியும் ஏதாவது விசாரிக்க வந்து விடுவாளோ என்ற எண்ணமே அவனை அத்தகைய பீதிக்கு உள்ளாக்கியது. துயரம் நெஞ்சைக் கவ்வ, விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையில் சாய்ந்தான்.

நள்ளிரவுக்குப் பின்னும் தூங்காமல் விழித்துக் கிடந்த அவன், இனி அந்தப் பெண் வரமாட்டாள் என்ற நிச்சயம் ஏற்படவே, பயம் தெளிந்து சற்றைக்கெல்லாம் சுகமான நித்திரையில் ஆழ்ந்தான்.

* * *

"ஏண்டா, சோங்கு! இந்த வாரத்திலேயிருந்து உனக்குக் கூலியிலே ரெண்டு ரூபா உசத்தியிருக்கிறேன், தெரியுமா?"

மட்கார்ட் ஒன்றில் ரிவிட் அடித்துக் கொண்டிருந்த அருணகிரி சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

"என்னடா முழிக்கிறே? நிசமாத் தான் சொல்றேன்" என்று என்றைக்குமில்லாத அதிசயமாகச் சிரித்தபடி கூறினுன் ஏழுமலை. "சரி, சரி வேலையைப் பாரு!"

அவ்வளவு இவ்வளவு என்று சொல்ல முடியாத அளவுக்கு ஆச்சரியமாகிவிட்டது அருணகிரிக்கு.

'என் எஜமானன் எப்போது இத்தனை நல்லவனுக மாறினுன்? இது மெய்யான மாற்றம்தானு? அல்லது கசாப்புக்கடைக்குக் கொண்டு போகு முன் ஆட்டுக்குத் தழை போட்டுத் தண்ணீர் காட்டுவது போன்ற ஊனக் கருணையா? என்ன இது விந்தை! தன் அப்பனிடம் போய் என்மேல் ஏதேனும் கோள் மூட்டி விருப்பான் என்றும், அதனுல் ஏழுமலை இன்று என்னைமிக மோசமாகவும் மூர்க்கமாகவும் நடத்தி வேலையை விட்டே துரத்தி விடுவான் என்றும் நான் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாருக நிலைமை இருக்கிறதே! ஒருகால் செல்லத்துரை நேற்று அவ்விஷயத்தைத் தன் தந்தையிடம் சொல்லி யிருக்க மாட்டானே?'

இப்படியெல்லாம் சிந்தனையை ஓட்டியபடி, மட்கார்டில் ஒரு திருகாணிக்கு வாஷர் போட மறந்தவனுய் நட்டை மட்டும் போட்டு ஸ்பானரால் முடுக்கிக் கொண்டிருந்தான் அருணகிரி. மறு கணம் வேகமாகச் சுழன்று வந்த டயர் துண்டு ஒன்று அவன் முதுகைப் படீரெனத் தாக்கியது. 'ஹா' என்று அலறியபடியே பின்னுல் திரும்பினுன்.

"நாமர்தா கய்தே! இன்னுடா வேலை பார்க்கிறே? வாஷர் போடாம முடுக்கினு அந்த நட்டு எப்படிடா டைட் ஆவும்? வேலை செய்யும்போதே புத்தி எங்கனுச்சும் பொறுக்கப் போயிடுதோ?" என்று கோபச் சீறலுடன் கூவினான் ஏழுமலை.

வலி பொறுக்க முடியாமல் முதுகைத் தடவி விட்டுக் கொண்ட அருணகிரி, தான் செய்தது தவறுதான் என்பதை உணர்ந்தவனாய் மௌனமாக வேலையில் தன் கவனத்தைச் செலுத்தலானான்.

பகல் மணி ஒன்று ஆகியது.

"டேய் கண்ணு! நேரமாகலே? சாப்பாடு வைச்சிருக்கிறேன், போய்ச் சாப்பிடுடா!" என்று சொல்லிக் கொண்டே வந்து உட்கார்ந்து வெற்றிலை போடலானான் ஏழுமலை. சற்று முன் அவ்வளவு முரட்டுத்தனமாக அடித்து விட்டுக் கண்டபடி திட்டிய அவனா இவன்? என்ன விந்தையான மனிதன்!

அருணகிரி வேலைகளை ஏறக் கட்டி விட்டு எழுந்துபோய்க் கை, கால், முகம் கழுவிக் கொண்டு சாப்பிட்டு முடித்து வெளியே வந்தான். தன் கடை முதலாளியின் மீது ஏற்பட்டிருந்த ஆத்திரம், கோபம் எல்லாம் இப்போது அவனிடமும் தென்படவில்லை. குருவுக்கு ஏற்ற சீடன்!

வழக்கம் போல் உட்கார்ந்து ஓய்வெடுக்க அந்தப் பள்ளிக் காம்பவுண்டை நோக்கி நடந்தான்.

"அடே தம்பி, இங்கே வரணும்!" என்று கூப்பிட்ட டீக்கடைக் காக்கா, "கொஞ்சம் முன்னாடி உன் அக்கா வந்து இதை உன்கிட்ட கொடுக்கச் சொல்லிக் கொடுத்து விட்டுப் போச்சு! இன்னைக்கு அதோட எசமானி வீட்டிலே என்னமோ விசேஷமாம்" என்றவாறு ஓர் இலைப் பொட்டலத்தை நீட்டினான்.

"இப்பத்தானே நான் சாப்பிட்டேன்!... சரி, கொண்டா!" என்று கூறி அப்பொட்டலத்தை வாங்கிக் கால் சராய் ஜேபியில் திணித்துக்கொண்ட அருணகிரி மேலே நடந்தான்.

இன்றைக்கும் அந்தச் சோற்றுக் கூடைக்காரி வந்திருக்க மாட்டாள் என்ற நினைப்புடன் மதில் சுவர் மேல் படுப்பதற்காகத் தாவி ஏறியவன் திடுக்குற்றுத் தலை நிமிர்ந்தான்.

அங்கே சோற்றுக் கூடையுடன் மரத்தடியில் உட்கார்ந்திருந்த கனகா அவனைப் பார்த்து விட்டுச் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள்.

அருணகிரிக்குத் தன்னை மீறிய ஓர் உற்சாகம் கிளர்ந்தது. அவன் மறு பக்கம் துள்ளிக் குதித்துப் போய் அவள் எதிரில் நின்றான்.

அவள் அவன் வந்ததைக் கவனியாதவள் போல் கூடையில் பாத்திரங்களை அடுக்கிச் சரிப்படுத்தலானாள். அவளது முகத்தில் மகிழ்ச்சிப் பரபரப்பு தென்பட்டதே தவிர அதில் ஒருவித சோகமும் நிழலாடியது.

இடுப்பின் மேல் இடது கையை ஊன்றி நின்றவாறு அவளையே சில விநாடிகள் கூர்ந்து நோக்கிய அருணகிரி தொண்டையை மெல்லக் கமகப்படுத்திக் கொண்டு, "என்ன, ரொம்ப நாளுக்கு ரொம்ப நாள் இந்தப் பக்கமே தலை காட்டலே?" என்றான் குறுநகையுடன்.

அவள் வெடுக்கென்று முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு, "நான் வந்தா என்ன, வராமப் போனா என்ன? இதைக் கேட்கிறதுக்கு யாருக்கும் ரைட் இல்லே!" என்றாள் உள்ளார்ந்த சீற்றக் குரலில்.

"வாஸ்தவம்!" என்று கேலியாகத் தலையாட்டிக் கொண்ட அருணகிரி, "அது சரி; சோறு எல்லாம் வித்து முடிஞ்சு போச்சா?" என்று கேட்டான்.

"இதுவும் அநாவசியமான கேள்வி!"

"ஏன்? நான் துட்டுக் கொடுத்துச் சோறு வாங்கிச் சாப்பிட்டு வந்திருக்கிறேன்...அதனால் இதைக் கேட்க எனக்கு ரைட் இருக்குது!"

சட்டென்று நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள் அவள். பிறகு உடனே தலை தாழ்த்திக் கொண்டு, "சும்மா சொல்லாதீங்க!... நீங்க சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறீங்க!" என்று மெல்லிய குரலில் முணுமுணுத்தாள். பிறகு "அப்படியே சாப்பிடாம இருந்தாலும், பெரிய உசந்த வீட்டுப் பிள்ளை என் மாதிரி ஏழைங்க கிட்ட எல்லாம் சோறு வாங்கிச் சாப்பிடலாமா? சாப்பிட்டா கௌரவம் குறைஞ்சு போயிடறதோடு கூடத் தொண்டையும் கறுத்துப் போய் விடுமே!" என்றாள் குத்தலாக.


அசடு வழியச் சிரித்துக் கொண்ட அருணகிரி, "அடேயப்பா! இந்தப் பொண்ணுங்க லா பாயிண்ட் அடிச்சுப் பேசறதுக்கு எங்கேதான் கத்துக்கிறாங்களோ தெரியலே!" என்று கூறி மீண்டும் நகைத்தான்.

"அப்படி எத்தனை பொண்ணுங்க பேசினதைக் கேட்ட அநுபவமோ?" என்று வேறு பக்கம் பார்த்தபடி வெடுக்கென்று வினவினாள் கனகா.

நறுக்கென்று உதட்டைக் கடித்துக் கொண்ட அருணகிரியின் மனத்தில் நிர்மலாவின் நினைவு ஒரு கணம் மின்னலெனத் தோன்றி மறைந்தது.

"நான் இப்பச் சோறு விக்கிறது வேறு இடம். எல்லாம் வித்துட்டுத் தான் இங்கே வந்தேன். இவையெல்லாம்

நய விலை துணிகள் எவை?



ஹார்வி
டுவின் டஸ்கர்

டிரில் · பாப்ளின் · காபர்டைன் முதலியன

ஹார்வி

டுவின் டஸ்கர்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை


பிளாஸ்டார்ச்
வாங்கும்போது
நீங்கள் பெறுவது
உள்ளும்
புறமும்
உன்னதமான
ஒரே
டார்ச்
PLASTORCH

காலிப் பாத்திரங்கள்'' என்று ஒருவித மிடுக்குடன் அவளே மீண்டும் சொல்லியவாறு கூடையை அப்படியும் இப்படியுமாக அசைத்து ஆட்டினாள்.

''ஓகோ!'' என்று பெரிய மனிதத் தோரணையில் தலையாட்டிய அருணகிரி, ''அப்படியானால் இங்கே ஏன் வரணும்?'' என்று கண் சிமிட்டிக் கேட்டான்.

''என்னமோ வந்தேன்! என்னை வரக்கூடாதுன்னு சொல்ல யாருக்கு ரைட் இருக்குது?''

''கேள்வி என்னமோ ரைட்டா இருக்குது: அதைச் சொல்ற முகம்தான் லெப்டிலே திரும்பி இருக்குது!''

அவள் களுக்கென்றுசிரித்துவிட்டாள்.

அருணகிரி ஓரடி முன்னால் வந்து, ''அது சரி; நீ சாப்பிட்டு விட்டாயா?'' என்று தணிந்த குரலில் கேட்டான்.

''அடேயப்பா! என்ன கரிசனம்?'' என்றாள் கனகா முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு.

''கரிசனம் ஒண்ணுமில்லே; சும்மாத் தான் கேட்கிறேன்.''

''சாப்பிட்டாச்சு!''

''உன் முகத்தைப் பார்த்தாச் சாப்பிட்ட மாதிரி தெரியலே.''

''என் முகத்தை யாரும் பார்க்கத் தேவையில்லே!''

''சரி; உன் கையைக் காட்டு. மோந்து பார்க்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே வெடுக்கென அவளது வலது கையைப் பிடித்து இழுத்துத் தன் மூக்கில் புதைத்து உர்ரென்று மூச்சை வாங்கி முகர்ந்தான் அருணகிரி.

அவள் சடக்கெனத் தன் கையைப் பிடுங்கி உதறிக் கொண்டு பதற்றத்துடன் எழுந்து நின்றாள்.

''பொய்யா சொல்றே? நீ இன்னும் சாப்பிடவே யில்லே!'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்தான் அருணகிரி. ''ஏன் சாப்பிடலே? பாத்திரமெல்லாம் கூடக் காலியா யிருக்குது?''

அவள் மௌனமாய் நின்றாள்.

''வீட்டுக்குப் போய்ச் சாப்பிடு வாயா?''


இதற்கும் அவள் பதில் பேசாமல் இருந்தாள்.

அருணகிரி தன் ஜேபியில் இருந்த பொட்டலத்தை அலட்சியமாக எடுத்துப் பிரித்து, ''இந்தா, இதைச் சாப்பிட்டு விட்டுப் போ!'' என்றவாறு அவளது கையில் திணித்தான். அந்தப் பொட்டலத்தில் மணம் கமழும் சர்க்கரைப் பொங்கலும், இரண்டு வடைகளும் இருந்தன.


கண்களை மலர்த்தி அவனை வியப்புடன் பார்த்தாள் கனகா. அவனும் குறுநகையோடு அவளைக் குறும்பாக நோக்கினான். அப்போது அவளுடைய அழகிய கண்கள் இன்னும் கவர்ச்சியுடன் பிரகாசித்தன. அந்தக் கண்களின் எழிலில் மயங்கித் தடுமாறுகிறவன் போல் ஓரடி பின்னால் நகர்ந்து கொண்ட அவன் பக்கவாட்டில் முகத்தைத் திருப்பித் தோளில் மோவாயைப் புதைய வைத்துக் கொண்டு மெல்லச் சிணுங்கும் குரலில், ''வேணும்! நான் சாப்பிட்டாச்சு!'' என்றாள்.

''சோறுதானே சாப்பிட்டே? பரவா யில்லே; இது பலகாரம்! உட்கார்ந்து சாப்பிடு!'' என்று சொல்லிக்கொண்டே ரொம்பவும் சொந்தத்துடன் இரண்டு கைகளையும் நீட்டி அவளது உருட்சியான தோள்களை மிருதுவாகப் பற்றி அவளைக் கீழே உட்கார வைத்தான். (தொடரும்)

பினகா ஷார்ட் ஹெட்



அதன் குறுந்தலை



புகுந்திட இயலா இடுக்குகளைத் **துலக்கிட**

பிற டூத்பிரஷ்களால் முடியா இடங்களை **அணுகிட**

ஷார்ட்ஹெட், பினகாவின் மழுக்கப்பட்ட முனைகளை உடையவை—ஈறுகளுக்கு ஊறுசெய்யாதவை



ஒரு டூத்பிரஷ் வெறும் டூத்பிரஷ்ஷைவிட உயர்ந்தது அது பினகாவாக இருந்தால்

Binaca®

ULKA-CTB-65 TAM

''அப்பா வந்துட்டார்! அப்பா வந்துட்டார்!''

'' உங்கப்பா எங்கே போலத்துக்குப் போயிருந்தாரா? மின்லாந்துக்குப் போயிருந்தாரா? ஆபீசுக்குப் போயிட்டுத் தானே வர்றார்?''

''நம்ப வீட்டுக்கு ஜனாதிபதி அவர்தானே அம்மா!...நீங்க சொல்லுங்க அப்பா! உங்க பிரேசிதரைப் பார்த்துச் சொன்னீர்களா?''

''எதற்கு?''

''எதற்கா? சரியாப் போச்சு! கல்லூரி அட்மிஷன் ஆரம் பிக்குதுதான்.''

''யாருக்கு?''

'' நம்ம வீட்டு அப்பாதானுன்னு பார்த்தேனா? யாரோ வீடு பார்க்க வந்த மாமா மாதிரி பேசுறாரே!''

''ஐந்து நிமிஷம் அவரை டிபன் சாப்பிட விட்டுட்டு அப் புறம் உங்க பிரலாபத்தை ஆரம்பியுங்களேன்! ஆபீஸிலே மேலே உட்கார்ந்திருக்கிற கடன்காரன் என்னை விரட்டு விரட்டிறானோ? உங்க அப்பா மிரண்டு போய்வந்திருப்பார்.''

''உன் ஸ்லேட்டிலே ஒரு வார்த்தை கரெக்டா செய்வேடி! 'ஐ ஆம் நாட் ஹாப்பி!.... ஐ ஆம் நாட் ஹாப்பி'ன்னு அடிக்கொரு தரம் சொல்லி ஸ்லேட்டுகளையெல்லாம் விசி...''

''ஹாப்பியுமாச்சு ஹிப்பியுமாச்சு! நம்ப வீட்டுக் கல்வித் துறை நிலவரங்கள் எல்லாம் எப்படி?... இப்போ என்ன செய்யறும்?''

''அடேயப்பா! பெரிய மந்திரி! 'பாலிஸி டிஸிஷன்' எடுக் கப் போறார். இனிமே இந்த வீட்டிலே எல்லாம் 'அம்மா மொழி'யிலேயே நடக்கணும்னு ஆரம்பிக்கப் போறார்.''

''அதுக்கென்னடி குறைஞ்சு போச்சு? நீங்களெல்லாம் படிச் சுக் கிழிச்சது போதும். எனக்கு ஒத்தாசையாக வீட்டுலேயே சொந்த பழுகுங்கோன்னு இலிப் பிள்ளை மாதிரி சொல்றேன்!

கவலைக்கு ஒரு ஸீஸன்

– மேனு –

தன்னை புள்ளைன்னு இரண்டு இங்கிலீஷ் வார்த்தைகளைத் தப்பும்தவறுமாக உளறி வாயை மூட வர்றீங்க! அம்மா மொழிக்கு அவ்வளவுதான் மதிப்பு.''

''நான் அரசியல் பேசத் தயாராயில்லே. என்னை உங்க கோஷ்டிச் சண்டையிலே இழுத்து விடாதீங்க!''

''என்னப்பா! இந்த அம்மா எப்பவுமே இப்படித்தான். பொதுக் கூட்டத்திலே கேள்வி கேட்டுக் கலாட்டா பண்ற வங்க மாதிரி....''

''அம்மா உள்ளே போயிட்டா!... நீங்க சொல்லுங்க, அப்பா! நம்ப கீதாவுக்கு ஹைஸ்கூலிலே ஆறாம் கிளாசுக்கு அதுதான் ஸிக்ஸ்த் ஸ்டாண்டர்டிலே அட்மிஷன் வாங்க ணும். டெஸ்டிலே பெயிலாயிட்டா! ஹெட் மிஸ்டிரஸைப் பார்த்து....

''நினைவு வந்துடுத்து! நினைவு வந்துடுத்து! அந்த ஹெட் மிஸ்ட்ரஸ்.....''

''பார்த்துட்டேளா? சீட் கொடுக்கிறேன்னுட்டாளா?''

''யாரோ புடவைக்காரருக்குச் சீட்டுக் கொடுத்தான்னு நினைக்கிறேன்.''

''உங்களுக்குச் சாமர்த்தியம் போதாது! அங்கே போயும் புகையிலையைக் குதப்பிண்டு ஓர் ஓரமா உட்கார்ந்திருப் பீர்கள்.''

''விஷயத்தைக் கேளு! இன்னிக்குக் காலையிலே ஆபீஸுக் குப் பெர்மிஷன் போட்டுட்டு அங்கேதான் போனேன்! என்னைப் போலே பத்து அப்பன்கள் பரிதாபமா நின்னோம். எங்களைப் பார்க்கவே மாட்டேன்னுட்டா!''

''புடவைக்காரர் மாத்திரம் வி. ஐ. பி.யோ?''



''ஸ்கூல் டீச்சர்களுக்கு ஒரே மாதிரியா புடவை சப்ளை பண்ணறவராம். மூட்டையோடு உள்ளே போனார். ஆர்டர் சீட்டை வாங்கிண்டு மூணு மணி நேரம் கழிச்சு வெளியே வந்தார். நான் மாத்திரம் விடாமல் நின்னேன். பியூ னுக்குப் பியூன் ஒருத்தன் வந்து அடுத்த வருஷம்



வந்து அம்மாவைப் பார்க் கச் சொல்லி அன்போடே விடை கொடுத்தான்.''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? தெரு முனைப் பள்ளிக்கூடம் இருக் கவே இருக்கு.''

''பாலு விஷயம் என்ன ஆச்சு? அத்தனை கல்லூரி



யிலும் அப்ளிகேஷன் போட் டிருக்கா. ஒண்ணிலேயிருந் தாவது பி.யூ.சி.க்கு அட்மி ஷன் கார்டு வரலியே!''



திருச்சி பிறந்தது!

திருச்சி என்ற பெயர் எப்படிப் பிறந்தது?

இக் குன்றின் மேல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் சில சமண முனிவர்கள் தங்கித் தவம் புரிந்ததாகவும், அவர்களுள் 'சிரா' என்னும் ஒரு முனிவர் தலைமை பூண்டு இருந்ததாகவும் அக்குன்றிலுள்ள கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

சமணர், பௌத்தர் தங்கித் தவம் புரிந்த இடத்தைப் பள்ளி என வழங்குவது மரபு. ஆகவே சிரா முனிவர் தங்கித் தவம் புரிந்த இடம் சிராப் பள்ளி என வழங்கலாயிற்று. திருச்சிராப்பள்ளி பின்னால் திருச்சி என்று சுருக்கப்பட்டது. திருச்சி என எழுதுவது சரியல்ல. - பி. வி. கி

"அவள் எஸ். எஸ். எல். ஸி.யிலே எத்தனை மார்க்குகள் வாங்கியிருந்தா?"

"முந்நூத்தித் தொண்ணூற்றி ஆறு வாங்கியிருக்கேன், அப்பா!"

"அம்மா, பானு! கல்லூரிக்குப் போக ஆசைப்படாதவா யாராவது இருந்தால் ஒரு ஐந்தாறு மார்க்குகள் கடன் வாங்க முடியுமா பாரேன்."

"உங்களுக்கு எப்போதும் கடன் கைமாத்து இன்ஸ்டால்மெண்டுன்னுதான்."

"கோவிச்சுக்காதே அம்மா! நானூறு மார்க்குக்குக் குறைஞ்ச வாங்கியிருக்கும் குழந்தைகளோடே அப்பாக்களைக் கல்லூரி இருக்கும் ரஸ்தாவிலே நடக்கக் கூடாதுன்னு தடை உத்தரவு போட்டுடுவா போலேயிருக்கு அந்த பிரின்ஸிபால்."

"அப்படின்னு எனக்கு ஸீட்.....?"

"பாடத்தைப் பற்றிக் கவலை இல்லே. கல்லூரி வராந்தாவிலே உட்கார ஏதாவது ஸீட் கொடுத்தாப் போதும்னு கெஞ்சினேன்."

"பிரின்ஸிபால் என்ன சொன்னான்?"

"பிரின்ஸிபாலே யாரு பார்த்தா? யாரு பார்க்க விட்டா? சினிமா வில்லன் மாதிரி ஒரு பியூன் நிக்கறானே! அந்தக் கல்லூரி ரைட்டர் முன்னாலே ஒரு காலத்திலே என்கிட்டே ஒரு காரியத்துக்காக வந்து பல்லே இளித்தான். அந்த நினைவு இருக்குமாக்கும்னு அவனைப் போய்க் கெஞ்சினேன். அவன் என்னைப் பார்த்துப் பல்லைக் கடித்தான்."

"ஜூன் மாசப் பிரமுகர்கள் அவாளெல்லாம். இந்த ஒரு மாசத்திலே எத்தனை பேர் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கறாளோ அத்தனை பேர் வயிற்றெரிச்சலையும் மொத்தமாகக் கொட்டிக் கொண்டுடுவா! அப்புறம் யாரும் தங்களை ஏறெடுத்துப் பார்க்கமாட்டான்னு தெரியும்!"

"நன்னாச் சொன்னே அம்மா! பெற்றோர்கள் வசதியோ அனுமதியோ இல்லாமே குழந்தைகள் கல்லூரிக்கு வர முடியுமா? குழந்தைகள் வந்தால்தானே கல்லூரி நடக்கும். இதற்காவது பெற்றோர்களிடம், இடம் இல்லே என்று சொல்வதானாலும்கூட, கொஞ்சம் கௌரவமாகவும் மனிதாபிமானத்துடனும் நடந்து கொள்ளக் கூடாதா? இது தெரிய மாட்டேனென்கிறதே! பல்லி, ஓணான், கரப்பான்பூச்சி மாதிரின்னு நினைக்கிறா?"

"அப்புறம் என்ன பண்ணப் போறீங்க?"

"நாளைக்கு மறுபடியும் போறேன்! ஏனம்மா மாலா! உன் விஷயம்! உன் பி.ஏ. அட்மிஷன் விஷயமா கார்டு ஏதேனும் வந்ததா?"

"அதற்கும் நீங்கதானே போய்ப் பார்க்கணும். ஒரே கல்லூரிக்குத்தான் போட்டிருக்கேன்! ஹூம்! யார் சிபாரிசு செய்வாளோ?"

"ஆஹா!... நினைவு வந்துடுத்து! நான் இப்பவே கிளம்பறேன்."

"எங்கேன்னு நாங்க கேட்கலே? எப்படியாவது இடம் பிடிக்க வழி கண்டுபிடிச்சுண்டு வாங்கோ."

"அந்த வழியே இப்பத்தான் மின்னல் மாதிரி தோன்றியது!"

* * *

"அப்பா சிரிச்சுண்டு வர்றார்! நல்ல சமாசாரம் வரப் போகிறது!"

"யாரையோ பார்த்துட்டு வந்திருக்கார்! மந்திரியா? வைஸ் சான்ஸலரா?"

"அவர்களை எல்லாம்விடப் பெரிய இடம்! ரொம்பப் பெரிய இடம்!"

"கல்லூரி டிரஸ்டியா?"

"இந்த உலகத்துக்கெல்லாம் டிரஸ்டி! நான் கோவிலுக்குப் போனேன்! இந்தக் குழப்பத்திலிருந்து என்னை விடுவி என்று பிரார்த்தனை செய்தேன்! பதிலும் கிடைத்தது."

"பக்கத்திலிருந்த மலையாள ஜோசியர் கிட்டேயும் போயிருப்பேள்! நாலணாவுக்குக் கிடைத்த தலைவலி!"

"மலையாள ஜோசியரைப் பார்க்கலே! மலையாளச் சமையற்காரரைப் பார்த்தேன். என்கூட அந்த நாளில் இண்டர்மீடியட் வாசித்த கிட்டப்பாதான் மாலா விண்ணப்பம் போட்டிருக்கிற கல்லூரி பிரின்ஸிபால் வீட்டிலே சமையல்காரனும்! மாலா, பானு இரண்டு பேருக்கும் அவன் ஸீட் காரண்டி பண்ணிட்டான்! அவனுக்கு இருக்கிற 'வாய்ஸ்' மந்திரிக்குக்கூடக் கிடையாது. காலம்பர பிரின்ஸிபால் வீட்டுக்கு என்னை வரச் சொல்லிட்டான்."

"நான் மாத்திரம்தான் தெருமுனைப் பள்ளிக்கூடத்துக்கே போகணுமாக்கும்."

"இதோ! ஏன் மூஞ்சியைத் தூக்கறே! கொஞ்சம் சிரி! உனக்கு அட்மிஷன் ஹைஸ்கூலிலே நாளைக்குக் காலம்பற."

"போங்கப்பா! இதும் என்ன பப்பர் மின்ட் பாப்கார்ன் வாங்கித் தராப்பிலேயா?"

"அசடு! அந்த ஹெட்மிஸ்டிரஸ் நவக்கிரகத்தைச் சுற்ற வந்திருந்தாள். நானும் கூடவே சுத்தினேன். அப்போ என்னுடைய பிரலாபத்தை யெல்லாம் சொன்னேன். ஒரு 'ஸீட்' காலி இருக்காம். நாளைக்கே...."

"அப்பா!... நீங்க ஒண்ணும் சொப்பனம் காணலியே!...."

"உங்களையெல்லாம் கல்லூரி, பள்ளிக்கூடம் இதுகளிலே சேர்க்கிற வரை எனக்குத் தூக்கம் ஏது? அப்புறம்னு சொப்பனம்! எல்லாம் நிஜம்! பெரிய டிரஸ்டியின் அருள்!"



திருத்தணிகை

ஸ்ரீ சுப்ரமண்யசுவாமி

ஆடிக் கிருத்திகை தெப்போத்சவப் பெருவிழா

27·7·70 முதல் 29·7·70 முடிய

27·7·70– ஆடி கிருத்திகை


பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புஷ்பக்காவடி செலுத்தல்
கண் கொள்ளாக் காட்சி

ஆயிரமாயிரம் மக்கள் முடி காணிக்கை கொடுத்தல் இத்தலத்தின் தனிச் சிறப்பு

**ஐந்தாம் படைவீடான தணிகையில் அழகன் குமரனைக் கண்டு
அவன் அருள் பெற்றுய்ய வாருங்கள்.**

தேவஸ்தான நிர்வாகிகள், திருத்தணிகை.

தேவஸ்தான நிலையங்களிலேயே தலைமுடி காணிக்கை செலுத்த வேண்டுகிறோம்.



ஒரே ஒரு

திருச்சி மாவளவன்



வானத்தில் குவிந்து கிடந்த மேகக் குன்றுகளெல்லாம் ஏதோ ஓர் அதிர்ச்சியில் ஒன்றோடு ஒன்று நிலைபெயர்ந்து மோதி மழையாகப் பெய்தும் — இந்த மண்ணைச் சூழ்ந்துள்ள வெப்பம் இன்னும் அடங்காமல் ஒருவித ஆதிக்கத்தில் கட்டுண்டு உயிர்களையெல்லாம் எரித்துக் கொண்டிருந்தது.

எங்கிருந்தோ மழையில் நனைந்தபடி வேகமாக ஓடி வந்த பறவை ஒன்று படபடப்போடு அந்த இலை உதிர்ந்து போன மொட்டை மரத்தில் அமர்ந்தபடி, இரண்டு சிறகுகளையும் மாறி மாறி விரித்து அந்தச் சிறகுகளில் படிந்துள்ள நீர்த் துளிகளை ஒரு விதச் சிலிர்ப்போடு உதிர்த்துக் கொண்டிருந்தது.

கடந்த ஒரு வாரமாகப் படுத்த படுக்கையாய் ஜுரத்தில் படுத்திருந்த மாலதி, அன்று தான் கண்களைத் திறந்து ஒருவித உற்சாகத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தாள். மெதுவாக இரண்டு கைகளையும் படுக்கையில் ஊன்றியபடி எழுந்து, அருகிலுள்ள இரண்டு ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டுச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த கடிகாரத்தை விரக்தியோடு நோக்கியபோதுதான் 'ராகவன் இன்னும் ஆபிசிலிருந்து வரவில்லையே?' என்று ஏங்கினாள். மழைக் காற்று ஏதோ ஒரு குளுமையைச் சுமந்து வந்து வறண்டு கிடக்கும் அவள் முகத்தில் ஒருவித சுகத்தை அள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது.

மணி ஏழு அடித்தது.

மாலதி தன்னைச் சூழ்ந்துள்ள ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு விதமாகக் கற்பனை செய்தபடி தனக்குத் தானே ஏதோ ஒரு அழுத்தத்தில் தவித்துக் கொண்டிருந்தாள். மனத்தில் நிலைகொள்ளாத துடிப்புணர்வுகள் அவளை அந்த நேரத்தில் என்னவோ செய்து கொண்டிருந்தன.

காலையில் வந்த அந்தக் கடிதத்தைத் தலையணைக்குள் மறைத்து வைத்தது — அப்போது தான் அவளுக்கு அதைப் பற்றிய ஞாபகம் வந்தது. விழிகளுக்கிடையே கசிந்து கொண்டிருந்த கண்ணீரை விரல் நுனியில் வழித்தெறிந்து விட்டு மீண்டும் அந்தக் கடிதத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். தாயாரின் அன்பு தரைமட்டமாகியும் அவளுடைய இதயம் நெருப்பில் விழுந்த மலரெனக் கருகிக் கொண்டிருந்தது.

வெகு நாட்களுக்குப் பிறகு ராகவனின் இடைவிடாத பலவந்த முயற்சியினால் மாலதி, தன் தாய்க்கு எழுதிய கடிதத்துக்குப் பதிலாக வந்ததுதானே — அந்தக் கடிதம்!

'இதை அவரிடம் காட்டி அவருடைய உள்ளத்தைப் புண்ணாக்கக் கூடாது' என்று எண்ணிக் கொண்டாள்.

ராகவன் அப்போதுதான் உடல் முழுதும் நனைந்து படபடப்போடு உள்ளே நுழைந்தான். கடந்த ஒரு வாரமாக அமைதியில்லாத நிலையில் துடித்துக் கொண்டிருக்கும் அவனது மன உணர்ச்சிகளின் கொந்தளிப்பை அவனது மழையில் நனைந்த முகம் தெளிவாக எடுத்துக் காட்டியது.

கொண்டுவந்த மருந்துப் புட்டியை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, திறந்து கிடந்த வெளிக் கதவைத் தாளிட்டபடி ஏதோவொரு சிந்தனையில் அலைமோதியவாறு அவனுடைய அறைக்குச் சென்றுவிட்டான். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மாலதியின் அருகில் வந்து நின்றான். 'எப்படி இருந்தவள் இப்படிச் சீர்குலைந்து போனாளே?' என்ற ஏக்கத்தின் பெருமூச்சு ராகவனின் இதயத்தையே வாட்டி வருத்தெடுத்து விட்டது.

''மாலதி! இன்னிக்கு உடம்பு எப்படி இருக்கு?'' என்று ராகவன் பக்கத்து ஸ்டூலில் இருந்த பிளாஸ்கை எடுத்து அதில் உள்ள காப்பியை ஊற்றிக் கொடுத்தான்.

''பரவாயில்லீங்க. நேத்திக்கு இன்று எவ்வளவோ தேவலாங்க!'' என்று மாலதி இருமியபடி கூறினாள்.

''பயப்படாதே மாலதி! இனிமே நீ கவலைப்பட வேண்டிய அவசியமே இருக்காது. உன்னுடைய வாழ்க்கை வெகு சீக்கிரத்திலே பூத்துக் குலுங்கப் போகுது!'' என்று ராகவன் மாலதியைத் தேற்றினான்.

ஏதோ ஓர் எண்ணத்தில் மாலதி கருணை ததும்பும் விழியோடு ராகவனையே பார்த்துக்


கொண்டிருந்தாள். பிறகு அவளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ''இனிமேல் நான் யாருக்கும் பாரமா இருக்க விரும்பலிங்க, மிஸ்டர் ராகவன். எனக்காக நீங்கள் இவ்வளவு தூரம் எதுக்காகச் சிரமப்படணும்?'' என்று வேதனையோடு சிரித்தாள்.

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது மாலதி. உன்னுடைய வாழ்க்கைக்கு உயிரூட்ட நான் ஒரு முடிவு செய்திருக்கிறேன். நான் வேலை பார்க்கிற ஆபீஸிலே 'மூர்த்தி' என்று ஒருத்தன் என்னோடு இருக்கான். அவன் ரொம்பவும் நல்லவன். நீ அவனை ஒருமுறை பார்த்தின்னு உன்னுடைய எண்ணத்தையே மாத்திடுவே. அவனிடத்தில் உன்னைப் பற்றி ரொம்ப தூரம் எடுத்துச் சொல்லியிருக்கேன். நாளைக்கே இதைப் பற்றி ஒரு முடிவு சொல்றதாக என்கிட்டே அவன் சொல்லியிருக்கான். உன்னுடைய உடம்பு குணமானதும் எல்லாக் காரியமும் நல்லபடியாகவே முடிஞ்சிடும்'' என்றான். எவ்வளவுதான் ராகவன் சமாதானம் சொன்னாலும், மாலதியின் எண்ணங்கள் அதை ஏற்றுக் கொள்வதாக இல்லை. முடிந்து போன ஒரு கதையை மீண்டும் விளக்கமில்லாமல் விவரித்துக் கொண்டிருக்கும் வேலையற்ற வேலையாகத்தான் இருந்தது அவளுக்கு — ராகவனின் அந்தப் பேச்சு.

ராகவன் போனபிறகு மாலதி விழிகளில் பொங்கி நின்ற கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைத்து விட்டு வேறு பக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. ராகவனும் படிக்கவும் முடியாமல் படுக்கவும் முடியாமல் ஏதோ ஓர் ஊமைத் துயரத்துக்குள் துடித்துக் கொண்டிருந்தான். அமைதியில் புதைந்து கிடக்கும் - அந்த நள்ளிரவில் அடிக்கொரு தடவை மாலதியின் இருமல் ஒலிதான் ராகவனின் நினைவைச் சூன்யகளமாக்கிக் கொண்டிருந்தது.

இந்த ஒரு வருடத்தில் அவளுடைய அறையில் தங்கியிருந்தாளியாகத்தானே மாலதியை ராகவன் கருதியிருந்தான். எத்தனையோ தடவை, மாலதி தனது மனக் குறிப்பை, உள்ளுணர்வை வெளிப்படையாகவும், வேறு வகையாகவும் ராகவனுக்கு வாய்ப்புக் கிட்டும்போது உணர்த்தியிருக்கிறாள். அவற்றை யெல்லாம் அவன் புரிந்து கொண்டும், ஏனோ ஏதும் புரியாதவன்



போல நடித்து வந்ததையும் மாலதி இன்னும் மறந்திருக்க நியாயமில்லை. அப்படி அவளை வெறுக்கும்படி அவள் என்ன தவறு செய்து விட்டாள்?

ராகவனால் இதற்கு மேல் இந்த மனப் போராட்டத்தில் கலந்துகொள்ள உறுதியற்ற உணர்ச்சிகள் இல்லாததால் தடுமாறினான். இனம் புரியாத ஒருவகைச் சிலிர்ப்பில் அவனது உள்ளத்தின் அசைவுகள் கலந்த போது அவனுக்கு இந்த உலகத்தின் மதிப்பே மறந்துவிட்டது. அறையில் ஒரே புழுக்கமாக இருந்ததால் மொட்டை மாடிக்குச் சென்று வருவோம் என்று எண்ணி அறையை விட்டு வெளியே வந்தான்.

சுமதி மட்டும் ராகவனை வஞ்சிக்காமல் இருந்திருந்தால் இவ்வளவு நிகழ்ச்சிகளும் நடந்திருக்காதே! ஒரே ஆபீசில் வேலை பார்த்து வந்த ராகவனும் சுமதியும் மற்றவர்கள் பொறுமைப்படும்படியல்லவா பழகி வந்தார்கள். ஆனால் அவர்கள் இருவரும் எவ்வளவு சீக்கிரம் முயன்று காதல் வலையைப் பின்னினார்களோ அவ்வளவு சீக்கிரம் அதைப் பிரித்து விடுவார்கள் என்று யாருமே எதிர் பார்க்கவில்லை.

மூன்று வருடங்களுக்குமுன் ஒரு நாள் பரபரப்புடன் ராகவன் ஆபீசுக்கு வந்தபோது, அவனுக்காக ஒரு செய்தி மிகவும் பரிதாபத்தோடு காத்திருந்தது. ராகவனோடு பணியாற்றும் மற்றவர்களின் பார்வைக்கு ராகவன் ஒரு கேள்விக்குறியாகவே தென்பட்டான். அதே அலுவலகத்தில் பணியாற்றும் ஹெட் கிளார்க் சுந்தரத்தை சுமதியே மனமுவந்து நேற்று மாலைதான் யாருக்கும் தெரியாமல் ரகசியமாகப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டாள் என்பதை ஆபீஸ் பியூன் மூலம் ராகவன் கேட்டபோது முதலில் அதை நம்ப மறுத்தான். பின்னர் அக்கருத்தை வலியுறுத்த அன்று நடந்த சில நிகழ்ச்சிகளின் பின்னணியை ரகசியமாகப் பியூன் எடுத்துச் சொன்னபோது ராகவனால் அங்கு நிலையாக நிற்க முடியவில்லை. வேகமாக அங்கிருந்து சுமதி இருக்கும் அறையை நோக்கி நடந்தான். அந்த அறைக்குள் நுழைந்தபோது, சுமதியும் ஹெட் கிளார்க் சுந்தரமும் மிக அருகருகில் உட்கார்ந்து தங்களை மறந்தபடி சிரித்து மகிழ்ந்திருப்பதைப் பார்த்தவுடன் ராகவன் அங்கிருந்து வேகமாகத் திரும்பித் தன்னுடைய அறைக்கே வந்துவிட்டான். சுமதியின் நயவஞ்சகத்தைப் புரிந்து கொண்ட ராகவனால் அமைதியாக இருக்க முடியவில்லை. இப்படியொரு நிலை இவ்வளவு கேவலமாக வரும் என்று கனவில்கூட அவன் எண்ணவில்லை.

பிறகு ராகவன் ஆபீசுக்கு ஒரு வாரம் லீவு போட்டு விட்டு அத்துயரத்திலிருந்து விடுபட எந்தெந்த ஊர்களுக்கெல்லாமோ சென்று வந்தான். ராகவன் ஊருக்குத் திரும்பி வரும்போது ஒரு திட்டவட்டமான முடிவோடுதான் வந்தான். அந்த முடிவை அவன் மேற்கொள்ளுவதற்கு முன் சுமதியும், ஹெட் கிளார்க் சுந்தரமும் இரண்டு நாட்களுக்கு முன்னரே தங்களுடைய வேலைகளை ராஜிநாமாச் செய்துவிட்டு டெல்லிக்குப் பறந்து விட்டார்கள் என்பதை ஆபீஸ் நண்பன் ஒருவன் மூலம் தெரிந்து கொண்டபோதுதான் அவனுக்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டது.

அதன் பிறகு ராகவன் நடந்து முடிந்து போன அந்தச் சம்பவத்தை வெறும் கனவாகவே கருதி அதனை மறந்துவிட்டான். பின்னர் தனக்குத் தானே ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு, அதன் வழியில் எவ்வித பரபரப்புக்கும் இடம் கொடுக்காமல் தன் உள்ளத்தை ஒரு நிலைக்குக்கொண்டு வந்தான். வாழ்க்கை என்பது சோதனைகளால் வளர்ந்ததுதானே! ராகவன் தன்னுடைய ஆசைகளையும் அசட்டுத்தனமான பருவ எண்ணங்களையும் மனப் பக்குவம் என்ற தீயில் கருக்கி விட்டு ஒருவித உணர்வில் வாழ்க்கையோடு வாழ்க்கையாக நாட்களை நகர்த்தி வந்தான்.

திடீரென்று கீழிருந்து வந்த மாலதியின் அவலக் குரல் அந்த இரவின் அமைதியைக் குலைப்பதாக இருந்தது. ராகவன் அந்தச் சத்தத்தைக் கேட்டதும், தன்னுடைய பழைய ஞாபகங்களிலிருந்து விடுபட்டு, வேகமாக மாடிப் படிகளின் வழியாகக் கீழே இறங்கி வந்தான்.

மாலதி படுக்கையிலிருந்து நிலைகுலைந்தவாறு கீழே மயங்கிக் கிடந்ததைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனான். உடனே பக்கத்தில் கூஜாவில் இருந்த தண்ணீரை எடுத்து அவள் முகத்தில் தெளித்தான். வாடி வதங்கிய அந்த மலர் முகத்தில் குளிர்ந்த தண்ணீர் பட்டதும் ஒருவிதச் சிலிர்ப்பில் மூடியிருந்த இமைகள் இரண்டும் மெதுவாகத் திறந்தன.


அவள் பதில் ஏதும் பேசாமல் விழிகளை ஏக்கத்தோடு அலைய விட்டு ராகவனைப் பார்த்தபோது ஒருவித நன்றி உணர்வு கலந்த கருணையின் தவிப்பு தேங்கிக் கிடந்தது.

மாலதியை மெதுவாக அழைத்துப் படுக்கையில் கிடத்தியபோது ராகவனின் கண்களில் இருந்து இரண்டு மூன்று கண்ணீர்த் துளிகள் —அவனுடைய வாழ்வின் சீர்குலைவை எண்ணித் தரையில் விழுந்து தவித்தன.


சென்ற ஆண்டு சித்திரை மாதம் திருச்சியில் நடைபெற்ற எழுத்தாளர் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ராகவன் சென்றிருந்தபோது அங்கு நடைபெற்ற இரண்டு நாள் நிகழ்ச்சிகளை மிகச் சிறப்புடன் செய்து முடித்துவிட்டு ஊருக்குத் திரும்பி வரும்போதுதானே மாலதியைச் சந்தித்தான்!

அன்று இரவு நல்ல மழை. வானமே இடிந்து விழுவதைப் போல் இடை விடாமல் பெய்து கொண்டிருந்தது. ராகவனுக்கு மழையில் நனைவது என்றும் சிறு பிள்ளையிலிருந்தே 'உயிர்'. அன்று அந்த மழையைக் கண்டதும் புகை வண்டி நிலையத்துக்கு நனைந்தேதான் போக வேண்டும் என்ற ஆவலில் மழையோடு மழையாக ராகவன் நனைந்தபடி சென்று கொண்டிருந்தான். கொஞ்ச தூரம்தான் நடந்திருப்பான். மழை அதிகமாகப் பெய்யவே ராகவன் வேகமாக நடக்க முற்படும் போது எதிர்பாராத விதமாக ஏதோ ஒன்று இடறிக் கீழே விழுந்தபோதுதான் இடறியது என்னவென்று கீழே திரும்பிப் பார்த்தான். அவனால் நம்ப முடியாததோர் அதிசயம் அங்கு நிகழ்ந்தது. மாலதிதான் மழைச் சகதியோடு சகதியாக மயக்கமுற்ற நிலையில் தரை

ஆறு கைகள் இருந்தாலும் போறுது போலிருக்கே!



ஒரு Prestige பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் வாங்கிவிடுங்கள்!



பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் உங்கள் பொன்னான சமையல் நேரத்தில் ஒருமணி மிச்சமாக்குகிறது

சமையல் பிரச்சனையை எளிதாக்கவே தயாராகிறது பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர். பிரஸ்டிஜ் சமையல் வழக்கமான சமையலுக்காகும் நேரத்தில் காலபங்கு நேரத்திலே தயார். அது எளிதானது. அத்துடன் பத்திரமானதும்கூட. 12 வயது சிறுமிகூட கையாளலாம். எரிபொருள் செலவில் எத்தனையோ மிச்சம். பிரஸ்டிஜ் இருந்துவிட்டால் சமைக்கும்போது குழப்பமோ, தடுமாற்றமோ இருக்காது. ஏனெனில் அதில் ஒரே சமயத்தில் மூன்றுவகை சமைக்கலாம். பிரஸ்டிஜில் தயாரான உணவில் சத்து, ருசி, மணம் முதலியவை குறைவதில்லை. பிரஸ்டிஜ் ஆயுட்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்பும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர்குக்கர் பிரஸ்டிஜ் ஒன்றே.

பிரஸ்டிஜ் ஐந்து அளவுகளில் உள்ளன. உங்கள் குடும்பத்திற்கு தேவையான அளவை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

பெயர்கள் வேறுனாலும் ப்ரீத், பிரஸ்டிஜ் இரண்டும் ஒன்றே. இந்தியாவில் பிரஸ்டிஜ், ஏற்றுமதிக்கு ப்ரீத்.

புகழ்பெற்ற ப்ரீத் ஸ்டிம் இட், ஸ்கில்லெட், ஸாஸ்பான் - சமையல் விரைவாகவும் எளிதாகவும் முடிய இவைகள் உதவுகின்றன.

டி.டி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்-16.

இப்பொழுது இவர் சதா சுறுசுறுப்பாயிருக்கிறார்

காரணம் யூகோ பாங்க் பண உதவி செய்தது

இவரிடம் திறமையிருந்தது,—ஆனால் அதை பயன்படுத்த பண வசதி இல்லை...யூகோ பாங்க் பண உதவி செய்ததால் இப்பொழுது இவர் தேவையான கருவிகளை வாங்கி முழு நேரமும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

யூகோ பாங்க் பண உதவித் திட்டங்களை நீங்களும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

விவரங்களுக்கு அருகிலுள்ள பாங்க் கிளையுடன் தொடர்பு கொள்க.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

யூகோ பாங்க்
வளம் பெற வழி
வகுத்தளிக்கின்றது

தலைமை ஆபீஸ்: கல்கத்தா
கஸ்டோடியன்: ஆர். பி. ஷா



யில் கிடந்தாள். ராகவன் உடனே எழுந்து அவளைக் கைத்தாங்கலாகத் தூக்கியபடி பக்கத்தில் உள்ள ஒரு சிற்றுக் கொட்டகைக்கு அழைத்துச் சென்றான்.

தொலைவில் எரிந்து கொண்டிருந்த விளக்கொளியில் அவள் முகத்தைப் பார்த்தபோது அவன் உள்ளம் துயரத்தின் ஆழத்தில் மூழ்கிக் கதறியது போல் தோன்றியது. கொஞ்ச நேரத்தில் மாலதி மெதுவாக விழிகளைத் திறந்து, ஒருவித சோக உணர்வோடு ராகவனை நோக்கியபோது அவளது விழிகள் கண்ணீரோடு கலங்கி நின்றன.

''நீங்க யாரு? எங்கிருந்து வர்றீங்க?'' என்று ராகவன் கேட்டபோது மாலதியால் பதில் எதுவும் சொல்ல முடியாமல் மௌனத்தோடு நின்றாள்.

மதுரைக்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்தவள்தான் மாலதி. சிறு வயதிலேயே தந்தையை இழந்த அவளுக்குத் தாயின் நிழல்தான் வாழ்க்கையின் பெட்டகமாய் இருந்தது. அந்தக் கிராமத்திலேயே பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துவிட்டு, வேலை வெட்டி எதுவும் இல்லாமல் வீட்டோடு வீடாகச் சும்மா இருந்தபோதுதான் ராமு என்ற இளைஞனுடைய சந்திப்பு அடிக்கடி அவளுக்குக் கிடைத்தது. அந்தச் சந்திப்பில் ஏதோ ஓர் அவசரம் இருந்ததினால் அவனைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல் அசட்டுத்தனமானதொரு மயக்கத்தில் அவனை நம்பி — அவளுடைய தாயாருக்குத் தெரியாமல் அவனுடன் ஓடிவந்துவிட்டாள். ஓடிவந்த பிறகுதான் ராமுவைப் பற்றிய உண்மைகள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக மாலதிக்குப் புரிந்தன.

ஒரு நாள் ராமுவும் மாலதியும் தங்கியிருந்த அந்த ஹோட்டலில் மாலதிக்குத் தெரியாமல் ராமு அந்த ஹோட்டல் முதலாளியிடம் மாலதியைப் 'பேரம்' பேசிக் கொண்டிருப்பதை - அவள் தெரிந்தபோதுதான் அவர்களுக்குத் தெரியாமல் தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள எப்படியோ தப்பித்துச் சென்றுவிட்டாள். பிறகு இரண்டு மூன்று நாட்களாக அந்தக் கொடியவர்களின் கண்களில் படாதவாறு பல இடங்களில் தலைமறைவாகித் தவித்துக் கொண்டிருந்தபோதுதான் ராகவன் அவளைச் சந்தித்தான்.

மாலதியின் சோகக் கதையைக் கேட்டதும் ராகவன் துடித்துப் போனான். பிறகு அவளுக்கு அறிவுரை கூறி, கையில் இருந்த பணத்தைக் கொடுத்து அவளுடைய ஊருக்கே அனுப்பி வைக்க முயன்றபோது, மாலதி கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள். 'இந்த நிலையில் நான் ஊருக்குப் போனால் என்னை எங்கம்மா கொன்னு போட்டுடுவாங்க!' என்று அவள் கதறிச் சொன்னபோது அவளுடைய தவிப்பை ராகவன் புரிந்து கொண்டான். பிறகு அவனே ஒரு முடிவுக்கு வந்து, அவளுடைய சம்மதத்தோடு அவளைத் தன்னோடு அழைத்து வந்து விட்டான்.

இறந்த கால நினைவுகளிலிருந்து விடுதலை பெறும்போது ராகவனுக்குக் கொஞ்சம் உலகத்தின் ஞாபகம் வந்ததும் வேகமாகத் தன்னுடைய அறைக்குச் சென்றான். மனத்தில்



''என்னடா கண்ணு! தமிழ்ப் புத்தகத்தைப் பிரிச்சு மடியிலே வச்சுண்டு சிரிக்கிறே!''

''இது அண்ணன் புத்தகம் அப்பா! எஸ். எஸ். எல். சி. தமிழ்ப் பாட நூல்.''

''நீ சிரிக்கிறதைப் பார்த்தா ஏதோ நகைச்சுவைப் பத்திரிகை படிக்கிறது மாதிரின்னு இருக்கு!''

''இதைப் படிச்சா நீங்களும் சிரிக்காமல் இருக்க முடியாது. ஏம்பா! ஒரு மொழியைப் படிக்கிறதுக்கும் ஆயுளுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?''

''எதுவும் இருக்கும்னு தோணல்லே. ஏன்?''

'' 'தமிழ்த்தாய்' என்ற பாடத்திலே, 'தமிழைக் கைவிட்டு ஆங்கிலம், ஆரியம் முதலியவற்றையே கற்றுப் பழகும் நம் நாட்டவர் பலர், முப்பது அல்லது நாற்பது ஆண்டுகட்குள் பல வகை நோய்களாற் பிடிக்கப்பட்டு மாண்டு போகின்றனர்' என்று எழுதியிருக்கிறதைப் படிச்சேன்: சிரிப்பு வந்தது அப்பா. மொழிகளை விரும்பிப் பயில்வது அவரவர் இஷ்டம். ஆங்கிலமும் ஆரியமும் படிச்சா நோய் நொடி வந்து அல்பாயுசிலே செத்துப் போயிடுவாங்கன்னு போட்டிருக்கே - இது சரியா? அப்பா?''

''கொஞ்சம் கூடச் சரியில்லே.''

''இதே போன்ற இன்னும் பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாத பல விஷயங்கள் இந்தப் பாடத்தில் இருக்கே அப்பா. இந்தக் கட்டுரையை எழுதியவர் ரொம்பப் பேர் பெற்ற தமிழறிஞராச்சே!''

''கண்ணு! ஒரு காலத்தில் தமிழ் நாட்டிலேயே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்ட பரிதாப நிலை இருந்தது. அப்போது பேரறிஞர்கூடத் தமிழார்வம் காரணமாக ஒரு வேகத்தில் மிகைபடவே சிலவற்றை எழுதியிருக்கிறார்கள்.''

''அதையெல்லாம் இப்போ பிரசுரிப்பதில் அதிலும் பாடப் புத்தகங்களில் பிரசுரிப்பதில் பயன் என்ன அப்பா? இதே தமிழறிஞர் எழுதியுள்ள வேறு எத்தனையோ கட்டுரைகள் இருக்க இதைப் போய்த் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் என்ன?''

''புரியலேடா கண்ணு!'' - ச.பா.

அமைதி இல்லாதபோது வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் குழப்பமாகத்தானே முடிகின்றன. 'எப்படியாவது மாலதிக்கு வாழ்வு கொடுக்க வேண்டும். அவளுடைய நம்பிக்கை எண்ணங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் மலர வேண்டும்' என்ற ஒரு முடிவைத் தன்னுடைய உள் அந்தரங்கத்தில் பதிய வைத்துக் கொண்டு படுக்கையில் படுத்துத் தூங்க முற்பட்டான்.

மறுநாள் காலை வெகுநேரம் கழித்துத்தான் ராகவன் வெளி உலகின் புற உணர்வுகளை நோக்கினான். திடீரென்று ஒருவித உத்வேகத்தில் படுக்கையை விட்டு அவன் எழுந்து மாலதியைப் பார்ப்பதற்காகச் சென்றான். அங்கே அவள் இல்லாததைக் கண்டு அங்கு மிங்கும் தேடினான். மாலதியின் படுக்கை மீது ஓரத்தில் காற்றோடு காற்றாகப் படபடத்துக் கொண்டிருந்த கடிதத்தைக் கண்டதும் திடுக்கிட்டு அதை எடுத்து மிக அவசரமாகப் படிக்க முற்பட்டான்.

அன்பார்ந்த ராகவனுக்கு, வணக்கம்.

இக்கடிதம் உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் என்னு

டைய பயணம் நீண்ட நெடுந் தொலைவை எட்டிக் கொண்டிருக்கும். காரணமில்லாமல் ஏதோ ஒரு கற்பனையை எனக்கு நானே வளர்த்து, காரணம் இல்லாமலேயே அக் கற்பனையை நானே கலைத்துவிட்டுக் கண்ணீர் என்ற ஒரு மகத்தான துணையோடுதான், இன்று நான் எங்கேயோ எனக்குத் தெரியாமல் சென்று கொண்டிருக்கிறேன்.

உங்களைச் சந்திப்பதற்கு முன் எனக்கிருந்த பெண்மையின் பயத்தை — உங்களைச் சந்தித்த பின் ஒருவகைத் துணிச்சலில் அதைத் தூக்கி எறிந்து விட்டுத்தான் உங்களோடு சில மாதங்கள் வாழாமல் வாழ்ந்து வந்தேன். என் மனத்தில் அடிக்கடி துள்ளித் திரியும் அந்த எண்ணங்களுக்கு உயிர்ப்பூட்ட நான் எத்தனையோ தடவை தங்களை வலியத் தேடி வந்து அது கிடைக்காமல் தோல்வியைத் தழுவியிருக்கிறேன். என்ன செய்வது? நானும் ஒரு பெண்தானே! அவ்வளவு பெரிய சுகத்தை உங்களிடம் கேட்டுப் பெறுகின்ற உரிமையில் வந்தவளல்லவே நான்; ஏதோ வழி தவறிப்போக இருந்த என்னை வழிகாட்டும்பொருட்டு அழைத்து வந்த 'பிரயாணி' தானே நான்.

அதைப் பற்றிக்கூட நான் அவ்வளவு கவலைப்படவில்லை. நேற்று நீங்கள் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வரும்போது உங்களிடம் மனம் விட்டு 'அந்த' எண்ணத்தைக் கேட்டு விடலாம் என்ற துடிப்பில்தான் துவண்டு கிடந்தேன். ஆனால் எனக்கு முன் நீங்களே முந்திக் கொண்டு 'யாரோ' மூர்த்தி என்கிற உங்கள் ஆபீஸ் சிநேகிதருக்கு என்னைப் பேசியிருப்பதாகச் சொன்னதும்தான் நான் உங்கள் மீது மிகவும் ஆத்திரப்பட்டேன். யாருக்காக என்னுடைய இதயத்தைப் பரிசுத்தமாக்கிக் காலமெல்லாம் திறந்துவைத்துக் காத்திருந்தேனே, அவர் என்னை விரும்பவில்லை என்பதை அறிந்ததும் என்னையே எனக்குள் அழித்துக் கொண்டு ஒருவித வெறுமையை நோக்கித் தொடர்ந்தேன்.

எதிர்பாராத விதமாக நேற்று இரவு உங்களுடைய அறைக்கு உங்களைப் பார்க்க வந்தபோது — உங்களுடைய டைரியைத்தான் என்னால் பார்க்க முடிந்தது. அப்போதுதான் உங்களைப் பற்றியும், அந்த உண்மையைப் பற்றியும் நான் தெளிவாகத் தெரிந்துகொண்டேன். உங்களைக்கூட இந்த உலகத்தில் ஏமாற்றுகிறவன் இருக்கிறானா? இருக்கிறான் என்பதை அந்த நேரத்தில்தான் தெரிந்து கொண்டேன். பிறகு டைரியின் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டும்போது உங்கள் வாழ்வின் தியாகத்தையும் பண்பின் ஆழத்தையும் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அதே டைரியில் ஒரு பக்கத்தில் 'தாய்மையின் உணர்வில் மிளிரும் மாலதியை என்னுடைய லட்சியத்துக்கு மேலாகவே மதிக்கிறேன்' என்று தாங்கள் எழுதிய எழுத்தில் என்னையே ஐக்கியப்படுத்திக் கொண்டிருக்கும் அந்த ஒரே ஒரு நினைவில் என்னுடைய இதயம் கண்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. நம்முடைய எண்ணங்கள் நமக்குத் தெரியாமல் நம்முடைய உணர்ச்சிகளில் மானசிகமாகவே மலர்ச்சி அடைந்திருக்கின்றன என்ற ஒருவகைப் பூரிப்பில் உங்களிடம் இருந்து விடை பெறாமல் பெற்றுக் கொண்டு வெகு தூரம் சென்று விட்டேன். என்னைத் தேடுவதில் தாங்கள் முயற்சி எடுக்க வேண்டாம்.

உங்களது டைரியைப் படித்துவிட்டு மேஜை யின்மீது வைக்கும்போது அதிலிருந்து ஒரு போட்டோ கீழே விழுந்தது. உடனே பரபரப்போடு நான் அதை எடுத்துப் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனேன். அந்தப் புகைப்படத்தில் இருக்கும் கொடியவன்தான் என்னை ஏமாற்றி இந்த அளவுக்கு ஆளாக்கி அலைய விட்டவன். அந்தப் படம் உங்கள் கைக்கு எப்படி வந்தது என்ற யோசனையில் படத்தைத் திருப்பிப் பார்த்தேன். அதில் பின்புறமாய் 'ராமமூர்த்தி' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. அப்போதுதான் அவனைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. என்னிடம் 'ராமு' என்று சொல்லி நடித்த அந்தப் பாவிதான் உங்களிடம் 'மூர்த்தி' என்று சொல்லி உறவாடிக் கொண்டிருக்கிறான் என்பதை நான் ஊகித்தபோது மிகவும் வேதனைப்பட்டேன். நல்ல வேளை எப்படியோ நான் ஆண்டவன் புண்ணியத்தில் மீண்டும் அந்தப் பாவியின் வலையில் சிக்காமல் தப்பித்துவிட்டதற்கு மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இனி மேலும் அங்கிருந்தால் ஏதேனும் ஒன்று நடக்கும் என்பதைப் புரிந்து கொண்டுதான் நான் இங்கிருந்து வெளியேறுகிறேன்.

ஆனால் நான் ஓடிப்போனவள் ஓடிப்போனவளாகவே இருக்கட்டும். என்னுடைய ஓட்டத்தில் கடுகளவுகூடக் களங்கமில்லை என்று தாங்கள் எண்ணிக் கொண்டிருக்கும் அந்த நம்பிக்கைக்கு நான் ஒரு நாளும் துரோகம் இழைக்க மாட்டேன்.

துர்ப்பாக்கியவதி மாலதி.

கடிதத்தைப் படித்து முடித்ததும் கவருக்குள் திணிக்கும்போதும் ராகவன் இதயத்திலிருந்து ஏதோ ஒன்று நழுவி விழுந்துவிட்டதைப் போல் துடித்தான். பெண்மையைப் பெரிதாகப் போற்றும் இந்தச் சமுதாயத்தில் இருந்து கொண்டே — அந்தப் பெண்மையின் மெல்லிய உணர்வுகளை, ஆசைகளை, எண்ணங்களைக் காரணமில்லாமல் தண்டிக்கும்போது ஆண்மை என்பது எவ்வளவு பலவீனமாகப் போய் விடுகிறது. ராகவனின் விழிகளில் தேங்கி நின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தன் அறைக்குப் போனான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஆபீஸ் பியூன் வேகமாக ஓடிவந்து காண்பித்த அந்த ஆங்கிலப் பேப்பரில் மாலதியின் புகைப்படத்தைப் பிரசுரித்து 'இவளை அடையாளம் தெரிந்து கொண்டவர்கள் நேரில் வந்து பிரேதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்' என்று போலீஸ் நிலையத்தாரால் அறிவிக்கப்பட்டதை ராகவன் உற்றுப் பார்த்தபோது கண்ணீரோடு கண்ணீராய்க் கலந்து போனான். பிறகு தனக்குத் தானே ஆறுதல் கூறிக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டான். 'இந்தப் பேப்பரை நீயே கொண்டு போய்ப் பக்கத்து அறையில் இருக்கும் மூர்த்தியிடம் காண்பித்தால் ஒருவேளை அவனுக்கு அடையாளம் தெரியும்' என்று ஒருவகைத் துணிச்சலில் பியூனிடமே சொல்லிவிட்டு வேகமாக எங்கேயோ நடைப் பிணமாய் நடந்து போனான்.

உயிரும் வயிறும்

சத்தியவான்



"என்ன தம்பி இது? நிறை மாசம் பிள்ளைத்தாச்சியை வீட்டிலே விட்டிட்டு இப்படி ராவு பதினொரு மணிக்கு வர்றே?"

"என்ன ஆச்சு... மருத்துவச்சி அம்மா வரலியே?"

"அவங்க சாயங்காலத்திலே யிருந்து இங்கேதான் இருக்காங்க! உன்னைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கோம். மில்லு ஓடிக்கிட்டு இருந்தப்போகூட உனக்கு இவ்வளவு வேலை இல்லே முத்து. இந்த வேலை நிறுத்தம் வந்த பிறகுதான் வேலை சரியா யிருக்குது!"

"ஆயா...வெவகாரத்தை விட்டுட்டு விசயத்தைச் சொல்லு!" — சற்றுப் பதற்றத்துடன் பக்கத்து வீட்டு மூதாட்டியைக் கேட்டான் முத்து.

"என்ன விசயத்தைச் சொல்லறது? பிள்ளை எசகேடாச் சிக்கிக்கிட்டிருக்காம்! உடனே டவுன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணுமினு மருத்துவச்சியம்மா சொல்றாங்க."

"சரி. இதோ நான் போய் வண்டி கொண்டாறேன்." — முத்து ஓடினான்.

"காளியப்பா, புறப்படு! கோயமுத்தூருக்குப் போகணும்!"

"என்ன அண்ணே... இந்த நேரத்திலே?"

"என் சம்சாரத்துக்கு நோவு. மருத்துவச்சியம்மா கையை விரிச்சுட்டாங்க. உடனே டவுன் ஆஸ்பத்திரியிலே போய்ச் சேர்க்கணும்."

"அட பாவமே! மேக மூட்டம் கம்முனு இருக்குது. மழைத் தூத்தல் வேறே போடுது. இந்த ராவு நேரத்திலே..."

"இதெல்லாம் பார்த்துக்கிட்டு இருந்தால் முடியுமா? புறப்படு!"

"சரி, முத்து அண்ணே, நாட்டு என்ன தரே?"

"என்ன காளி, புதுசாக் கேக்கறே? ஏத்தபட்டதை வாங்கிக்க."

"இந்த இருட்டிலேயும் மழையிலேயும் ரெண்டு ரூபாய்க்குச் சவாரி வரதுன்னு நெனைச்சியா? பத்து ரூபா தருவியா?"

"என்ன காளி அநியாயமாக் கேக்கறே? பத்து ரூபாய்க்கு டாக்ஸி பிடிச்சிடலாமே?"

"பிடிச்சுக்கிடேன்."

"இந்த ஊரிலே டாக்ஸி கெடச்சா உன் கிட்ட ஏன் இவ்வளவு பேசறேன்? சரி, பத்து ரூபாய்க்குக் குறைய மாட்டியா?"

"நான் மட்டுமில்லே அண்ணே! வேறே எந்த ஜட்காவும் அதுக்குக் குறைஞ்சு வராது! எங்க சங்கத்திலே முடிவு செய்திருக்கோம், ஒருத்தன் பேசின சத்தத்துக்குக் குறைஞ்சு

இன்னொருத்தன் சவாரி போகக் கூடாதுன் னிட்டு!''

''அப்படியா! இப்படி அடிக்கப் பறிக்கத் தான் சங்கம் வச்சிருக்கீங்களா?''

''என்னண்ணே, நீயே இப்படிக் கேக்கறே? நீங்க எதுக்காகச் சங்கம் வச்சிக்கிட்டு ஒரு வாரமா வேலை நிறுத்தம் செய்து மில்லை நிறுத்தி வச்சிருக்கீங்க? உங்க சங்கம் உங்க வயித்துக்கு, எங்க சங்கம் எங்க வயித்துக்கு!'' — முத்து பதில் கூறாமல் புறப்பட்டான்.

காளியப்பன் கூறியது முற்றிலும் உண்மையாகவே இருந்தது. அவ்வூர் ஜட்கா வண்டிக் காரர் அனைவரும் தொழிற் சங்க உணர்வில் ஊறித் திளைத்திருந்தனர். சொல்லி வைத் தாற்போல எல்லோரும் 'வேறு வண்டிக் காரர்களிடம் முதலில் வாடகை பேசினீர் களா?' என்ற கேள்வியைத்தான் முதலில் கேட்டனர். 'தொழிலாளிக்குத் தொழிலாளி' என்ற சலுகை கூட முத்துவுக்குக் கிடைக்க வில்லை. முத்துவும் தொழிலாளியாக இருந் தாலும் ஜட்கா வண்டிக்காரரின் தொழில் அச்சமயத்தில் அவனுக்குத் தேவைப்பட்ட தால், அவர்கள் அளவில் அவர்களுக்கு அவன் முதலாளியாகி விட்டான். அவனிடம் அப் போது இருந்தது மூன்றே மூன்று ரூபாய்! இருந்தாலும் அவன் அவர்களுக்கு அப்போது முதலாளி!

முத்து சிந்தித்தான், குழம்பினான், தடு மாறினான், திகைத்தான். வீட்டை விட்டு அவன் மனைவி செல்லியை வேதனையில் நெளிய விட்டு அவன் வந்து அரை மணிக்கு மேலாகி விட்டது. வேதனையின் உச்ச கட்ட மாக அவன் மனைவிக்கு மரணம்தான் வந்து சேருமோ என்ற அச்சம் அவனை நிலை கலக் கியது. அந்த நிலையிலிருந்து அவனை நம்பி யிருக்கும் அவன் மனைவியைத் தப்புவிக்க ஒரே ஒரு வழிதான் அவனுக்குப் புலப்பட்டது. அந்த எண்ணத்தால் அவன் உள்ளம் கூசியது, உடல் குன்றியது!... ஆம்! அவனுடைய முதலாளியிடம் சென்று கார்ப் பிச்சை கேட் பதைத் தவிர வேறு வழியில்லை! அவனுடைய இலட்சியம், கொள்கை ஆகியவற்றுக்காக, அவன் மனைவி இறப்பதற்கு இடம் கொடுக்க அவனுக்கு உரிமை ஏது? வழி இருக்கும்போது அதைத் தொடராமல் ஒதுங்கி விடுவதால் அவன் கடமை தவறியவனாகி விடமாட்டானா? அவனைத்தானே எல்லாமாக எப்போதும் நம்பி யிருக்கிறாள் அவன் மனைவி!

கோவையிலிருந்து இரண்டு மைல் தொலை விலுள்ள அரசூர் கருணா ஆலையின் நூற்புப் பிரிவின் போர்மென் முத்து. வர்க்கப் போராட்டத்தில் அசையாத நம்பிக்கை ஆழ மாகக் கொண்டவன் முத்து. ஆலை அதிபர் கருணாகரன் முந்திய ஆண்டின் லாபம் குறைந்துவிட்டது என்று காரணம் கூறி, வழக்கமான மூன்று மாத போனஸை அந்த ஆண்டு இரண்டு மாத போனஸாகக் குறைத் துக் கொடுக்கப் போவதாக அறிவித்ததால் கடந்த ஒரு வாரமாக மில் தொழிலாளர் அனைவரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள் ளனர். ஆலையின் தொழிற்சங்க உறுப்பினர் களுள் முத்து ஒரு முக்கியமான மையப் புள்ளி.

அந்த நிலையில் தன் முதலாளியிடம் அவன் கார் கேட்க நினைத்ததே விந்தை! அவ்வூரில் கார் வைத்திருக்கும் ஒரே நபர் கருணாகரன் தான்! தொழிலாளி, முதலாளி என்ற உற வில்லாமல் மனிதனுக்கு மனிதன் உதவி கேட்பதாக எண்ணிக் கொண்டு கேட்டால் என்ன? மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கும் பெண் ஒருத்தியின் உயிரைக் காப்பாற்ற அவர் கார் கொடுத்து உதவ மாட்டாரா? அந்தப் பெண் அவனுடைய மனைவி என்பதற் காக அவர் மறுத்து விடுவாரா?

''என்ன தம்பி இப்படி நடு ரோட்டிலே நின்னுக்கிட்டிருக்கே? செல்லிக்குக் கண்ணைச் சொருகிக்கிட்டே போகுது! இனிமே வண்டி கொண்டாந்தும் பிரயோசனம் இல்லே தம்பி! காருக்கு ஏற்பாடு பண்ணினாத்தான் செல்லி உன் பெண்சாதி!'' — அடுத்த வீட்டு ஆயா பதற்றத்துடன் அவன் முன் வந்து நின்றாள்.

''நீ வீட்டுக்குப் போ ஆயா. அஞ்சு நிமி ஷத்திலே காரோட வரேன்!'' — அவன் குரலில் ஓர் உறுதி தொனித்தது.

முத்து கேட்டைத் திறந்தபோதே உள்ளே யிருந்து நாய் குரைத்தது.

''கூர்க்கா!'' — முத்துவே குரல் எழுப்பி னான். அவன் வருகையைக் குறித்து அந்த நேரத்தில் அசம்பாவிதமாக நினைத்துவிடக் கூடாதல்லவா?

''முதலாளியை அவசரமாகப் பார்க் கணும்!''

''அவர் தூங்கறார்.... காலையிலே பார்!''


''தெரியும்... ராவு பன்னிரண்டு மணிக்கு முதலாளி தூங்கிக்கிட்டுத்தான் இருப்பாரு! நான் மில் வேலையா வரலே! என் சொந்த விஷயமா அவரை உடனே பார்க்கணும். என் பெண்சாதிக்கு நோவு ஜாஸ்தியாயிடுச்சி. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும்...''

''அதுக்காக இந்நேரத்திலே முதலாளியை எழுப்பினா என்னைச் சும்மா விட மாட்டாரு!''

நாய் குரைத்துக் கொண்டே இருந்தது. மாடி அறையில் விளக்கு எரிந்தது.

''கூர்க்கா! யாரது?''

''எஜமான், முத்து! உங்களைப் பார்க்கணு மாம்.''



என்ன விஷயம்?'' — மாடி ஜன்னலருகே நின்றுகொண்டார் கருணாகரன்.

''முதலாளி! என் பெண்சாதிக்குப் பிரசவக் கோளாறு! டவுன் ஆஸ்பத்திரிக்கு உடனே கொண்டு போகணும்...இல்லாட்டி பிழைக்க மாட்டா...''

''அதுக்காகக் கார் கேட்க வந்திருக்கியா?''

முத்துவால் ''ஆமாம்!'' என்று வாய் விட்டுக் கூற முடியவில்லை. அவன் என்னென்னவோ எப்படியெப்படியோ உணர்ந்தான். அவன் உள்ளம் குன்றிக் குறுகியது.

வராந்தா விளக்கு எரிந்தது. கருணாகரன் முத்துவின் அருகில் வந்து நின்றார்., கையில் ரிவால்வருடன்!

''முத்து, நீ சொல்றது உண்மையா.... இல்லே...''

''சத்தியமா நிசம். நீங்க நினைக்கிறமாதிரி இல்லே, முதலாளி!''

கையிலிருந்த ரிவால்வரைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டார் கருணாகரன்.

''டிரைவர் இல்லையே, எப்படிக் காரைக் கொடுக்கிறது?''

''நம்ம மில் லாரி டிரைவர் செல்லத்தைக் கூட்டிக்கிட்டுப் போறேன், முதலாளி!''

''அவன் வருவானா?''

''நான் கூப்பிட்டா வருவான்!'' சொல்லிக் கொண்டே கேட்டைத் தாண்டி ஓடினான் முத்து.

''செல்லம்! முதலாளி காரா இருந்தால் என்னடா? எனக்காகத்தான்டா நீ கார் ஓட்டப் போறே?''

''நீ அப்படி நினைக்கிறே! உன் சொந்தச் சங்கதின்னு வந்ததும் முதலாளி காலிலே விழுந்திட்டே! இனிமே இந்த ரெண்டு மாத போனசும் கிடைச்ச மாதிரிதான்!''

''செல்லம்! அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லே!''

''முத்து வீணாப் பேசாதே! வேணுமின்னா நான் பத்து ரூபா தரேன், வண்டி வச்சுக்கிட்டுப்போ! என்னை இதுக்குக் கூப்பிடாதே!'' வாய் திறவாமல் முத்து வெளியேறினான்.

''ஆயா! அவ்வளவுதான் ஆயா! செல்லிக்கு ஆயுசு கெட்டியா யிருந்தால் அவள் பிழைச்சுக்கிடட்டும்!''—வீட்டினுள் நுழைந்து முகத்தை இரு கரங்களாலும் மூடிக்கொண்டு உட்கார்ந்தான் முத்து. அவனையும் மீறி விம்மல் வெளுத்தது.

''ஏதோ காரு வருது, தம்பி!'' முத்து அதிர்ந்து எழுந்து நின்றான்.

''என்ன முத்து, செல்லம் வரமாட்டேன் விட்டான் இல்லே, சரி வா!'' — கருணாகரன் பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

''திகைச்சு நிக்காதே முத்து! காலம் கடத்தக் கூடாது! என் டிரைவர் காலையிலே தான் வருவான். உன் பெஞ்சாதியைக் காரில் படுக்க வை. போ, முத்து!''

''அந்தப் பெரியம்மாவை உன் பெண்சாதி பக்கத்திலே உட்காரச் சொல்லு. நீ முன் சீட்டுக்கு வா!'' — தயங்கித் தயங்கி நின்று கொண்டிருந்த முத்துவை முன் வீட்டில் தள்ளிக் கதவை அடைத்து, ஸ்டியரிங் பிடித்தார் கருணா மில்ஸ் அதிபர் கருணாகரன். முத்துவின் இதயம் எகிறிக் குதித்து, அவன் தொண்டையில் வந்து மோதியது.

பொருளைப் பதுக்கி விலையை உயர்த்துவது போல, அவன் மனைவியின் உயிரைக் காப்பாற்ற ஜட்கா இல்லாமல் முடியாது என்ற ஒரே காரணத்தால் ஜட்கா வண்டிக்காரர்கள் அனைவரும் சேர்ந்து அவர்களுடைய தொழிலைப் பதுக்கி, வாடகையை ஐந்து மடங்காக உயர்த்தி அவனை மனம் இடிந்து, நம்பிக்கை யற்றுப் போகச் செய்த அந்த நிலையில், நள்ளிரவில், கோடீசுவரர், கருணா மில் அதிபர், கருணாகரன் அவனை அருகில் அமர்த்திக் காரோட்டிக் கொண்டு செல்கிறார்.

'உங்க சங்கம் உங்க வயத்துக்கு! எங்க சங்கம் எங்க வயத்துக்கு!' என்ற தன்மையில் அடுத்தவரைப் பற்றி எண்ணாது தங்களைப் பற்றி மட்டுமே எண்ணி அவர்கள் ஏதேதோ செய்து கொண்டிருந்தபோது, கருணாகரன் யாருக்காக இப்போது இதைச் செய்கிறார்? ஒருகால் இப்படிச் செய்தால், முத்து மனம் மாறி வேலைக்கு வந்துவிடுவான், அவனும் மற்றவர்களும் வேலைக்குத் திரும்பி விடுவார்கள் என்று எதிர்பார்த்து இதை அவர் செய்கிறாரோ? இனி அவன் செய்ய வேண்டியது என்ன?

கார் குலுங்கி நின்று அவன் சிந்தனை ஓட்டத்துக்கு 'ப்ரேக்' போட்டது.

அரை மணி நேரம் ஏதும் புரியாத நிலையில் அவனை அலைக்கழித்து விட்டுச் செல்லிக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது, உடன் இறப்பதற்காக! அரை மணி நேரத்துக்கு முன்பாக வந்திருந்தால் குழந்தையைக் காப்பாற்றி யிருக்கலாம் என்றார் டாக்டர். இன்னும் அரை மணி நேரம் தாமதித்து வந்திருந்தால் செல்லியின் உயிருக்கே ஆபத்தாக இருந்திருக்கும் என்றும் டாக்டர் கூறினார்.


ஆம்! காளியப்பனும், செல்லமும் சேர்ந்து அவன் குழந்தையைக் கொன்றுவிட்டனர். அவனுடைய முதலாளி அவன் மனைவியைக் காப்பாற்றி விட்டார்! முத்துவால் வேறு எப்படி நினைக்க முடியும்?

''சரி, முத்து! என்னாலே உன்னுடைய குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லே. ஆனா உன் பெண்சாதி பிழைச்சதைக் குறிச்சு ரொம்ப சந்தோஷம். நான் வரேன்!''

''உங்க கிட்டே என்ன சொல்றது, எப்படிச் சொல்றது, எனக்கு எதுவும் தெரியலே முதலாளி!'' — தம் காலில் விழுந்த அவனைத் தூக்கி நிறுத்தினார், கருணாகரன்!

''முத்து! நீ எதுவும் சொல்ல வேண்டாம். ஆனா நான் ஒண்ணு சொல்றேன். நீ அதை நல்லாக் கேட்டுக்க. ஏதோ நான் உனக்குப் பெரிய உதவி செய்திட்டதாக நினைச்சுக் கிட்டு நாளைக்கு நீ மட்டும் வேலைக்கு வர நினைக்காதே. அதனாலே உனக்கு மட்டும் இல்லே, எனக்கும் கெட்ட பேரு! எல்லோரும் செய்யறதையே நீயும் செய்! அது போதும்! இதுக்கும் அதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லே!'' — காரில் ஏறி அமர்ந்த கருணாகரனையே சிலையாக நின்று பார்த்துக்கொண்டிருந்தான் முத்து!

புதிய மர்பி முஸாபிர் 400



ரூ. 293*


எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது.
விற்பனை வரி தனி

மர்பி முஸாபிர் உன்னதத்தை என்ன சொல்வது 4 பாண்டுகளில் இப்போது வருகிறது முஸாபிர் 400!

நுட்பமான உணர்ச்சியுள்ள புதிய மர்பி முஸாபிர் வலுவான மற்றும் பலவீனமான நிலையங்களை அதிகத் தெளிவோடும், சீரான ஒலியமைப்புடனும் எளிதில் இணைக்கிறது.

சிற்றலை நிலையங்களை விருப்பப்படி இணைக்க விரிவான அலைபரப்பு மற்றும் சுழல் வசதி. முந்திய இரு பாண்டுகளுக்குப் பதிலாக இப்போதுள்ள மூன்று சிற்றலை பாண்டுகள் வசதியான இயக்கத்திற்கு ஏற்றது.

மோர்ஸ் கோட் தடையை அகற்றி, தொல்லையற்ற செவியின்பத்தை உங்களுக்கு அளிக்கிறது புதிய மர்பி முஸாபிர் 400. ஃப்ளோரசண்ட் டியூபுகள், டி.வி., எலக்ட்ரிக் மோட்டார் முதலிய வெளிப்புறத் தடைகளை வெகுவாகக் குறைக்கிறது. சிற்றலை ஒலிப்பரப்பிற்காக புதிய மர்பி முஸாபிரில் அமைக்கப்பட்டுள்ள மாக்னெடிக் லூப் ஏரியலே இதற்குக் காரணம்.



எளிதில் கிடைக்கும், நீடித்துழைக்கும் டிரைபாட்டரிகளில் புதிய மர்பி முஸாபிர் 400 இயங்குகிறது.



மர்பி [illegible]

NAS 407

ஒரு பெரிய பலசரக்குக் கடைக்காரருக்கு, பணம் வாங்கிப் போடும் இடத்தில் அமர்ந்திருக்கும் தம் சிப்பந்தி மீது சந்தேகம் எழுந்தது. அந்தச் சிப்பந்தி அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாகப் பணத்தை அபேஸ் பண்ணுகிறான் என்று ஊர்ஜிதம் செய்துகொண்டார். அந்தச் சிப்பந்தியைக் கூப்பிட்டார்.

"இப்போது மாதம் எவ்வளவு ரூபாய் சம்பளம் வாங்குகிறாய்?"

"முப்பது ரூபாய்" என்று பதில் வந்தது.

"இன்றிலிருந்து அதை ஐம்பதாக உயர்த்தியிருக்கிறேன்."

"ரொம்ப நன்றிங்க."

"இல்லே! இல்லே! அது போதாது. எழுபத்திஐந்தாக உயர்த்தியிருக்கிறேன்."

"என்ன சொல்றதுன்னே தெரியலீங்க."

"நான் இன்னும் ஒன்று சொல்லியாகணும். உன்னை இந்த நிமிஷத்திலிருந்து வேலையிலிருந்து நீக்கியிருக்கிறேன். நீ போகலாம்."

பக்கத்திலிருந்த நண்பர் வியப்புடன் கடைக்காரர் முகத்தைப் பார்த்தார். "வேலையிலிருந்து போகப் போவதோ நிச்சயமாய் போச்சு! நான் குறைஞ்ச சம்பளம் கொடுத்து வந்ததாக மனத்தாங்கல் பட்டுக் கொள்வானேன்? அதிக சம்பளம் பெற்று வந்ததாக நினைத்துப் பெருமைப்பட்டுமே" என்ற பதில் கடைக்காரரிடமிருந்து வந்தது.



கொறிக்கவும்சிரிக்கவும்



பலிக்காத ஆருடம்


"இன்னும் நூறு வருடங்களில் மக்கள் பைபிளை மறந்துவிடுவார்கள். பைபிள், மியூசியங்களில் வைக்கப்பட்டிருக்கும் அபூர்வச் சரக்காக ஆகிவிடும்" என்று சொன்னான் அறிஞன் வால்டேர்.

நூறு வருடங்கள் கழித்து என்ன நடந்தது தெரியுமா?

வால்டேர் வசித்த வீட்டிலேயே 'ஜெனிவா பைபிள் சொஸைட்டி' இயங்கத் தொடங்கியது!

பெருமைக்கு ஒரு வாய்ப்பு!

கோமதி சுவாமிநாதன்



புத்தகம் வாங்கிப் பார்!

புத்தகம் வாங்குவதே ஒரு தனி இன்பம் தான். நம்பினால் நம்புங்கள். ஹிக்கின்பாதம்க்குள் நுழையும்போது என்னுள் ஊற்றெடுக்கும் ஆனந்தம் கம்பங்கொல்லையில் விழும் மாட்டுக்கு ஏற்படாது.

எந்த மாதிரியான புத்தகங்களை நான் தேர்ந்தெடுப்பேன் என்பது அன்றைய தினம் என்னைப்பற்றி நான் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதைப் பொறுத்தது. நான் ஓர் அறிவாளியாக இருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் தலைதூக்கும் நாட்களில் பெர்ட்ராண்ட் ரஸ்ஸலுக்குக் கீழ்ப்பட்ட மேதைகளின் படைப்பெல்லாம் துச்சமாகத் தெரியும். தேசாபிமான எண்ணம் உதிக்கும் சமயத்தில் எண்ணிக்கைக்குப் பஞ்சமில்லை; ஒரே ஆசிரியர் எழுதிய பத்துப் புத்தகங்களை ஒரு கொத்தாகப் பிரசுரித்திருக்கிறார்கள் என்றால் அதில் சரக்கு இல்லாமலிருக்குமா என்று மூட்டை கட்டிக் கொண்டு வந்து சேருவேன். சில சமயம் கொலம்பஸ் வியாதி பிடித்துவிடும். மூலை முடுக்கில் கேட்பாரற்றுக் கிடக்கும் அறுவைகளுக்கு அடிக்கும் யோகம். 'தென் அமெரிக்காவில் மூலிகை வேட்டை' 'பண்டைய காலத்து வைத்திய முறைகள்' போன்றவை. அத்தகைய மனநிலையில் பாதாளக் கரண்டி போட்டுக் கண்டு பிடிக்கப்பட்டவை அவை என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்வேன்.

- எஸ்.ஏ.பி.



சிறைச்சாலை என்ன செய்யும்?

சிறந்த இலக்கியம் பிறக்கும் இடம் சிறைச்சாலை என்று சொன்னால் உங்களுக்கு வியப்பு ஏற்படலாம். ஆனால் உண்மை அதுதான்! இதை நிரூபிக்க இதோ சில சான்றுகள்! அரசியல் கைதிகள் அல்லது அமைதியைப் பாதிக்கும் சாதாரண குற்றவாளிகள் என்று பாரபட்சம் காட்டாமல் சிறைச்சாலைகள், தம்மைத் தேடி வந்தவர்களின் கற்பனை வளத்தை ஊற்றெடுத்துப் பெருக்கச் செய்திருக்கின்றன.

பால கங்காதர திலகர் 'கீதை ரகசியம்' என்ற நூலை எழுதியது சிறையில்தான். ஜவாஹர்லால் நேரு தம் உலகப் புகழ்பெற்ற சுயசரிதையை எழுதியதும் அங்கேதான்.

'சுதந்திரத்துக்காகப் போராட வேண்டும்' என்ற விழிப்புணர்ச்சியைத் தூண்டும் 'பொது அறிவு' (Common Sense) என்ற நூலை தாமஸ் பெயின் அமெரிக்கர்களுக்காகப் பிரஞ்சு நாட்டு ஜெயிலில் இருக்கும்போதுதான் எழுதினார்.

பிரபல பிரிட்டிஷ் தத்துவப் பேராசிரியரான பெர்ட்ரண்ட்ரஸ்ஸல் 'கணித வேதாந்தத்துக்கு அறிமுகம்'(Introduction to mathematical Philosophy) என்ற நூலைப் பூர்த்தி செய்ததே சிறையில்தான். பிரிக்ஸ்டன் சிறைச்சாலைப் பதிவுப் புத்தகத்தின்படி அவர் 'கைதி நம்பர் 2917'.

சிறுகதை மன்னன் என்று பெயர்பெற்ற 'ஓஹென்றி' பாங்கியில் காஷியராக இருந்த போது செய்த குற்றத்துக்காகச் சிறைவாசம் செய்யும்போது தான் தம் புகழ்பெற்ற சிறுகதைகளை எழுதித் தள்ளினார்.

அடால்ப் ஹிட்லர் தன்னுடைய 'மெய்ன் காம்ஃப்'பை எழுதியது லாண்ட்ஸ்பர்க் சிறையில் தான்.

அறிவு அவசியம்தானா?



● நல்ல மேற்கோள், அறிவாளி சொல்லும் போது அவன் விரலில் பிரகாசிக்கும் வைர மோதிரம்போல் இருக்கிறது. அதுவே முட்டாளின் வாயிலிருந்து ஒலிக்கும்போது சாதாரணக் கூழாங் கல்லாகி விடுகிறது.

● அறிவில் போடப்படும் முதலீடுதான் அதிகப் படியான லாபத்தைச் சம்பாதித்துக் கொடுக்கிறது.

● முட்டாள் தன் தாடியை உருவிச் சீர்ப் படுத்துவதில் கவனம் செலுத்துகிறான். அறிவாளி தன் தன்மையை உணர்வதில் கவனம் செலுத்துகிறான்.

- பாரசீகப் பழமொழி

● சத்தியம், நிதானம், சகிப்புத்தன்மை ஆகிய மூன்றும்தான் அறிவை வளர்க்கின்றன.

- வெல்ஷ் பழமொழி

பட்டுமாமா சிட்டுமாமி



''மௌண்ட்ரோட் ... தியேட்டரிலே ஓடிக் கொண்டிருக்கும் படம் ரொம்ப நன்றாக இருக்கிறதாம். நீங்களும் அவசியம் அதைப் பார்க்கணும். அதைப் பார்த்தா, நீங்க தமிழ்ப் படங்களைப் பற்றிய அபிப்பிராயத்தையே மாற்றிக் கொள்வீர்கள்! போகலாம், கிளம்புங்கோ!''

'' எதுக்கு நீட்டி முழக்கறே? பக்கத்துவீட்டு அம்மாவுக்கு வேறே வேலே இருக்கு, துணைக்கு வரமாட்டேன்னுட்டான்னு சொல்லிட்டுப் போயேன்!''

செய்தி விமர்சனம்

வாஷிங்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்த கால் ஹில்ட்னர் என்ற யுவதியும், ஸ்காட்ரஷ் என்ற வாலிபனும் பதினாறாயிரம் அடிகளுக்கு மேலே ஒரு மலை உச்சியை அடைந்து அங்கே தங்கள் திருமணத்தை நடத்திக் கொண்டார்களாம். இருவரும் மலை ஏறுவோர் சங்க உறுப்பினர்கள். -செய்தி

மலை ஏறி க்ஷேத்திரங்களிலே கல்யாணம் செய்வது என்பது நம் நாட்டு சம்பிரதாயம். திருப்பதியிலே எத்தனை பேர் திருமணம் நடத்துகிறார்கள்? அமெரிக்கர்களும் இப்போது நம் நாட்டு சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்க ஆரம்பிச்சுட்டாங்கன்னு தோணுது. அந்த மலை உச்சியிலே எந்தத் தெய்வம் இருக்கோ? அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள்! தம்பதிகள் தீர்க்காயுசா இருக்கட்டும்.

-ஓர் ஆஸ்திகப் பிரமுகர்

ஓர் உயர்ந்த திருமணம். உயர்ந்த ரகத் திருமணம் கூட. உவமை சொல்ல முடியாத திருமணம்.

-ஒரு மேடைப் பிரசங்கி

தங்கள் பிற்காலக் கூட்டு மண வாழ்க்கை பற்றி ஏதோ திட்டம் இட்டுத்தான் அவர்கள் இப்படிப் பிறர் சுலபமாக வர முடியாத இடத்தில் தங்கள் திருமணத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். -ஓர் அரசியல்வாதி

''இதென்ன பிரமாதம். தினசரி காரியாலயம் போக எங்கள் ரூட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸில் ஏறுவது எவரெஸ்ட் சிகரத்தை எட்டுவதை விடச் சிரமமாக இருக்கிறதே!''

-ஒரு பஸ் பிரயாணி


இறுதிவரை
உறுதியாய்
உழைப்பது
இந்தியா
சூப்பர்
உன்னதமான
நவீன
கார் டயர்
இந்தியா டயர் அண்ட்
ரப்பர் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட்

THE NEW INDIA INDUSTRIES LTD.

Registered Office: Jetalpur Road, BARODA

Makers of **Agfa** Photo Paper

BROVIRA	–	for enlargements
LUPEX	–	for contact prints
COPYLINE R 90	–	for document copying (camera)
COPYLINE C 90	–	for document copying (contact)

In collaboration with:

M/s AGFA - GEVAERT AKTIENGESELLSCHAFT, LEVERKUSEN, West Germany

Factory:
Bombay - Agra Road
Mulund, Bombay - 80

Bombay Office:
Industrial Assurance Buildings
Opp. Churchgate Rly. Station, Bombay - 20

ஜீவாம்ருதம்

அருணா

பாலப்ராஸ

ரக்த சோதகா

ச்யவனப்ராசனம்

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹைடென்ஸா
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
— ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

DOL-337/1 TAM

கறுப்புப் பூனை

கஸ்தூரி பஞ்சு

சொம்பும் கையுமாகக் கொல்லைப்புறத்திலிருந்து ரகு ஓடி வருவதற்குள் அவனுக்காக வெள்ளி டம்ளரில் நுரை பொங்க ஆற்றி வைத்திருந்த ஓவலில் வாயை வைத்து, அதை அப்படியே சாய்த்துக் கொட்டிவிட்டு ஓடியது கறுப்புப் பூனை.

ரகுவுக்குத் தாங்க முடியாத ஆத்திரம். அந்தப் பூனையைப் பிடித்து, அதன் கழுத்தை நெறிக்கும் நினைவில், கைமுஷ்டிகளை இறுக முறுக்கிக் கொண்டான். பிறகு அதை எப்படியும் பிடித்து விட வேண்டும் என்கிற வீராவேசத்துடன் வாசலை நோக்கிப் பாய்ந்தவனை, வழியில் ஈஸி சேரில் படுத்துக் கொண்டிருந்த சர்மா, தடுத்து நிறுத்திப் பிடித்துக் கொண்டார்.



''ஏண்டா, ரகு? எதற்காக இப்படித் தலை தெறிக்க ஓடுகிறாய்?'' என்று அவர் நிதானமாகக் கேட்டார்.

''விடுங்கள் தாத்தா, என்னை'' என்று திமிறின ரகு. ''ஒன்றும் தெரியாதது மாதிரி கேட்கிறீர்களே! பூனையின் அக்கிரமத்தை நீங்கள் பார்க்கவில்லை?'' என்று வெடித்தான்.

''அசடு மாதிரி பேசுகிறாயே ரகு. அது பகுத்தறிவில்லாத பிராணி என்பது உனக்குத் தெரியாதா? அக்கிரமம், அநியாயம் என்பதெல்லாம் அதற்கென்னடா தெரியும்? நீ இன்று அடித்து விட்டதனால் கொட்டிவிட்ட பால் திரும்பக் கிடைத்து விடுமோ?'' என்று கேட்டார்.

ரகுவுக்குக் கோபம் கொழுந்து விட்டெரிந்தது. ''பேசாமல் இருங்கள் தாத்தா!'' என்றான் குரோதமாக. ''அதை அடிப்பதினால் இன்று கொட்டின பால் கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அது இன்று நான் கொடுக்கும் அடியின் நினைவில், நாளைக்கு உள்ளே புகுந்து பாலைக் கொட்டாமல் இருக்கும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்'' என்று சொன்னதும், அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது.

அதை அடக்கிக் கொண்டு, ''சேச்சே! பூனையை அடிப்பதாவதுடா! மகா பாவம், மகா பாவம்'' என்று வேறு தோரணத்துக்குத் தாவினார்.

கடந்த ஒன்றரை மாதங்களாக, அதாவது அவர்கள் அந்த வீட்டுக்குக் குடிவந்ததிலிருந்தே கறுப்புப் பூனையின் தொல்லை பொறுக்க முடியாததாகத்தான் இருந்தது.

ரகுவின் அக்கா ராதாவும், அம்மா கமலாவும் முன்ஜாக்கிரதையாக நடந்து கொண்டு, பூனையை ஏமாற்றி வந்தனர். வகையாக மாட்டிக் கொண்டவன், சுபாவத்திலேயே அஜாக்கிரதை மிகுந்த ரகுதான்.

பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பின ரகு, மேஜையருகில் உட்கார்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் வீட்டு வாசலில் கப்பல் போன்ற ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து பட்டுப் புடவையும், வைர நகைகளும் அணிந்த இரண்டு பெண்மணிகள் இறங்கி வந்தார்கள். அவர்கள் கையில் வெள்ளிக் குங்குமச் சிமிழும் சந்தனப் பேலாவும் இருந்தன.

ரகுவுக்குப் புரிந்து விட்டது. அவர்கள் கல்யாணத்துக்குக் கூப்பிட வந்திருக்கிறார்கள் என்று. வந்தவர்களை வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு போனாள் கமலம். வந்தவர்களோ ஏகமாக வற்புறுத்தி, கமலத்தை அனுப்புவதாகச் சர்மாவிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்ட பிறகுதான் அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

மறு நாள் தாத்தாவும் பேத்தியும் வீட்டிலிருக்கத் தாயும் மகனும் கல்யாணத்துக்குக் கிளம்பினர். ராதாவுக்கு அன்று வகுப்புப் பரீட்சை இருந்ததினால் அவள் போகவில்லை.

''அவசரப்பட்டுக் கொண்டு, ராத்திரி அகாலத்தில் வர வேண்டாம். வரவேற்பு, விருந்து எல்லாவற்றிலும் நிதானமாகக் கலந்து கொண்டு நாளைக் காலை வந்தால் போதும். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்று சொல்லி அனுப்பினார் சர்மா.

பிரபல நடிகையின் நாட்டியக் கச்சேரியும், பிரமாதமான விருந்துச் சாப்பாடும் முடிந்த பிறகு தன்னை மறந்த நிலையில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த ரகுவை உலுக்கி எழுப்பின கமலம் பேரிடி போன்றதொரு செய்தியைச் சொன்னதும், பெரிதாக அழ ஆரம்பித்து விட்டான் ரகு.

தாத்தாவுக்கு அவன் செல்லப் பேரனாயிற்றே! அவனுக்கும்தான் தாத்தாவினிடம் எத்தனை ஆசை! அந்தத் தாத்தா, கீழே விழுந்து, இடுப்பு எலும்பு முறிந்து, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதைக் கேட்டு அவன் கதறி அழாமலிருக்க முடியுமா?

அவனுக்கும் மேலாகத் துடித்துக் கொண்டு அங்கிருந்தவரின் காரில், உடனேயே ரகுவுடன் கிளம்பி விட்டாள் கமலம்.

அவர்களின் வரவை எதிர்பார்த்து அழுது கொண்டே வாசற்படியில் உட்கார்ந்திருந்த ராதா, தாத்தா விழுந்த விவரத்தை விளக்கமாகச் சொன்னாள்.

தாத்தாவுக்குக் கலந்து வைத்திருந்த காப்பியை வழக்கம்போல் உள்ளே வந்த கறுப்புப் பூனை அதன் பழக்கப்படி வாயை வைத்துக் கொட்டி விட்டிருக்கிறது.

என்றுமில்லாத திருநாளாக, சர்மாவுக்கு ஏகக் கோபம் வந்து விட்டிருக்கிறது. தம்மை மறந்த நிலையில், பக்கத்திலிருந்த கைத்தடியைச் சுழற்றிப் பூனையைப் பார்த்துச் சுழற்றியிருக்கிறார். அந்த அடி தாங்காமல் பூனை சுருண்டு விழுந்து விட்டதும், நடுநடுங்கிப் போன தாத்தா அதனருகே விரைந்தோடி வாசற்படி தடுக்கி, விழுந்து விட்டிருக்கிறார்.

குடும்ப டாக்டர் வந்து பார்த்து எலும்பு முறிந்து போயுள்ளதைக் கண்டுபிடித்து, தாமே ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டுக் கமலத்துக்கு டெலிபோனும் அவள் கணவருக்கு 'ட்ரங்க் காலு'ம் செய்து விட்டிருக்கிறார்.

கமலமும் குழந்தைகளும் சர்மாவை அப்பொழுதே போய்ப் பார்க்க வேண்டும் என்று பறந்தனர்.

அடுத்த வீட்டுக்காரர்தான் சமாதானப் படுத்தினார். ''அவருக்கு இப்போது நீங்கள் பயப்படுகிற மாதிரி எந்தவித ஆபத்தும் இல்லை. அதுவும் தவிர, ஆஸ்பத்திரியின் சட்டதிட்டங்கள் கண்டிப்பானவை. ஆண் வார்டில் உள்ள அவரை, இப்போது நீங்கள் யாரும் பார்க்க முடியாது. நான் இன்றிரவு அங்கேயிருந்து அவரை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றார்.

மறுநாள் விடியற்காலையிலேயே கமலத்தின் கணவர் வந்து விட்டார். பொழுது எப்போது விடியும் என்று காத்துக் கிடந்த அவர்கள் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தனர்.

கால் முழுதும் கட்டுப் போட்டு, அந்தக் காலை இரும்பு 'பிரேமு'டன் தூக்கினபடி இணைத்து வைத்திருந்த அலங்கோல நிலையில் சர்மாவைப் பார்த்ததும் அனைவருக்கும் துக்கம் தாங்க முடியவில்லை. ரகுவையும் ராதாவையும் சர்மாவே சமாதானப்படுத்தும் படியாயிற்று. சிறிது நேரம் அங்கே இருந்து விட்டு, குழந்தைகள் இருவரும் அடுத்த வீட்டுக் காரருடன் வீட்டுக்குக் கிளம்பிப் போனார்கள்.

அவர்களுடன் போகாமல் தங்கிவிட்ட கமலம் வாசற்படி வரையில் போய்ப் பார்த்து விட்டு வந்து, ''குழந்தைகள் இத்தனை நேரம் ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்பியிருப்பார்கள் இல்லையா?'' என்று கேட்டாள் கணவரிடம்.

''கிளம்புவதாவது? பாதி தூரம் போயிருப் பார்களே? ஏன் அவர்களிடம் முக்கிய விஷயம் ஏதாவது சொல்ல மறந்துவிட்டாயா?''

''இல்லையில்லை. அவர்கள் போனபிறகு மாமாவிடம்தான் ஒன்று கேட்க வேண்டும். அதற்காகத்தான் இருக்கிறேன்'' என்றவள் சர்மாவின் அருகே போய் உட்கார்ந்தாள்.

''என்ன கமலம்! என்ன கேட்கப்போறே?'' என்று மெதுவாக, ஆனால் புன்னகையுடன் கேட்டார் சர்மா.

''கலந்து வைத்த காப்பியைக் கறுப்புப் பூனை குடித்ததாகவும், அதைக் கைத்தடியால் அடித்ததாகவும் அப்போது கீழே விழுந்ததில் எலும்பு முறிந்து போய் விட்டதாகவும் சொல்லியிருக்கிறீர்களே, அதெல்லாம் என்ன கதை மாமா?'' என்று கேட்டாள் கமலம்.

''கதையா? என்ன...என்ன சொல்றே? நான் பூனையை அடிக்கமாட்டேன் என்பதற்காகச் சொல்றியா? அன்றைக்கென்னமோ என்னையும் மீறின வேகத்தில்....''

''போதும், மாமா!'' என்றாள் கமலம். ''முதல் நாள் இரவு நான் உங்கள் யாருக்கும் தெரியாமல் பூனையைச் செங்கல்பட்டுக்கு

வேலையில்லா பட்டதாரிகளுக்கு ஒரு புது வாழ்வு

சமூக சேவையில் இண்டியனாயில் மேலும் ஒருபடி முன்னேற்றம்

தமிழக அரசு உள்துறை அமைச்சர் திரு. ம. முத்துசுவாமி அவர்கள், கோயம்புத்தூர் அவனாசி ரோடிலுள்ள இண்டியனாயில் சர்வீஸ் ஸ்டேஷனை ஜூலை 5, 1970 ஞாயிறன்று மாலை 6.05 மணிக்கு தொடங்கிவைத்தார்கள்.

வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும், மற்றுமுள்ள பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் இண்டியனாயிலின் புதிய திட்டத்தின் கீழ் முதன்முதலாக கோயம்புத்தூரில் ஒரு பட்டதாரி நவீன வசதிபடைத்த சர்வீஸ் ஸ்டேஷன் ஒன்று நடத்துகிறார்.

இத்திட்டத்தின் கீழ் தகுதி படைத்த எல்லா பட்டதாரிகளுக்கும் இண்டியனாயிலின் பெட்ரோலியம் பொருட்கள் விநியோகம் செய்யும் வாய்ப்பு அளிக்கப்படும்.


இத்திட்டத்தின் மூலமாக படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத்திண்டாட்டத்தை போக்குவதற்கு இண்டியனாயில் உதவி செய்கிறது. இந்த வகையில் சமூக சேவை செய்யும் ஒரு சிறந்த தேசிய நிறுவனமாக இண்டியனாயில் விளங்குகிறது.

INDIANOIL இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிட்.
—பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் ஒரு தேசிய நிறுவனம்.



IOC/796 H TAM-A

ஐந்தே
காசு
போதும்
உங்கள்
குடும்பம்
பெருகாமல்
தடுக்க!



நிரோத்

உபயோகியுங்கள்

உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

15 காசுக்கு 3

அரசாங்க ஆதாரிலும் குறைந்த விலை

வேண்டுமென்றபோது மட்டுமே பேறு...

வேண்டுமென்றபோது மட்டுமே இன்று மக்கட்பேற்றை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நிரோத் உதவும்.

தாய் சேய் இருவரின் தேகநலம்...

குழந்தைகள் சரியான வளர்ச்சி பெற, முதல் மூன்று நான்கு வருடங்கள் அவர்களுக்கு விசேஷமான பராமரிப்பு தேவை என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். பேற்றில் இழந்த தேக வலுவை மீண்டும் பெற தாய்க்கும் சிறிது காலம் பிடிக்கும். நிரோத் உபயோகிப்பதனால், அடுத்த பேற்றைச் சுலபமாகத் தள்ளிப் போடலாம்.

நிரோத் (காண்டோம்) உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம் ஆண்களுக்கானது. எளிமையான, தீமையற்ற நிரோத் உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது. இதை உபயோகிப்போரின் தேகநலம் பாதிக்கப்படுவதில்லை. நிரோத் எங்கும் கிடைக்கும்

நிரோத், வீட்டுச் சாமான்கள் விற்கும் கடை, மருந்துக் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை ஆகியவற்றில் கிடைக்கும்.

விளம்பர 70/67

அனுப்பியிருக்கிறேன். அது அங்கு போய்ச் சேர்ந்துவிட்டதாகக் கல்யாண வீட்டிலே எனக்குத் தகவலும் வந்துவிட்டது. அப்படியிருக்க.''

''அப்படியா சங்கதி ?'' என்ற சர்மா ஒரு முறை கண்களை மூடித் திறந்தார். ''அம்மா, கமலம்! நம் தேசத்தில் பாவம், புண்ணியம் என்கிற பதங்களை அடிக்கடி, அதுவும் குறிப்பாகக் குழந்தைகளிடம் உபயோகிக்கிறோமே, அது ஏன் தெரியுமா?

''கொடுமையான தீச்செயல்களில் பிரவேசிக்க முயலும் எண்ணங்களைத் தடுக்கும் வேலியாகப் பாவத்தையும், நற்பணிகளைச் செய்யத் தூண்டும் தூண்டுகோலாகப் புண்ணியம் என்கிற வார்த்தையையும் உபயோகித்து, வளரும் பருவத்திலேயே பிஞ்சு உள்ளங்களைப் பதப்படுத்தி விடுகிறோம். அது மாதிரிதான் நானும் பூனையை அடித்தால் பாவம் என்று சொல்லி ரகுவின் மனத்தை மாற்ற முயன்றேன். ஆனால் அவனுடைய மனத்திலே கறுப்புப் பூனையின் மேல் வளர்ந்து விட்ட வன்மத்தை என் வார்த்தைகளினால் அழிக்க முடியாது என்பது தெரிந்ததும், என்ன செய்யலாம் என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த போதுதான் தற்செயலாக, இல்லையில்லை, தெய்வச் செயலாக எனக்கு இந்த விபத்து ஏற்பட்டது. உடனேயே ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டவன், பள்ளிக்கூடத்திலிருந்து வந்த ராதாவிடமும், பிறரிடமும் பூனையை அடிக்கப் போய் விழுந்து விட்டதாகச் சொல்லிவிட்டேன்.

''கமலம்! இன்று காலையில் ரகு என்னைப் பார்த்ததும், 'தாத்தா, வாயில்லாப் பிராணிகளை அடிப்பது பாவம். அதனால் நமக்குத் தீமை ஏற்படும் என்பது தெரிந்தும்கூட, ஏன் தாத்தா இப்படிச் செய்தீர்கள்?' என்று கேட்டு அழுதானே ! அந்த ஒரு வார்த்தையிலே, என் கால் ஒடிந்த வலியெல்லாம் எனக்கு மறந்துவிட்டது கமலம்'' என்று சர்மா சொன்னதும், கமலம் அவள் கணவன் இருவரின் மனங்களை நிறைத்த பெருமிதம் விழிகளிலே பெருகவே, இருவரும் கண்களைத் துடைத்துக் கொண்டனர்.



விளையாட்டுக்குள் ஒரு விளையாட்டு

புள்ளி விவரம்!

சர்ரேக்கும் மிடில்செக்ஸுக்கும் கிரிக்கெட் பந்தயம் நடந்து கொண்டிருந்தது. ஒரு மணி நேரத்துக்கு ஒரு ரன் போல ஆட்டம் ஊர்ந்தது. எனினும் கூட்டத்தில் தொடர்ந்து கைதட்டல் கேட்டது. 'ஒரு ரனுக்கு இத்தனை கைதட்டலா' என்று வியந்தார் ஹெர்பர்ட்.

ஹென்ட்ரன் இரண்டு ரன்கள் அடித்தபோது கரகோஷமும் ஆரவாரமும் மிகுந்து ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது. 'எதற்காக இத்தனை ஆரவாரம்' என்று திகைப்புடன் அருகிலிருந்த இளைஞனிடம் வினவினார் ஹெர்பர்ட். அந்த இளைஞன் ஹெர்பர்ட்டை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

''தெரியாதா உங்களுக்கு? இந்த வேளையில் ஹென்ட்ரன் ஆயிரம் ரன்களை எடுத்து முடித்த நேரம் இது. எல்லாருக்கும் தெரிந்த விஷயமாயிற்றே!'' என்றான் இளைஞன் பெருமையாக.

''ஆயிரம் ரன்கள் எடுத்ததற்கு அத்தனை கைதட்டி அமர்க்களப்படுத்தினது சரி. ஆனால் சில நிமிடங்களுக்கு முன் ஒரே ஒரு ரன் எடுத்தபோது கைதட்டினாயே, அது ஏன்?''

''அடப் பாவமே! அந்த ஒற்றை ரன்தான் மிடில்செக்ஸ் - சர்ரே பந்தயங்களில் மூவாயிரமாவது ரன் !''

''அடாடா! பழைய நினைவெல்லாம் மறந்துவிட்டது!'' என்று சமாதானப்பட்டுக் கொண்டார் ஹெர்பர்ட்.

மறுவிநாடி இளைஞனின் உற்சாகம் கரைபுரண்டது. பௌலர் பெண்டர் ஒரு பந்தை வீசினார். ஹென்ட்ரன் அதை அடித்து விட்டார். ஆனால் ரன் எடுக்கவில்லை. இந்தச் சமயத்தில் ''சபாஷ், பெண்டர்!'' என்று குதித்தான் அந்த இளைஞன்.

''இப்போ என்ன அதிசயம்?''

''இப்போ பெண்டர் தமது தொளாயிரமாவது மெய்டன் ஓவர் பௌல் செய்துவிட்டார். பலே! பலே!''

''மெய்டன் ஓவருக்கு இத்தனை அமர்க்களமா?''

''முதல்தர கிரிக்கெட்டில் இப்படி மெய்டன் ஓவர் எடுப்பதே அபூர்வம்!''

''ஆமாம்! ஆமாம்!''

கால நேரம் இப்படிக் கணக்கும் புள்ளி விவரங்களில் கழிந்தது. ஹாப்ஸ் ஆயிரமாவது தடவையாக ரன் அவுட் சாகஸம் புரிந்து ஆளைப் பெவிலியனுக்கு அனுப்பி வைத்தார்.

இளைஞன் இப்படியே டெஸ்ட் ரிகார்டுகளை அள்ளி வீசி ஹெர்பர்ட்டை அசர வைத்தான். பதிலுக்குத் தாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்று ஹெர்பர்ட்டின் மனத்தில் உதித்தது.

''உங்களுக்குத் திகைக்க வைக்கும் செய்தி ஒன்று சொல்லப் போகிறேன்!'' என்றார் ஹெர்பர்ட், 'புள்ளி விவர' இளைஞனிடம்.

''என்ன சொல்கிறீர்கள்?''

கையில் சாண்ட்விச் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு, ''நான் சாப்பிடும்போது நீங்கள் பலமாகக் கைதட்ட வேண்டும்!'' என்றார் ஹெர்பர்ட்.

''ஏன்? எதற்காக?''

''இது சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால் இது அதிசயச் செய்தியைச் சொல்லும் சாண்ட்விச்!'' என்று வாயில் அதைத் தள்ளியபடியே, ''இளைஞரே! லார்ட்ஸில் சர்ரே - மிடில்செக்ஸ் மாட்சின் இடைவேளையின்போது சாப்பிடப்பட்ட பத்து லட்சமாவது சாண்ட்விச் இது!'' என்றார் கிரிக்கெட் ஆட்டக்காரர் ஹெர்பர்ட்.

இளைஞன் விசித்திரப் பார்வையைச் செலுத்தினான். அதன் பிறகு அந்த இளைஞன் மீதமிருந்த ஆட்ட நேரத்தில் ஆழ்ந்த மௌனியானான். - குண்டுமணி

வட்ட மேஜை

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூபாய் 15/- பரிசு பெறுகிறது.

தமிழ் நாட்டில் வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆகஸ்டு 15ந் தேதி நிலப் பறிப்பு இயக்கம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. இது நிலத்தோடு மட்டும் நிற்பதல்ல. இதர சொத்துக்களுக்கும் முன்னோடியாக நடத்தப்படும் ஒரு பரீட்சார்த்தத் திட்டமாகும். இதைச் சர்க்காரும் பொதுமக்களும் தடுத்து நிறுத்தா விடில் ஜனநாயகமும், சட்டமும் கேலிக்கு இடமாகும்.

ராசிபுரம்
22—6—70 மாரப்ப கவுண்டர்

கல்கி ஜூலை 5 இதழில் பள்ளிகளின் தணிக்கை பற்றி வி. நீலா என்ற நேயர் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். ஒவ்வொரு பள்ளியும் மூன்று முறை ஆய்வாளர்களால் முன்னறிவிப்பின்றிப் பார்வையிடப்படுகின்றது. அதுவன்றி அவசியம் ஏற்பட்டால் எதிர்பாராத நிலையிலும் பார்வையிடப்படுகின்றது. ஆனால் அந்தப் பார்வைகளின்றி ஆண்டு ஆய்வு (Inspection) ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும். இது முன்கூட்டியே தேதி அறிவித்துத்தான் செய்யப்படுகின்றது.

அதில் ஆசிரியர்கள் வருகை, பிள்ளைகள் சேர்க்கை, சம்பளப்பட்டி, இருப்பேடுகள் பரிசீலிக்கப்படுகின்றன. கைத்தொழில், பள்ளிக்கு ஆண்டு முழுவதற்குமான சார்ட்டுகள், போதனை உபகரணங்கள், மேசை, நாற்காலி, பெஞ்சு, மணி, கடிகாரம், விஞ்ஞான உபகரணங்கள் போன்றவை தோட்டக் கருவிகள், மதிய உணவு சம்பந்தமான பாத்திரங்கள், பொருட்கள் ஆகியவை தனித் தனியாகப் பரிசீலிக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆசிரியரையும் மணிக்கணக்காகப் பாடங்கள் நடத்தச் சொல்லி நிறைகுறைகள் பரிசீலிக்கப்பட்டுப் புதிய முறைகளை எடுத்துக் கூறி முன்னேற்றத்துக்கு வழிகோலப்படுகிறது. தொடக்கப் பள்ளிகள் ஒருநாளும், உயர் தொடக்கப் பள்ளிகள் இரண்டு மூன்று நாட்களும் ஆயப்படுகின்றன. பிள்ளைகள் மேல்வகுப்புக்கு மாற்றப்பட்ட முறைகள் ஆயப்படுகின்றன. ஆசிரியர்களின், கைத்தொழில் சான்றுகள் பரிசீலிக்கப்படுகின்றன. அவ்வூர் ஜனத்தொகை, பள்ளி வயதுப் பிள்ளைகள், படிப்போர் படியாதோர் பற்றி அலசி ஆராயப்படுகிறது. பள்ளியின் அங்கீகாரம் பரிசீலிக்கப்படுகின்றது. மாலையில் பெற்றோர் கூட்டம் நடத்தப்படுகின்றது. முன்னறிவிப்பு இருந்தும் ஓரிரு பெற்றோர்தான் வருகின்றனர்.

ஆண்டுக்கு ஒரு முறை முன்கூட்டியே சொல்லி வைத்து இன்ஸ்பெக்ஷன் செய்வதால் பல ஆயிரக்கணக்கான குறைகள் களையப்பட்டுப் பள்ளி பல வழிகளிலும் புத்துணர்வு பெற்று வரும் ஆண்டில் விறு நடை போட முடிகின்றது.

அதிகாரி ஆண்டு ஆய்வுக்கு வருவதற்காக ஒரு பள்ளி வெள்ளையடிக்கப்படுவது அவ்வாண்டு முழுதும் பள்ளி தூய்மையாக இருக்க வழி வகுக்காதா ? இன்ஸ்பெக்ஷனுக்காகத் தைக்கப்படும் சீருடையை எப்படியும் அணிந்துதானே தீர வேண்டும்? சில அசந்தர்ப்பத்தால் நடத்த இயலாத பாடத்தை இன்ஸ்பெக்ஷனுக்காக நடத்தி முடிப்பது நல்லதுதானே ?

ஒவ்வொரு நாளும் அதிகாரிகள் வருவார்கள் என்ற நிலையில்தான் பள்ளிகள் நடைபெறுகின்றன. இன்ஸ்பெக்ஷன் வேறு; பார்வை (Surprise Visit) வேறு.

பொள்ளாச்சி
2—7—70 செ.கு. சண்முகசுந்தரம்


மூர்அங்காடிக்கு அருகே இதுகாறும் நரிக்குறவர்களும், கழைக்கூத்தாடிகளும் தான் இருந்தனர். ஆனால் இப்போதோ இவர்கள் தவிர மருத்துவர்கள் என்று சொல்லிக் கொண்டு கூட்டம் கூட்டித் தங்கள் 'காய கல்பங்'களை நாலணாவுக்கும், ஒரு ரூபாய்க்கும் விற்பவர்களும் பெருகி வருகின்றனர். விளம்பரத்துக்காக வேண்டி மலிவாகத் தருகிறார்களாம்! அவர்களுடைய மருந்துகள் உடல்நலத்துக்குச் சாதகமோ, பாதகமோ, அது ஆண்டவனுக்கே வெளிச்சம். ஆனால் அவர்கள் கூட்டம் கூடுவதற்காகப் பேசும் பேச்சுகள் பெரும்பாலும் தாறுமாறுபடி. ஆண் பெண் உறவு பற்றியே இருப்பதால் கேட்பவர்களின் மனம் கெடுதல் என்னவோ மிக உறுதி.

அதிலும் இப்போது பள்ளிகள் திறந்துள்ள சமயமாதலால் பள்ளிச் சிறுவர்கள் பழைய புத்தகங்களை வாங்கவும், விற்கவும் அங்கே வருகிறார்கள். அவர்களும், இப்போலி மருத்துவர்கள் கூட்டம் கூட்டுவதற்காகக் கூறும் விரசமான கதைகளையும், காட்டும் ஆபாசமான படங்களையும் கண்டும் கேட்டும் மனம் கெடுகின்றனர்.

வளரும் மாணவ சமுதாயத்தின் மனநலனைக் கருதியாவது இவ்வியாபாரிகளை (மருத்துவர்கள் என்று இவர்களை ஒருவரும் ஒப்புக் கொள்வது கிடையாது) ஏன், மாநகராட்சியோ அன்றி அரசோ தடை செய்யக் கூடாது ?

சென்னை—2
5—7—70 பு. ஜெயச்சந்திரன்

Printed & published by B. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



வாய்க்கும் கைக்கும் இடையில் எத்தனை போராட்டம்!

விபத்துக்கள் சாதாரணம்: குழந்தை பாலைச் சிந்துகிறது. பால் பாட்டில் உடைகிறது. பால் பொங்கி வழிகிறது. பால் திரிந்து போகிறது. பால் வண்டி பழுதாகிறது. பூனை பாலைக் குடித்து விடுகிறது.

ஆனால் கைவசம் அமுல் மில்க் பவுடர் இருந்தால் நல்ல பாலுக்குப் பஞ்சமே இல்லை.

கலக்க எளிதான அமுல் மில்க்: 10 டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை இளம் வெந்நீரில் விழுதாக்கிக் கொள்ளுங்கள். ஒரு லிட்டர் பாலாகும் வரை வெந்நீரைச் சேருங்கள். ஒரு கோப்பை பாலுக்கு 2½ டேபிள் ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் உபயோகியுங்கள்.

கெட்டியான ஆடைத் தயிர்: அமுல் மில்க் பவுடரிலிருந்து தயாரித்த பாலைக் கொதிக்கும் வரை சூடாக்குங்கள். வெதுவெதுப்பு நிலைக்கு ஆறவிடுங்கள். ½ அல்லது 1 டேபிள் ஸ்பூன் நல்ல தயிரை சேர்த்துக் கிளறுங்கள். அப்படியே தோய விடுங்கள்.

இனிப்புப் பண்டங்களும், புட்டிங் வகைகளும்: அல்வா, கீர், மில்க் ஷேக், குலாப் ஜாமூன், கேக் குகள், சாக்கலேட் ஃபட்ஜ், புட்டிங்குகள், கஸ்டர்டு மற்றும் நீங்கள் விரும்பும் இனிப்புக்கள் யாவையும் அமுல் மில்க் பவுடர் கொண்டு தயாரியுங்கள். அது சிக்கனமானது. திரவப்பாலாகவும் உபயோகிக்கலாம். அல்லது கேக், பான் கேக், குலாப் ஜாமூன் கலவைகளுடன் பவுடராகவும் சேர்க்கலாம். ஒன்றிரண்டு ஸ்பூன் சேர்த்தால் கறி, கூட்டுகள் கெட்டியாகவும் சுவையுடனும் திகழும்.



அமுல் மில்க் பவுடர்

வீட்டிலே பால் பண்ணை இருப்பதற்கு ஈடு ASP/AMP-6

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

